# உதயன்



23

www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 290 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

# கிழக்கு ஆட்சியை பிடிக்க அரசு பகீரதப் பிரயத்தனம்

## இறுதி அஸ்திரங்களான அமைச்சுப் பதவிகளை ஏவியேனும் மு.காவை வளைப்பதற்கு முயற்சி

கொழும்பு, செப்ரெம்பர் 11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சியை நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ள அரசு, இதற்காக முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுப்பது பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல், எதிர்வரும் அமைச்சரவை மாற்றத்தின்போது முக்கியமான பொறுப்புகளை முஸ்லிம் காங்கிரஸிடம் வழங்குவதற்கும் அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது.

கிழக்கு மாகாணசபையில் விட்டுக்கொடுப்புடன் கூட்டாட்சியாக மு.காவுடன் இணைந்து செயற்படத் தயாரென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்த ஒரு சூழலில் அரசின் இந்த யோசனை வெளியாகியுள்ளது.

**கிழக்கு மாகாணசபையின் விட்டுக்கொடுப்புடன் கூட்டாட்சியாக மு.கா வுடன் இணைந்து செயற்படத் தயாரென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்த ஒரு சூழலில் அரசின் இந்த யோசனை வெளியாகியுள்ளது.**

அரசின் இந்தத் தீர்மானம் நேற்றிரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேவேளை, கிழக்கு ஆட்சியை எவ்வாறு அமைப்பது, மாகாண அமைச்சுகளில் எவரை நியமிப்பது என்பன உட்பட்ட பல விடயங்களை மு.காவுடன் பேச உயர்மட்ட அமைச்சர் குழுவொன்று தயாராகியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

முதலமைச்சர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்ளேதான் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கை கட்சி

பார்க்க பக்கம் 4

**5** யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் உட்கட்டுமான அபிவிருத்திக்கு மட்டும் 22.23 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படவுள்ளது.

**8** கூடங்குளத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது பொலிஸ் கண்மூடித்தனமாக தாக்குதல். பலர் காயம்.

**9** ஈராக்கில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்புகளில் சிக்கி 100 பேர் உயிரிழந்தனர். 250 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

**10** கறுப்பு நிறமாக மாறுவதற்காக ஊசி மருந்து ஏற்றிய பிரிட்டனைச் சேர்ந்த வெள்ளையினப் பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

**15** திருகோணமலையில் 36,000 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளைத் திருடிய கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மு.காவின் முடிவுக்குப்பின்னரே ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப்.11

முஸ்லிம் காங்கிரஸின் முடிவு என்னவென்று தெரிந்த பின்னரே ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமைகோர உள்ளோம்-இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

எம்முடைய பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கத் தயார் என்று கடந்த ஞாயிற்றுக் கிழமையே கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் அறிவித்துவிட்டோம்.

ஆயினும் அவரை நேற்று திங்கட்கிழமை நேரில் சந்திக்கவில்லை. ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸின் நிலை என்னவென்று தெளிவான முடிவு கிடைத்த பின்னர் ஆளுநரைச் சந்திப்பதே பொருத்தமுடையதாக இருக்கும் எனவே முஸ்லிம் காங்கிரஸின் முடிவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம் - என்றார். (ந-சி)

## முகாமில் திடீர் மண்சரிவு சிக்கிய 6 படையினர் சாவு

கொழும்பு, செப்.11

தியத்தலாவை இராணுவ முகாமில் நேற்றுக் காலை மண் திட்டொன்று திடீரென இடிந்து வீழ்ந்ததில், அதில் சிக்கி 6 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இராணுவ முகாமை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தோடு நேற்றுக் காலை படையினர் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது படையினர் குழு ஒன்றின் மீது திடீரென அங்கிருந்த மண் திட்டு ஒன்று இடிந்து வீழ்ந்தது. இதனால் 8 படையினர் அதற்குள் சிக்குண்டனர். சக படையினர் மண் திட்டை அப்புறப்படுத்தி அதனுள் சிக்கியோரை மீட்க முயன்றனர். ஆயினும் இருவரை மட்டுமே உயிரோடு காப்பாற்ற முடிந்தது. 6 படையினர் மண் சரிவுக்குள் சிக்கி மூச்சுத் திணறி அதற்குள்ளேயே உயிரிழந்தனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரோடு மீட்கப்பட்ட இரு சிப்பாய்களும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

## கிழக்கில் ஐ.ம.சு.கூ. ஆட்சி மு.கா. ஆதரவு அரசுக்கே

### அடித்துக் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, செப்.11

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிச்சயம் ஆட்சியமைக்குமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியை அமைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவை வழங்குமென்றும் ஜனாதிபதி திடமான நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட ஜனாதிபதி, தமது அரசின் மீதான மக்களின் நம்பிக்கை தொடர்ந்தும் இருப்பதையே இந்தத்

பார்க்க பக்கம் 4

## மு.காவின் முடிவு இன்று

கொழும்பு, செப்.11

கிழக்கில் ஆட்சியமைக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் உருவெடுத்துள்ளதால், அக்கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவரும் நிலையில், தமது தரப்பு ஆதரவு எவருக்கு என்பது தொடர்பில் மு.கா. இன்று ஆராயவுள்ளது.

இதற்காக கட்சியின் அதியுயர்பீடம் இன்று மாலை கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் அவசரமாகக் கூடவுள்ளது. அத்துடன், அதியுயர்பீடக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கிழக்குத் தேர்தலில் வெற்றிபெற்ற தமது வேட்பாளர்களுக்கு மு.கா. அறிவித்துள்ளது.

கிழக்கில் ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்குத் தாம் எந்தத் தரப்புக்கு ஆதரவை வழங்கவேண்டும், அவ்வாறு ஆதரவை வழங்கும் பட்சத்தில் முன்வைக்கவேண்டிய நிபந்தனைகள் ஆகியன உட்பட தேர்

பார்க்க பக்கம் 4

## தமிழர் ஒருவர் முதல்வராகாவிடின் அதற்குக் கூட்டமைப்பே பொறுப்பு

### பிள்ளையான் கூறுகிறார்

மட்டக்களப்பு,செப் 11

கிழக்கு மாகாணசபையில் தமிழர் ஒருவர் முதல்வராக வரமுடியாமல் போனால், அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு நடந்த தேர்தலில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது.

ஆளும்கட்சியின் பட்டியலில் 11 வேட்பாளர்களை இந்தக் கட்சி நிறுத்தியிருந்த போதும், முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் மட்டுமே வெற்றி பெற்றுள்ளார்.

கடந்தமுறை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களாக இருந்த 6 பேர் இம்

பார்க்க பக்கம் 4

## முள்ளில் வீழ்ந்த சேலை மு.காவின் நிலை இதுவே

கொழும்பு, செப்.11

'முள்ளின் மேல் விழுந்த சேலை' என்ற நிலையில் தான் இன்று முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது. அதனைக் கவனமாகக் கையாள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

- இவ்வாறு நேற்று கருத்து வெளியிட்டார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி.

தற்போதுள்ள கிழக்கு மாகாண அரசியல் நிலைமை குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கில் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருக்கும் வேண்டுகோளை நாங்கள் மிகவும் நட்புணர்வுடனேயே நோக்குகிறோம். இந்த மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் பிரிந்திருக்கமுடியாது. கட்சி உறுப்பினர்கள், புதிய மாகாண சபை வேட்பாளர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது. எந்தவொரு முடிவும் தமிழ் சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் தான் மேற்கொள்ளப்படும்.

பார்க்க பக்கம் 4

## அமைச்சர் ரிஷாத்தை முற்கூட்டியே நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

### மன்னார் மேலதிக நீதிவான் விடுத்தார்

மன்னார், செப்.11

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனை இம்மாதம் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மன்னார் நீதிமன்ற உத்தரவின்படி கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார். பின்னர் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவரை மீண்டும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க ஏற்கனவே உத்தரவிட்டிருந் தார்.

இந்த நிலையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பான பி 408-12 எனும் இலக்க வழக்கு நேற்று திங்

பார்க்க பக்கம் 4

## புதுக்குடியிருப்பில் புலிகளின் நிலத்தடி வீடுகள் கண்டுபிடிப்பு

புதுக்குடியிருப்பு, செப்.11

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் புலிகளின் நிலத்துக்குக் கீழான வீடுகள் இரண்டு படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின் றது.

மீள்குடியமர்வுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படாத இந்தப் பகுதிகளில் படையினர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இவை கண்டறியப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதிக்குச் சென்று வந்த மக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு மந்து

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்களுக்கு அடிபணிந்து மு.காவுடன் கூட்டு வேண்டாம்

## அரசிடம் கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு,செப். 11

கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாடு இன்று பொய்யாகி விட்டது. அநாவசியமான அழுத்தங்களுக்கு அடிபணிந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அரசு கூட்டணிக்குச் செல்லக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சர்வதேசச் சூழ்ச்சிகள் மற்றும் பிரிவினைவாத சக்திகள் போன்ற பெரும் சவால்களை எதிர்கொண்டே அரசு தேர்தலைச் சந்தித்தது. இதில் பெரும் வெற்றியையும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த வெற்றியானது சர்வதேசத்துக்கான விசேட செய்தியாகக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்; இலங்கைக்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருமளவிலான சவால்கள் காணப்பட்ட நிலையிலேயே கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் பூர்வீகநிலம், தாயகம் என்றெல்லாம் பிரிவினைவாத சக்திகள் பிரசாரம் செய்தன. ஆனால் இன்று அனைத்தும் பொய்யாகிவிட்டன. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும் தொகையானோர் தேர்தலில் வாக்களித்தனர். இவர்கள் ஆளும் மற்றும் எதிர்த் தரப்புகளை ஆதரித்ததுடன் பிரிவினைவாதக் கட்சிகளையும் ஆதரித்திருந்தனர். இது ஆபத்தான விடயமாகும்.

எனவே அரசு முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் கூட்டணியமைக்கும் போது வீண் அழுத்தங்களுக்கு அடிபணியக் கூடாது. தேர்தல் வெற்றியின் ஊடாகச் சர்வதேச நாடுகளுக்கு சிறந்த செய்தியை இந்த நாட்டு மக்களும் கொடுத்துள்ளனர். பிரிவினைவாதக் கொள்கைகளுக்கு மக்கள் அனுமதி வழங்கவில்லை. அரசும் இதனைப் புரிந்து கெள்ள வேண்டும் எனக் கூறினார். (த)

# அமைச்சர் ஹெகலியவுக்கு ஆசிரியர் சங்கம் சவால்

கொழும்பு,செப். 11

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான குற்றச்சாட்டுகள் உட்பட ஐந்து விடயங்கள் தொடர்பாகப் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அரச ஊடக பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு இலங்கை ஆசிரியர்கள் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க சவால் விடுத்துள்ளார்.

சேறு பூசுவதைவிடப் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் தொடர்பாக, அதாவது தான் ஆசிரியராக இல்லை என்ற குற்றச்சாட்டைவிட வினாத்தாள் கசிந்தமை தொடர்பாக விசாரிக்கும் பொலிஸாரின் நடத்தை தொடர்பாக விசாரிப்பது பொருத்தமாக இருக்கும் என அவர் கூறினார்.

'எனது குற்றச்சாட்டுகளை, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என்னை விசாரித்த போது நான் மறுத்ததாக காட்டுவதற்கு அரச ஊடகங்கள் முயற்சிக்கின்றன. அவ்வாறான எதையும் நான் செய்யவில்லை. நான் தெரிவித்த விடயங்களில் நான் உறுதியாக உள்ளேன். எனக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்று தொடர்பாகவே நான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சென்றேன். ஏனெனில் அழைப்பாணை கடிதம் எதுவும் கிடைக்காததால் அது குறித்து எனக்குச் சந்தேகம் இருந்தது' என அவர் கூறினார்.

மஹிந்த ஜயசிங்க தற்போது ஆசிரியராக இல்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக அவர் கூறுகையில், தான் 2009 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டதாகவும் தன் மீதான குற்றச்சாட்டுகள் அரசியல் பழிவாங்கல் அடிப்படையிலானவை எனவும் தெரிவித்தார்.(த)

### புதிய கட்டடத்தில் சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி, செப்.11

சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகம் நேற்றுப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு முன்பாக இயங்கி வந்த தலைமை அலுவலகம் கொடிகாமம் ஏ-9 வீதியில் கட்டை பறித்தான் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய அலுவலகக் கட்டடம் கடந்த 17ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற எளிமையான நிகழ்வுகளுடன் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. (16-9)

# தமிழகம் செல்லும் யாத்திரிகர் எண்ணிக்கையில் வீழ்ச்சியில்லை

கொழும்பு,செப். 11

தமிழகத்துக்குப் பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கைப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள போதும் அங்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் தமிழகத்துக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கை பிரஜைகள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த அறிவித்தலை அடுத்தும் தமிழகத்துக்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை எனசென்னையிலுள்ள மகாபோதி நிலையத்தின் தேரர் ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை சுமார் ஆயிரத்து 200 இலங்கை யாத்திரிகர்கள் சென்னையிலுள்ள மகாபோதி நிலையத்துக்குச் சென்றிருந்ததாக கலவானே மகாநாம தேரர் தெரிவித்துள்ளார்.(த)

# 23 நாள் ஆஸி. பயணத்தின் பின் நாடு திரும்பிய இலங்கையர்கள்

கொழும்பு,செப் 11

ஆஸ்திரேலியா நோக்கி ட்ரோலர் படகொன்றில் பயணித்ததாகக் கூறப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள், நாடு திரும்பியுள்ளனர்.

படகில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 23 நாள்களின் பின்னர் மீண்டும் திரும்பிய நிலையில் அவர்கள் யால சரணாலயத்துக்கு அருகிலுள்ள அமதுவ பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஆஸ்திரேலியா நோக்கி ட்ரோலர் படகில் பயணித்த 32 பேர் தாயகம் திரும்பியதாகவும் இதன்போது 10 சிங்களவர்களும் 8 தமிழர்களும் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இவர்களை அழைத்து வந்ததாகக் கூறப்படும் மேலும் 7 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (த)

# ஆஸி. செல்வோரைத் தடுப்பதற்கு வடகடலில் விசேட கண்காணிப்பு

## கட்டளைத் தளபதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப். 11

வடபகுதி கடல்வழியாக சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாகவுக்கு தப்பிச் செல்வோர் தொடர்பில் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் வடபகுதி கடற்பகுதி கட்டளைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வடபகுதிக்கான கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் ஆர்.சி. விஜேய குணரத்ன அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டபூர்வமற்ற குடியேற்றவாசிகள் என்ற விதத்தில் ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயல்வோருக்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் அதற்காக பரந்த அளவிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (10-8)

### அக்குரஸ்ஸ பிரதேச சபையின் தலைவருக்கு பிணை அனுமதி

கொழும்பு,செப். 11

சிறுமிகள் இருவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கடந்த 73 நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் சூரவெவ லியனகே சுனில் மற்றும் பிரியங்க இந்துனில் விக்கிரமசிங்க ஆகியோர் பிணையில் செல்வதற்கு மாத்தறை பிரதம நீதவான் உதேஷ் ரணதுங்க நேற்று அனுமதியளித்தார்.

சூரவெவ லியனகே சுனில் ஒரு வழக்கில் 5000 ரூபா ரொக்கப் பிணையிலும் 25,000 ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார். மற்றொரு வழக்கில் இரு மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். (த)

# பட்டதாரிப் பயிலுநர்கள் தங்களது கடமைகளைப் பொறுப்பேற்கவும்

## அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப். 11

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை நாளை தங்கள் கடமைகளை பொறுப்பேற்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் 2 ஆயிரம் பேர் வரையில் பட்டதாரிப் பயிலுநர்களாக சகல பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் மாவட்ட செயலகங்கள் தோறும் நியமிக்கப்பட்டனர்.

இவர்களிலிருந்து முதலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தனக்கான வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தியது. இதனடிப்படையில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் ஒருவரும் பிரதேச செயலகம் தோறும் மூவர், மாவட்ட செயலகத்தில் ஐவரும் என்ற அடைப்படையில் தேர்வு நடைபெற்றது.

இதற்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு நாளைய தினம் அவர்களது கடமைகளை பொறுப்பேற்றுகுமாறு அரச அதிபர் ஒப்பமிட்ட கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

> பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நேர்முகத் தேர்வுகள் முதலில் நடைபெற்றதால் அவர்களுக்கான நியமனங்கள் முதலில் வழங்கப்படுகின்றன. ஏனைய அமைச்சுக்கள்,

இந்த விடயம் தொடர்பில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்ட போது, சகல அமைச்சுகள், திணைக்களங்களுக்கும் பட்டதாரி பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நேர்முகத் தேர்வுகள் முதலில் நடைபெற்றதால் அவர்களுக்கான நியமனங்கள் முதலில் வழங்கப்படுகின்றன. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களது விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் - என்றார். (16-5)

### பிலிப்பைன்ஸ் பெண்ணுக்கு பேஸ்புக்கில் அச்சுறுத்தல்

கொழும்பு,செப்.11

பேஸ்புக் ஊடாகப் பெண் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பில் இலங்கைப் பிரஜை மீது டுபாய் நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

33 வயது மின்சார தொழில்நுட்பவியலாளரான குறித்த இலங்கைப் பிரஜை பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்ணை அச்சுறுத்தியுள்ளதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையரின் காதலுக்கு மறுப்புத் தெரிவித்ததால் அவர் தனக்கு பேஸ்புக்கில் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகப் பிலிப்பைன்ஸ் பெண்ணின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை அச்சுறுத்தல் விடுத்ததை ஒப்புக் கொண்டுள்ள இலங்கையர், பிலிப்பைன்ஸ் பெண் தன்னிடம் பெற்றுக்கொண்ட ஆயிரம் திர்ஹாம் பணத்தை வழங்க மறுப்புத் தெரிவித்ததால் அவ்வாறு செய்ததாகக் கூறியுள்ளார். (த)

# கூடங்குள மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஆதரவாக யாழ்.நகரில் சுவரொட்டிகள்




தமிழகத்தின் கூடங்குளத்தில் அணுஉலை அமைவதை எதிர்த்து கடந்த இரு தினங்களாக கூடங்குளம் இடிந்த கரைப் பகுதியில் நடைபெற்றுவரும் மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். நகரில் அநேக பகுதிகளில் சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன. 'தமிழ் மாணவர் அமைப்பாலேயே' இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ''தொடரும் ஹிந்தியின் தமிழ் இன அழிப்பில் அன்று முள்ளிவாய்க்கால் இன்று கூடங்குளம்'' என்பன போன்ற வாசகங்கள் இந்த சுவரொட்டிகளில் காணப்பட்டன. (ங)

### எதிர்க்கட்சித் தலைவர்களின் பெயர் இன்று வெளியாகும்

கொழும்பு,செப். 11

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர் இன்று பெயரிடப்படுவார் என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள கட்சியின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று, கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரின் இரண்டாவது இராஜ கோபுர பணி நவம்பரில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப்.11

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் வடக்குப் புறத்தில் அமைக்கப்பட இருக்கும் நவதள இராஜ கோபுரத்துக்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்தக் கோபுரம் அமைப்பதற்கான முன்னேற்பாடாக ஆலயத்திருவிழாவின் போது நவதானியம் சமயக் கிரியைகளுடன்விதைக்கப்பட்டது.

இந்த நவதானியப் பயிர்களைப் பாதுகாக்கும் வகையில் அவற்றைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப் பட்டு வருகிறது.

இதேவேளை-ஆலயத்தின் தென் திசையில் அமைக்கப்பட்ட நவதள இராஜ கோபுரம் போன்றே இந்தக் கோபுரமும் அமைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-17)

# கட்டாக்காலி மாடுகளுக்கு தீவகத்தில் நோய்த் தாக்கம்

யாழ்ப்பாணம், செப்.11

தீவுப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளில் சில நோய்த் தாக்கத்துக்கு இலக்காகி இறக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கடும் வறட்சி, வெப்பம் ஆகியவற்றின் காரணமாக இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகள் சோர்வடைந்து நோய்த்தாக்கத்துக்கு இலக்காகி வருவதாக தீவுப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்தவாரத்தில் மண்டைதீவு, கண்ணாக்காட்டில் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இவை அந்தப் பகுதியிலே புதைக்கப்பட்டன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடும் வறட்சி காரணமாக குடிதண்ணீர் இல்லாமலும், போதிய உணவு இல்லாமலும் இந்தப்பகுதியில் உள்ள கால்நடைகள் சோர்வடைந்து பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகிறது.

கால்நடைகள் தற்போது கடல் நீரை அருந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு பொது இடங்களில் தொட்டிகளை அமைத்து குடிதண்ணீரை விநியோகிப்பதற்கு சமூக அமைப்புக்கள் முன் வர வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# யாழ்.குடாநாட்டு நிலத்தடி நீர் மாசடைவதால் நெருக்கடி

## இரணைமடு திட்டத்தை விரைந்து செயற்படுத்தக் கோரிக்கை

*யாழ்ப்பாணம், செப்.11*

***குடாநாட்டில் நிலத்தடி நீர் மாசடையும் தன்மை அதிகரித்துள்ளது. இதனால் பல்வேறுபட்ட இன்னல்களை மக்கள் சந்திக்க நேரிடுகின்றது.***

***எனவே மக்களுக்கு யாழ் -கிளிநொச்சி திட்டத்தின் கீழான குடிதண்ணீரை விரைந்து வழங்க துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.***

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் மாவட்ட பொறியியலாளர் எஸ்.செல்வக்குமார் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

குடாநாட்டு நிலத்தடி நீரின் மாசு தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில்:-

சுன்னாகத்தில் உள்ள நான்கு நன்னீர் நிலைகளில் இருந்து நீண்ட காலமாகக் குடாநாட்டின் பல்வேறு பகுதி மக்களுக்கும் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் சுன்னாகத்தில் மின்சார சபையின் கழிவு ஓயில் நீரில் கலந்துள்ளதால் சுன்னாகத்தின் நீர் நிலைகள் மாசுபட்டுள்ளன.

சுன்னாகத்தில் கழிவு எண்ணெயால் பாதிக்கப்பட்ட மண்முழுவதும் அகற்றப்பட வேண்டும். இதுவும் எதிர்வரும் பெரும்போக மழைக்கு முன்னர் செய்யப் பட வேண்டும்.

சுன்னாகத்தில் ஏனைய நீர் நிலைகளிலும் எண்ணெய் கலப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

எனவே விரைந்து இந்தப் பணியை மேற் கொள்ள சுன்னாகம் மின்சாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்று அவர் மேலும் கூறினார். (ம-41)

# குறிகாட்டுவான்துறை வரை பண்ணை வீதி அகலிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

பண்ணை வீதியை குறிகாட்டுவான் இறங்குதுறை வரைக்கும் அகலித்துப் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தற்போது பண்ணைப் பாலத்தில் இருந்து குறுகிய கிலோ மீற்றர் தூரம் வரைக்கான வீதி அகலிக்கப் பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து குறிகாட்டுவான் துறைமுகம் வரைக்கும் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீவுப்பகுதிக்கான பிரதான வீதியாக உள்ள இந்தச் பண்ணை குறிகாட்டுவான் வீதியை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் கூறினார். (த-17)

# 3 ஆயிரம் புசல் விதை நெல் பெரும் போகத்துக்கென ஒதுக்கீடு



யாழ்ப்பாணம், செப்.11

இந்த ஆண்டின் பெரும் போக நெற்செய்கைக்கென யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவு சங்கத்தினால் 3 ஆயிரம் புசல் விதை நெல் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விதை நெல் மூடைகள் மகாஇல்லுப் பல்லம விதை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இங்கே எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த விதை நெல் மூடைகள் அனைத்தும் முத்திரையிடப்பட்டுச் 'சீல்' செய்யப்பட்டுச் சங்கத்தின் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த விதை நெல் ஏற்கனவே குடாநாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த விவசாயிகளிடம் இருந்து சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

இந்த கால போக நெற் செய்கைக்கு விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (த-17)




சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த மூன்று நாள்களாக இடம் பெற்ற நடமாடும் சேவையில் பிறப்பு சான்றிதழ் இல்லாத ஜே32 உயரப்புலம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பெண்ணொருவரை வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் விசாரணை செய்து பிறப்பு சான்றிதழில் கையொப்பம் பெற்ற பின் சான்றிதழை சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு அந்தப் பிரிவுக்கு பொறுப்பான பட்டதாரி பயிலுநர் எஸ்.பிரதீபன் ஊடாக வழங்கினார். (ம-100)

A/L இன் பின்னர்...

உங்கள் பொறியியலாளர் ஆகும் கனவை நனவாக்கும்!

City & Guilds
Graduate Diploma in Engineering
(Accepted by IET, IMechE, ice)

பிரித்தானிய Engineering Council லினால் அங்கத்துவம் பெற்ற IET, IMechE, ice போன்ற பொறியியலாளர் தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் சான்றிதழ்.




Civil Engineering
Electronics Engineering
Quantity Surveying
Motor Vehicle Engineering
Electrical Engineering
Mechanical Engineering
Refrigeration & A/C

2011 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கும் போது City & Guilds பற்றி தெரிந்து கொண்டேன். A/L பரீட்சை எடுத்த பின்னர் Result வரும் மட்டும் காத்திருக்காமல் City & Guilds Civil Engineering Diploma கற்கைநெறிக்கு சேர்ந்து, கடந்த June மாதம் Diploma பட்டம் பெற்று இன்று இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டு Advanced Diploma பாடநெறியை தொடர்கின்றேன்.

அன்று நான் எடுத்த முடிவு சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் ஏனெனில் என்னுடன் உயர் கல்வி கற்ற பலர் இன்றும் தமது எதிர்காலத்தை நினைத்து காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எனது எதிர்கால இலட்சியம் City & Guilds Graduate Diploma முடித்து பிரித்தானிய Engineering Council னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியலாளராக வருவதுதான்.

விஜுஜன்
வெள்ளவத்தை.

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




மேலதிக விபரங்களைப் பெறவும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

இன்றே அழையுங்கள்.
0771 067 394 or 0214 66 66 99

அல்லது SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை
Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds Approved Centre

SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY

Nugegoda Campus
No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda.
011 4 696 696
scot@skillsinternational.lk

Kurunegala Campus
No. 252, Puttalam Rd, Kurunegala.
037 3 616 868
kurunegala@skillsinternational.lk

Kandy Campus
No. 511, Peradeniya Road, Kandy.
081 4 951 522
kandy@skillsinternational.lk

Jaffna Campus
No. 207, Navalar Road, Jaffna.
021 4 666 699
jaffna@skillsinternational.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் பதவியை மு.காவுக்கு வழங்குங்கள்

## மனோ கணேசன் ஆலோசனை

கொழும்பு, செப்.11

கிழக்கு மாகாணத்தில் எதிரணிக்குப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. இதை அடிப்படையாக கொண்டு இந்த ஆட்சியை வீழ்த்தும் பயணம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்குப் பெருந்தன்மையுடன் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும்.

இது கடந்த கால வரலாற்றுத் தவறுகளை மாற்றியமைத்து தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதுடன், இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் பயணத்தையும் ஆரம்பிக்க வேண்டும். இது தமிழ் பேசும் மக்களதும், நல்லெண்ணம் கொண்ட சிங்கள மக்களினதும் விருப்பம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில், மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை நாம் சப்ரகமுவ தேர்தலில் எடுத்துக் காட்டியுள்ளோம். சப்ரகமுவவில் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் சிறுபான்மையாக வாழ்கிறார்கள். அங்கே எங்கள் ஒரே நோக்கம் தமிழ் பிரதிநிதித்துவம்தான்.

இந்தத் தேர்தலில் நாம் எடுத்த முடிவு தீர்க்கதரிசனமான சரியான முடிவு என்பதை இன்று காலம் தெட்டத்தெளிவாக எடுத்து காட்டிவிட்டது. இன்று சப்ரகமுவ உட்பட நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எமக்கு பாராட்டுகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

சப்ரகமுவவிலும், வடமத்திய மாகாணத்திலும் இந்த அரசு அசுர பலத்துடன் ஆட்சியமைத்துள்ளது. எனவே அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பதைவிட எம்மால் எதையும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால், கிழக்கில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும், ஐக்கிய தேசிய கட்சியும் பெரும்பான்மை ஆசனங்களை பெற்றுள்ளன. இது வரலாறு அளித்துள்ள சந்தர்ப்பம் ஆகும்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். எனவே பெரும்பான்மை தமிழ், முஸ்லிம் மக்களை பிரதானமாக பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், சுதந்திரமாக தமது ஆட்சியை அமைக்க வேண்டும். அது நியாயமானது. அதன் மூலமாகவே, எமது மக்களின் தேசிய அபிலாசைகளை உலகறியச் செய்யலாம். குறிப்பாக முஸ்லிம் தேசியத்தை உலக அரங்குக்கு கொண்டு செல்வதற்கு இதுவே அரசியல்ரீதியான வழிமுறையாகும், அதற்கான சிறப்புமிக்க சந்தர்ப்பத்தை வரலாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கியுள்ளது.

இது நடைபெறாவிட்டால், முஸ்லிம் எழுச்சி பேரினவாதப் பெருங்கடலில் கலந்து காணாமல் போய்விடும். வரலாறு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமா? அதற்கும் வரலாறுதான் பதில் சொல்ல வேண்டும்-என்றுள்ளது. (த)

---

# படகுமூலம் ஆஸி.செல்ல முயன்ற வடமராட்சி வாசிகளுக்குப் பிணை

வடமராட்சி, செப்.11

வடமராட்சிக் கிழக்கு கடற்பகுதியிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றவர்களில் நான்கு சந்தேக நபர்கள் தவிர ஏனைய அனைவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றினால் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை இரவு வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இருந்து 42 ஆண்கள், 5 பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட 52பேர் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட போது கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் மறுநாள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களில் இரு தாய்மார்களும் அவர்களின் மூன்று குழந்தைகளும் அன்றையதினமே பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. ஏனையோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களில் முதலாம் சந்தேக நபர் தொடக்கம் 4 ஆவது சந்தேக நபர் வரை நான்கு சந்தேக நபர்களையும் விளக்க மறியலில் வைக்குமாறும், ஏனைய 43 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

(16 -8)

---

## முள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸானது, அர்த்தமில்லாத 'ரப்பர் ஸ்டாம்ப்' முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்ட கட்சியல்ல. 13 ஆவது திருத்தத்தை அமுலாக்கக்கூடிய, தமிழ் பேசும் மக்களின் தனித்துவங்களை உறுதிப்படுத்தக்கூடிய பலம்மிக்க ஒரு முஸ்லிம் முதலமைச்சர் தேவை என்பது காலத்தின் கட்டாயம். முஸ்லிம் காங்கிரஸ் அதனை வெகுவாக கவனத்திற் கொண்டுள்ளது. - என்றும் குறிப்பிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹஸனலி.

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்தபோதும் கிழக்கு மாகாணசபை விடயத்தில் அதில் மாற்றங்களைச் செய்ய அரசுத் தலைமை உத்தேசித்திருப்பதாக மூத்த அமைச்சர் ஒருவர் நேற்று இரவு தெரிவித்தார்.

இது விடயத்தில் மு.கா. தலைமைத்துவம் கட்சி உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி முடிவுகளை எடுக்கும்வரை காத்திருப்பதாகவும் அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# திருநெல்வேலி வாள்வெட்டு சம்பவம் இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், செப்.11

நேற்றுமுன்தினம் திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஓட்டோவில் வந்தவர்கள் திருநெல்வேலி பகுதியில் ஒருவரை வெட்டிக் கொலை செய்ததுடன் மற்றும் ஒருவர் வெட்டுக் காயத்துக்கு உள்ளான நிலையில் யாழ். போனதா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் கோப்பாய் பொலிஸார் இதுவரை எவரையும் கைதுசெய்யவில்லை எனவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

எனினும் நேற்றுமாலை சந்தேகநபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்த போதும் அப்படி எவரையும் தாம் கைது செய்யவில்லை என கோப்பாய் பொலிஸார் மறுத்துள்ளனர். (10)

# அரசியல் கலப்பற்ற பணிப்பாளர் நியமனமே எமக்கு வேண்டும்

## இல்லையேல் பணிப்புறக்கணிப்பில் குதிப்போம்

அரசியல் சார்பில்லாத பொருத்தமான மாகாண சுகாதார பணிப்பாளர்கள் நியமிக்கப்படா விட்டால் சப்ரகமுவ, ஊவா, மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள சகல வைத்தியசாலைகளும் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட தயாராக இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 80 வரையிலான வைத்தியசாலைகள் இந்த கோரிக்கையை நிறைவேற்றாதவிடத்து புதன்கிழமை முதல் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளன. மத்திய, வட மத்திய மாகாண வைத்தியசாலைகள் பின்னர் இதில் இணைந்துகொள்ளும்'' என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய தெரிவித்தார்.

நிர்வாகத் திறனற்றவர்கள் மாகாண சுகாதார பணிப்பாளர்களாக கடமையாற்றுவதால் மருந்து மற்றும் சத்திர சிகிச்சை கருவிகள் தட்டுப்பாடாக இருப்பதாகவும் டெங்கு தடுப்பு மற்றும் பிரசவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மருத்துவர்கள் பலரின் பதவியுயர்வுகள் தடைப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாண சுகாதார பணிப்பாளர் சுமார் 18 வருடங்களாக இருந்து வருகின்றார். மத்திய மாகாணத்தில் இரண்டு மாகாண சுகாதார பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வட மத்திய மாகாணத்தில் சுகாதாரப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

சுகாதார அமைச்சும் சட்டமா அதிபரும் நிலைமை மோசமடைய முன்னர் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ங)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை தோல்வியடைந்துள்ளனர்.

எனினும் முன்னாள் முதல்வர் சந்திரகாந்தனே மட்டக்களப்பு மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களில் கூடுதல் விருப்புவாக்குகளைப் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் தேர்தல் முடிவு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன், கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரே முதல்வராக வரவேண்டும். அவர் முஸ்லிமா அல்லது தமிழரா என்ற பிரச்சினை ஏதும் இல்லை. ஆனால் கிழக்கில் தமிழர் ஒருவர் முதல்வராக வரமுடியாமல் போனால், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும்-என்று கூறியுள்ளார்.(த)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்கிழமை விசேட நகர்தல் பத்திரம் மூலம் மன்னார் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ் பெல்டானோ நேற்று மன்னார் நீதிமன்றில் விசேட நகர்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து குறித்த வழக்கை அழைக்குமாறு நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், பாதிக்கப்பட்டோர் தரப்பில் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி மகேந்திரா குமார சில்வா அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பாக இரகசியப் பொலிஸார் மேற்கொண்டு வரும் விசாரணைகளின் அறிக்கை இது வரை மன்னார் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், குறித்த வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபர் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அது தொடர்பான அறிக்கையும் மன்னார் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் நீதிமன்றில் தெரிவித்தார்.

இவ்விதம் அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றத்தினால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி அழைக்கப்படவிருந்த வழக்கை இம்மாதம் 24 ஆம் திகதி முன்கூட்டியே அழைக்குமாறும் அவர் கோரினார்.

குறித்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க அமைச்சரை இம்மாதம் 24 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறும் இது தொடர்பில் அமைச்சருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவித்தல் வழங்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

(த-12)

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் அரசரட்ணம் வித்தியாலயம் அமைந்துள்ள பகுதியிலும் அங்கிருந்து 200 மீற்றர் தொலைவிலும் இந்த இரண்டு நிலத்தடி வீடுகளும் அமைந்துள்ளன என்று கூறப்பட்டது.

இதனைப் பார்வையிட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் கூறப்பட்டது.

(த-400)

## மு.காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் விவகாரம் தொடர்பில் மேலும் பல விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்படும் எனத் தெரியவருகின்றது.

குறிப்பாக, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இந்தத் தடவை வெற்றிபெற்றுள்ள வேட்பாளர்கள் எந்தத் தரப்புக்கு ஆதரவை வழங்க வேண்டும் என முன்வைக்கவுள்ள கருத்துகள் தொடர்பிலும் அதியுயர் பீடக் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பங்காளியாக இருந்துகொண்டு கிழக்கு மாகாணத்தில் மற்றுமொரு தரப்புக்கு ஆதரவை வழங்குவதில் உள்ள சிக்கல் நிலைமைகள் குறித்தும், கட்சியின் எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்தும் உயர்பீடக் கூட்டத்தில் கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெறவுள்ளன.

நடைபெற்றுமுடிந்த மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தலில் சப்ரகமுவ, வடமத்திய ஆகிய மாகாணங்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் சக்தி இருந்தாலும் கிழக்கில் அதற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்க வில்லை.

அதேவேளை, கிழக்கில் எதிர்க் கட்சிகள் ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப்பெரும்பான்மையைக் கொண்டிருப்பதால் அந்த மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு அரசுக்கு சிக்கல் நிலைமை உள்ளது. குறிப்பாக, மு.கா. எடுக்கும் முடிவிலேயே கிழக்கு மாகாணத்தில் எந்தத் தரப்பு ஆட்சிபீடம் ஏறும் என்பது தங்கியுள்ளது.

இதன் காரணமாகத்தான் அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மு.காவின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்குக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இரண்டு போனஸ் ஆசனங்களுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கில் 14 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், ஐ.தே.க. 4 ஆசனங்களையும், தேசிய சுதந்திர முன்னணி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நிபந்தனைகள் எதுவுமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவை வழங்குவதற்கு ஐ.தே.க. முன்வந்துள்ளமை தெரிந்ததே. எனவே, மு.காவும் ஆதரவு வழங்கினால் கிழக்கு மாகாணத்தில் கூட்டாட்சி அமைப்பதற்கான சக்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறும்.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முடிவுகள் காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீமும் இங்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பும், பின்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை மட்டந்தட்டி சில சக்திகள் செயற்பட்டதாக இங்கு விசனம் வெளியிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், மு.கா. இனவாதத்தைத் தூண்டுவதாகவும், மதவாதத்தைத் தூண்டுவதாகவும் மேற்கொள்ளப்பட்ட விஷமப் பிரசாரங்களுக்கு தேர்தலில் மக்கள் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைக்க யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து கட்சியில் அனைத்து மட்டத்துடனும் பேச்சு நடத்தி பின்னர் இறுதி முடிவைத் தெரிவிக்கவிருப்பதாகவும் ரவூப் ஹக்கீம் இங்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் உச்சிமாநாட்டின் அமர்வுகளில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென ஜனாதிபதி இந்தக் கூட்டத்தின் போது கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழங்காவில் வெள்ளாங்குளம் கிராமத்தில் அமைக் கப்பட்டு வந்த நீர்த்தாங்கியின் வேலைகள் பூர்த்தியாகிய நிலையில் குடிதண்ணீரை வழங்குவதற்குத் தயாராகக் காணப்படுகின்றது. (435)

# சொந்த மண்ணில் மீளக் குடியமரும் வரை முள்ளிக்குளத்தவரின் காத்திருப்பு தொடரும்

மன்னார்,செப்.11

**எமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியமர்வதற்கு நாம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்வோம். இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளனர் தமது சொந்தக் கிராமமான முள்ளிக்குளத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள மலங்காடு என்னும் காட்டுப் பிரதேசத்தினுள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து வரும் முள்ளிக்குளம் கிராம மக்கள்.**

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இடம் பெயர்ந்தனர். போர் ஓய்ந்த பின்னர் இவர்கள் தமது கிராமத்தில் மீள்குடியமரச் சென்றபோது அங்கு நிலை கொண்டிருக்கும் கடற்படையினர் அனுமதிக்கவில்லை. இந்தக் கிராமத்தைக் கடற்படையினர் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் இங்குள்ள மக்களின் வீடுகளைப் புனரமைத்துத் தென்பகுதியிலுள்ள தமது குடும்பங்களை அழைத்து வந்து தங்கவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு 40 இற்கும் மேற்பட்ட கடற்படையினரின் குடும்பங்கள் இங்கு தங்கியுள்ளன என்றும் இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியமரும் எண்ணத்துடன் நீண்ட நாள் போராட்டத்தின் மத்தியில் முள்ளிக்குளத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள மலங்காடு என்னும் காட்டுப் பிரதேசத்தினுள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 145 குடும்பங்கள் இவ்வாறு இங்கு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான குடிதண்ணீரை இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர். குளிப்பது மற்றும் வேறு தேவைகளுக்கு அருகிலுள்ள குளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அந்தக் குளமும் வறட்சி காரணமாக வற்றிய நிலையில் சிறிதளவு நீருடன் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் தண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் தொழில் வாய்ப்புக்கள் ஏதுமின்றி இருப்பதால் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களும் இவர்களை வாட்டுவதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் காட்டு யானைகளின் அட்டகாசமும் தம்மைப் பயமுறுத்துவதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இனிவரும் மழை காலத்தில் தாம் தற்போது வசிக்கும் குடிசைகள் தாக்குப் பிடிக்குமா எனவும் இவர்கள் ஐயம் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்டாலும் தாம் தமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியமர்வதில் எந்தவித மாற்றமும் இல்லையெனவும் இங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இவர்களின் நிலை தொடர்பாக முசலிப் பிரதேச செயலாளரிடம் வினவிய போது; கடந்த 24 ஆம் திகதி இங்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் வந்த குழுவினர் நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

வன திணைக்களத்தினரும் இந்த மக்கள் தற்போது வசிக்கும் இடத்தில் தொடர்ந்து வசிப்பதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவர்கள் இதற்கு உடன்படும் பட்சத்திலேயே மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (க-12)

## ஆசிரியர் பற்றாக்குறையால் கிராஞ்சி பாடசாலைக்கு பெரும் பின்னடைவு

பூநகரி,செப்.11

பூநகரிப் பிரதேசத்திலுள்ள கிராஞ்சியில் அமைந்துள்ள பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் தமது பிள்ளைகளின் கல்வியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் தரம் ஒன்றில் இருந்து 9 வரையான வகுப்புக்கள் உள்ளன. சுமார் 265 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆனால் அதிபர் உட்பட 7 ஆசிரியர்களே பணியில் உள்ளனர்.

இவர்களிலும் விஞ்ஞானம், புவியியல், சமயம், வரலாறு, சுகாதாரம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை. மேலும் ஆரம்ப வகுப்புக்களில் தரம் 5 தவிர ஏனைய வகுப்புக்களுக்கு நிரந்தர ஆசிரியர்கள்இல்லாதநிலையே காணப்படுகின்றது.

இதனால் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு கற்பிக்கும் மூன்று ஆசிரியர்கள் வெளியிடங்களிலிருந்து வருகின்றனர். ஆனால் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் உட்கட்டுமான வசதிகள் ஓரளவு உள்ளபோதிலும் ஆசிரியர் பற்றாக்குறையே பெரும் பிரச்சினையாக உள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சிக் கல்விப் பணிமனைக்கும் தாம் நேரில் சென்று மனுக் கையளித்ததோடு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதாகப் பெற்றோர் மேலும் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அதிகாரிகள் தொடக்கம் அரசியல்வாதிகள் வரை உதவி புரிய வேண்டுமெனவும் இவர்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர். (க)

## வங்கிக் கணக்குகள்

அக்கராயன்,செப்.11

துணுக்காயில் சமுர்த்திப் பயனாளிகளுக்கான வங்கிக் கணக்குத் திறக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர், துணுக்காய் பிரதேச செயலர், துணுக்காய் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1146 பேர் சமுர்த்திப் பயனாளிகளாகத் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 862 பேர் சமுர்த்திப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## முழுங்காவில் வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் சிறப்பான உற்சவம்

நெடுங்கேணி,செப்.11

முழங்காவில் வெங்கடேசப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் சிறப்புடன் நிறைவடைந்துள்ளன.

கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலய உற்சவ நிகழ்வுகள் கடந்த 7 ஆம் திகதி நிறைவு பெற்றது. இறுதி நாளன்று இடம்பெற்ற உறியடி உற்சவம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

கண்ணன் சிறு வயதில் வெண்ணெய் திருடிய காட்சியை விபரித்து உறியடி உற்சவமென அழைக்கப்படுகின்றது. ஆண்டு தோறும் சிறப்பாக இவ்வாலயத்தில் இடம்பெறும் இந்நிகழ்வானது இம்முறை வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த உறியடி உற்சவகாலத்துக்கு முன்னர் வசந்த பூசை இடம்பெற்று சுவாமி ஊர்வலமாக வந்து வெண்ணெய் உண்ணும் காட்சியும் இடம்பெற்றது.

பக்தர்கள் தீக்காவடி, தூக்குக் காவடி, பாற்செம்பு ஆகியவற்றை ஏந்தியும், அங்கப் பிரதட்சணை செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

மேலும் அன்னதான நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த ஆலயத்தின் பிரதம குருவாகிய சிவஸ்ரீ சி.சுதர்சன் குருக்கள் பூசைகளை நிறைவேற்றி வைத்தார்.

2003 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் அமைந்துள்ள நாகபாம்பு உருவச்சிலைக்கு அருகில் நாகபாம்பொன்று பூசைகள் நிறைவு பெறும் வரை படம் விரித்து மக்களுக்குக் காட்சி கொடுத்தமை ஓர் அற்புதமான தெய்வீகக் காட்சியாக இன்றுவரை மக்களால் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-435)

## குடியிருக்க இடமின்றி ஆனந்தபுரம் மக்கள் அவதி

வவுனியா,செப்.11

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் குடியிருக்க இடமின்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

**ஞாயிற்றுக்கிழமை ஆனந்தபுரம் பாடசாலை வளாகத்தினுள் இறக்கி விடப்பட்டுள்ளனர்.**

இறுதிக்கட்டப் போரின் போது ஆனந்தபுரத்தில் 150 இற்கு மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் முற்றாக அழிவடைந்தன.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் இருந்த ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையும் முற்றாக அழிவடைந்த நிலையில் உள்ளது.

இந்த நிலையில் வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் இருந்து கடந்த சனிக்கிழமை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர மக்கள் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் இரணைப்பாலை றோ.க.த.க.பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை ஆனந்தபுரம் பாடசாலை அமைந்திருந்த வளாகத்தினுள் கொண்டுவந்து இறக்கி விடப்பட்டுள்ளனர்.

தற்காலிக குடியிருப்பு வசதிகள் எவையும் இவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையில் தங்கியிருக்க இடமின்றிப் பெரும் சிரமங்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதி பெரும் பற்றைக் காடாக உள்ள நிலையில் தமது காணிகளைக் கண்டறிய முடியாத நிலையிலும் அவர்கள் உள்ளனர்.

இதேவேளை இந்தப் பகுதியில் இருந்த இந்து, கிறிஸ்தவ ஆலயங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ள நிலையில் மக்கள் செய்வதறியாது தவித்து நிற்பதையும் காண முடிகின்றது.

(க-400)

## பிரம்புத் தொழிலால் வருமானம் குறைவு

### மக்கள் கவலை

மட்டக்களப்பு,செப்.11

மட்டக்களப்பு, மாவடிவேம்பு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் பிரம்புத் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்து வரும் மக்கள், பிரம்புத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.



'ஏனைய சிறுகைத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் நாம் பல வருடங்களாக குடிசை வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றோம். எமது வாழ்வாதாரத் தொழிலாகப் பிரம்புத் தொழிலை மேற்கொண்டு வருகிறோம்.

பிரம்பின் மூலம் கூடைகள் மற்றும் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்த போதும், வருமானம் போதிய நிலையில் கிடைக்கப்பெறுவதில்லை என்றும் அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது தொழிலுக்கு ஊக்குவிப்புக்கள் மற்றும் சந்தை வாய்ப்பு, கடன் வசதிகள் என்பன இருக்குமாக இருந்தால் இந்தத் தொழிலால் முன்னேற்றமடையலாம் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ச-31)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திரு. எஸ். ஜோர்ஜ் டொணறி
மீன்பிடி வியாபாரி
திவி அருண நலன்பெறுனர் - யாழ்ப்பாணம்

# வியாபாரத்தை முன்னேற்ற உரிய நேரத்தில் NDB இடமிருந்து கடன் கிடைத்ததால், வியாபாரம் சிறப்பாக முன்னேற்றமடைந்தது



யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தொழிலைச் செய்யும் திரு. எஸ். ஜோர்ஜ் டொணறி, தனது தொழிலை ஆரம்பித்தது 1992 இல். யுத்தத்தினால் தனது மீன்பிடி உபகரணங்கள் எல்லாம் அழிந்து விட்ட நிலையிலும் தனது நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்தும் தனது வியாபாரத்தை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அதற்குரிய நிதி வசதி அவரிடத்தில் இல்லாதிருந்தது. அவ்வாறான ஒரு நேரத்தில் NDB அவருக்குக் கைகொடுத்தது. அதுமட்டுமல்ல சலுகை ரீதியிலான வட்டி வீதம் மற்றும் வியாபாரம் தொடர்பான ஆலோசனைகளையும் அவருக்கு வழங்கியது. இப்பொழுது தனக்கென சொந்தமாக படகு மற்றும் ஏனைய உபகரணங்கள் என எல்லாவற்றையும் கொண்டவராக, தனது வியாபாரத்தில் நன்கு முன்னேற்றமடைந்த நிலையில் இன்று அவர் காணப்படுகின்றார். "எனது தொழிலைத் தொடர்ந்து செய்து கொண்டு போவதற்கான நிதியை NDB உரிய நேரத்தில் வழங்கியது" என திரு. எஸ். ஜோர்ஜ் டொணறி மிகவும் நன்றியுணர்வோடு கூறுகிறார்.



NDB உடன் இணைந்து நீங்களும் உங்கள் வியாபாரத்தை கட்டியெழுப்ப இன்றே அழையுங்கள்:

| | |
|---|---|
| பொனி.ஃபெஸ் | 0772 385668 |
| காண்டீபன் | 0773 522527 |
| சற்குணநாதன் | 0773 707529 |
| உடனடி அழைப்பு | 0112 448 888 |

திடமான நோக்கத்தோடு உழைக்கும் ஆயிரக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில் வியாபாரிகளுக்கு மூன்று தசாப்த காலமாக உதவிய NDB, உங்கள் வியாபாரத்திற்கும் கைகொடுக்கும்.

**AA (lka) Fitch Rating**

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எதிர்காலச் சந்ததியினரின் நலன் நாடிச் செயற்படுவது எப்போது?

போர்க்காலத்தில், அது தீவிரமாகத் தாண்டவம் ஆடிய பேரினவாதம், தமிழ்ப் பிரதேசங்களில் மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை, சேவைகளைப் பெறுவதில் பல கஷ்டங்களையும் இல்லாமைகளையும் அனுபவிக்க வைத்தது. உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் உட்பட அன்றாடச் சீவியத்துக்கு, பொருளில்லார் மட்டுமன்றி வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தவர்கள் கூட ( " கியூ") வரிசை கட்டி நிற்க நேர்ந்தது.

அத்தியாவசியத் தேவைகளை ஏதோ ஒரு வகையில், கால்வாசி அரைவாசிக்குப் பூர்த்திசெய்ய முடிந்த காலம் கரைந்தோட, எப்போது, எங்கே, எக்கணத்தில் எறிகணையோ, விமானக் குண்டோ வந்து விழுந்து உயிர்பறிக்கும் என்று தெரியாத பதற்றமுற்ற நிலையில், இரவில் மட்டுமன்றி, பகலிலும் பதுங்கு குழிகளில் ஒதுங்கியிருந்த காலத்தையும் மறந்து விட முடியாது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் காருண்யத்தால், அந்த நிறுவனம் வழங்கிய வழித்துணையுடன் கொண்டுவரப் பட்ட உணவுப் பொருள்கள், எரிபொருள்களை மைல் கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்து நின்று வாங்கிச் சென்றாலும், நிம்மதியாகச் சமைத்து உண்ணமுடியாத ஒரு காலமும் இருந்தது.

ஆனால் அப்போதெல்லாம், எங்கள் சமூகத்துக்குரிய பல்வகைசார் தனித்துவங்களும், ஒழுக்கவியல் மற்றும் வாழ்வியல் நெறிமுறை சார் கோட்பாடுகளும் வழுவின்றி குடும்ப வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் சொச்சமின்றி விரவிக் காணப்பட்டன.

ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது என்று கருதுமளவுக்கு மிகமிகச் சீர்கெட்டு வருகிறது. கல்வியில் தமது பிள்ளைகள் முன்னிலைமை வகிக்கவேண்டும் என்ற இலக்குடன் செயற்பட்ட பெற்றோர், ஒழுக்க நிலையிலும் அவர்கள் அவ்வாறே இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்கள். அதில் நலிவோ, தொய்வோ ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகக் கரிசனை காட்டினார்கள். அது குறைவின்றி ஈட்டப்பட்டது.

ஆனால் இப்போது ஏட்டுக் கல்வியை மையப்படுத்தி, அதனை மட்டுமே இலக்கு வைக்கும் கல்வி முறையே மேல் எழுந்து நிற்கிறது. அதன் விளைவாக ஒழுக்கம் ரூபாவுக்கு எவ்வளவு என்று கேட்கும் சமூக நிலையே எழுந்து உயர்ந்து நிற்கிறது!

ஒழுக்கக் கட்டுப்பாடு வெறும் தூசி என்று நினைத்து மிதிக்கும் அளவுக்கு கல்வி முறையும், சமூகம் சார் பின்புலங்களும் தலைகீழாக மாறிவிட்டதால், இளைஞர் யுவதிகளின் மனப் போக்குகளும் செயற்பாடுகளும் கீழ் நோக்கி இழிநிலையைத் தேடிச் செல்கின்றன. முன்னர் நிலவிய கட்டுப்பாடுகள் கழற்றப் பட்டு, தாராளத்தன்மை நாடல் என்று புனுகுபூசப்பட்டு பருவம் முந்திய பாலியல் நடவடிக்கைகள் மலிந்து வருக்கின்றன.

வயதுக்கு வந்ததும், கல்விப் பெறுபேறுகளை வைத்து தொழில்களை ப் பெற்றுக் கொள்ளும், பயிலும் வாய்ப்புகள், அருகிக் கருகிவிட்டதும், தொழில் தேடி அலையும் போது உண்டாகும் நட்பு, பல சந்தர்ப்பங்களில், இளைஞர் யுவதிகளிடையே தவறான பாலியல் வன்முறைகளுக்கு வழிகாட்டுவனவாகவும் அமைந்து விடுகின்றன.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களாக தொலைக் காட்சி, கணினிப் பயன்பாடுகள் பல்கிப்பெருகி மலிந்து கிடப்பதால், இளைஞர் யுவதிகள், பருவத்தில் தவிர்க்க வேண்டிய விரசமான, காமக் காட்சிகளை, தடுப்பார் இன்றி தாராளமாகப் பார்வையிடும் சூழலும்-

சினிமாவில் இப்போது வன்முறைச் சம்பவக் காட்சிகள் நூற்றுக்குத் தொண்ணூறாக மலிந்துவிட்டதால், இளம் சமுதாயத்தினர் தாமும் அவை வழி கால்பதித்துக் காட்டுவதனை, குற்றமற்ற நடத்தை என்று கருதுமளவுக்கு தங்களை மாற்றிக் கொண்டுள்ளார்கள்!

முதியோர்-இளவயசுப் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களை, வாரத்துக்கு எத்தனை என்று பொலிஸார் கணக்கெடுத்துக் கூறுமளவுக்கு நாளாந்தம் பெருகும் அளவுக்கு தமிழ்ச் சமூகம் நாற்றமெடுக்கிறது!

மது மற்றும் போதைப் பொருள்களின் பாவனை எமது இளைஞர்கள் மத்தியில் கணக்கிடமுடியாத மட்டத்துக்கு உயர்ந்து செல்வதால், வன்முறைகள் வளர்ந்து பெருகுவதை விடக் குறைந்து போவதற்கான சமிக்ஞை எதுவும் தூரத்திலும் தென்படவில்லை!

போர் நடைபெற்ற பிரதேசங்களில் வசித்தவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் இயல்பாகவே வீட்டு வன்முறைகள் உட்பட வன்முறைகள் தலையெடுக்கும் என்று உளநல மருத்துவர்கள் அடிக்கடி அபாயச் சங்கு ஊதிவருகிறார்கள்.

உளரீதியான தாக்கங்களைச் சுமந்துகொண்டு, பகட்டான வாழ்க்கை நடத்துவதாலும் வன்முறைகள் அதிகரிக்கும் என்று உளவளத்துறை சார் நிபுணர்கள் கருத்து தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலன்கள் வெவ்வேறு போக்குடன் செயற்படும் போது, தேவையற்ற, தவறான செயல்களில் ஈடுபடும் மனிதர்களாக எவரும் மாற இடமுண்டு என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இளம்குடும்பஸ்தர் ஒருவர் சினிமாப் பட ப்பாணியில் , பலர் முன்னிலையில், துரத்தித் துரத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம், எமது இளம் சமுதாயம் எத்துணையளவுக்கு கட்டற்று, வேண்டிய கட்டுப்பாடு இன்றி, போதைவஸ்துப் பாவனை உட்பட ஏனைய பல சட்டம், ஒழுங்குக்கு முரணான செயற்பாடுகளால் அவற்றின் செல்வாக்கால் சமுதாயத்தை பல வகைகளாலும் நாசமாக்கப் போகிறது என்பதை மிகத்துலக்கமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இத்தகைய வன்முறைக் கலாசாரம் பரந்து பரவாமல் தடுப்பது சமூகப் பற்றாளர்களின் பணி என்று தெரிவித்துவிட்டு, ஏனையோர் கைகட்டிப் பார்த்து நிற்கும் வழமையான போக்கு மாற்றப்படுவது எப்போது? எங்கள் எதிர்காலச் சந்ததியினரின் நலன் நாடி உழைப்பது இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவரினதும் பொறுப்பு அல்லவா?

# யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் உட்கட்டுமான அபிவிருத்திக்கு

### 22.23 மில்லியன்.அமெ.டொலர் நிதி செலவிடப்படும்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் உட்கட்டுமான அபிவிருத்திக்கு மட்டும் 22.23 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படவுள்ளது.

அத்துடன் வேதனம், மேற்பார்வை மற்றும் செயற்பாடு, வரி செலவுகளுக்காக 3.16 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப் பட்டு துரித அபிவிருத்தி மேற் கொள்ளப்படும்.

வடமாகாண நீர்ப்பாசன திணைக்கள பிரதம பொறியியலாளர் எந்திரி.என்.சுதாகரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் எனும் தலைப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரணைமடு அபிவிருத்தியின் மூலம் வறுமையைக் குறைத்து குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மிக உன்னத நிலைக்கு கொண்டு செல்வதே எமது இலக்கு.

இதற்கான திட்டத்தின் மொத்தச் செலவு 29.32 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் 2012 இல் ஆரம்பித்து 2016 இல் முடிவுறுத்த உள்ளோம்.

இந்தத் திட்டத்தின் பிரதான பங்காளிகள் யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளரின் பிரிவும், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சும், வடமாகாண சபையின் நீர்ப்பாசன திணைக்களமும் ஆகும்.

இதற்காக 7 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 22ஆயிரத்து 95 பேரை இலக்காகக் கொண்டு திட்டம் நகர்த்தப்படுகின்றது.

இதன் மூலம் பெண்களைத் தலைமையாகக் கொண்ட 18 வீதமான குடும்பங்களின் 78.5 வீத மக்களின் வறுமையைத் தணிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படுகிறது.

அத்துடன் 30 கிலோமீற்றர் நீளமான இரு பிரதான வாய்க்கால் புனரமைக்கப்படும். அதே நேரம் வாய்க்கால் நீரோட்டங்களும் மீளப் புனரமைக்கப்படும்.

இதற்காக யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்காக 164.04 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்தமாக செலவிடப்படும்-என்றார்.

(ம-50)

# அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும்

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

காரைநகர், செப்.11

காரைநகர் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதி இன்றி சட்ட விரோதமாக கட்டப்படும் கட்டடங்கள், மதில்கள் என்பவற்றை பிரதேசசபை சட்ட விரோத கட்டடங்களாகக் கருதி அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளது என்று காரைநகர் பிரதேசசபைத் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்தில் அமைக்கப்படும் மதில்கள், கட்டடங்கள் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்றே உரிய சட்டதிட்டங்களுக்கு அமைய அமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அனுமதி பெறாது அத்துமீறி அமைக்கப்படும் கட்டட உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்று மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

அத்துடன் காரைநகர் கசூரினா கடற்கரையில் பிரதேச சபையின் அனுமதி இன்றி படகுச் சவாரி இடம்பெற்று வருவதாகவும், பிரதேச சபையில் அதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளுமாறும் அவர்களுக்கு அறிவித்தும் அதனைப் பின்பற்ற மறுக்கின்றனர்.

அவர்களுக்கும் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை காரைநகர் பிரதேச சபையின் சட்ட ஆலோசகராகவும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் சட்டவாளர் எஸ்.சுபாஸ் நியமிக்கப்பட்டுள்ளாரென அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-250)

## ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் வடக்கில் 95 வீதமானோர் இணைவு

யாழ்ப்பாணம், செப்.11

வடமாகாணத்தில் 95 வீதமான நிறுவனங்களின் பணியாளர்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளனர் என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சகல தனியார் நிறுவனங்களையும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் உள்வாங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிறுவனங்களின் பணியாளர்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளமையால், அவர்களின் சேமலாப நிதி மாதாந்தம் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது.

இதில் சில நிறுவனங்கள் இந்தப் பணியாளர்களுக்கான சேமலாப நிதியை ஒழுங்கான முறையில் செலுத்தாமலும் உள்ளனர்.

அவ்வாறு நிதியைச் செலுத்தாத நிறுவனம் பணியாளர்களுக்கான சேமலாப நிதிக்கான நிலுவையையும் சேர்த்துச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்தச் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் சில நிறுவனங்களில் பணியாற்றும் ஒரு சில பணியாளர்களும் இணைக்கப்படாதநிலையில் உள்ளனர்.

அவர்களையும் இந்தத் திட்டத்தில் இணைக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று மேலும் கூறினார்.

(ம-17)

## 31 மாணவர்களுக்கு அறக்கொடை நிதி உதவி

சுழிபுரம், செப்.11

பண்ணாகத்தைச் சேர்ந்த அமரர்களான பண்டிதர் ஆறுமுகம்-அற்புதமலர் ஞாபகார்த்த நிதியம் மூலமாக 31 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானோர் ஆகியோருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் அறக்கட்டளைத் தலைவர் த.துரைலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பண்டிதர் அ.ஆறுமுகம் நினைவுப் பேருரையை ஆசிரியர் அ.முருகதாஸ் நிகழ்த்தினார்.

(ம-28)

## வைத்தியசாலை விடுதியில் 18 தாதியரும் தங்க அனுமதி

யாழ்ப்பாணம், செப்.11

தென்னிலங்கையைச் சேர்ந்த பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத நபரால் தாக்கப்பட்டதையடுத்து விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த 18 தாதிய உத்தியோகத்தர்களும் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் உள்ள விடுதியில் தங்குவதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து தாதிய உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு கருதி உடனடியாக அவர்களை பாதுகாப்பான விடுதிக்கு மாற்றுமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

(ம-14)

## பொன்னாலை தீர்த்தத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்

சுழிபுரம், செப்.11

சுழிபுரம் திருவடி நிலைக் கடலில் இடம்பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தீர்த்தத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆலயத்தில் இருந்து எழுந்தருளிய சுவாமி திருவடி நிலையை அடைந்து பின் தீர்த்தம் இடம்பெற்றது. பிற்பகல் சுவாமி ஆலயத்தை வந்தடைந்தார்.

பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் வாகனங்களிலும், ஆலயத்தில் இருந்து திருவடி நிலைக்கு கால்நடையாகவும் வந்து தீர்த்தத் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

(ம-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளில் வாடும் உறவுகளின் விடுதலைக்காக பிரார்த்தனையில் எல்லோரும் பங்களியுங்கள்

## உருக்கமாக அழைக்கிறார் நிமலரூபனின் தாயார்

வவுனியா,செப்.11

இலங்கையின் பல்வேறு சிறைக் கூடங்களிலும் விசாரணை எதுவுமின்றி அடைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலையை வேண்டி நாளை 12 ஆம் திகதி வவுனியா குருமண்காடு காளிகோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்புப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அண்மையில் படுகொலை செய்யப்பட்ட நிமலரூபனின் தாயாராகிய க.இராஜேஸ்வரி உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது அன்பிற்கினிய தமிழ் உறவுகளே! உங்களோடு சில வார்த்தைகள்...

தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இலங்கை அரசு எம்மீது பலவிதத்திலும் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. எமது இளைஞர்கள் பலர் என்ன குற்றம் செய்தோம் என்பது கூடத் தெரியாமல் குற்றவாளிகளா சுற்றவாளிகளா என்று நிரூபிக்கப்படாத நிலையில், பல்வேறு சிறைக் கூடங்களில் வாடுகின்றனர். எனது மகன் நிமலரூபனும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த நிலையில் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

எனது அன்பிற்கினியவர்களே! எனக்கு நேர்ந்த அந்தத் துயரம் வேறு எவருக்கும் நேரக்கூடாது என்று நான் தினமும் இறைவனை வேண்டுகின்றேன். இராமாயணத்தில் வனவாசம் அனுபவிப்பதற்குத் தனது மகனை அனுப்ப வேண்டுமே என்று எண்ணியபோதே தசரதனின் உயிர் பிரிந்தது. அந்த அளவுக்குப் புத்திர சோகம் கொடுமையானது. நான் அதனைத் தினமும் அனுபவித்து வருகின்றேன். சிறையில்தானே இருக்கின்றான், பத்திரமாகத் திரும்பி வருவான், என்றெண்ணி நாள்களைக் கடத்திக்கொண்டிருந்த என்னை எனது மகனின் மரணச் செய்தி இடி போல் தாக்கியது. நெஞ்சில் யாரோ ஈட்டியால் குத்துவது போல் இருந்தது. நான் தட்டாத கதவுகள் இல்லை. ஏறாத படிகள் இல்லை, வணங்காத தெய்வங்கள் இல்லை. இருந்தும் அவை அனைத்தும் எனது மகனைக் காப்பாற்றவில்லை. பலரும் பலவிதங்களில் முயற்சித்தும் எனது மகனைக் காப்பாற்ற முடியவில்லை.

எனது தலைவிதி அவ்வளவுதான் என்று என்னைத் தேற்றிக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை, எனது மகனின் திருமணக் கோலத்தைக் காண ஆசைப்பட்ட எனக்கு அவனின் இறுதிச் சடங்கை நடத்தும் வாய்ப்பை இறைவன் அளித்தார். அதனைக்கூடப் பல்வேறு தடைகளின் மத்தியிலேயே செய்ய நேர்ந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

திரைப்படங்களில் கூட சோக முடிவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத எமக்கு நிஜ வாழ்க்கையில்தான் எத்தனை சோதனைகள், எத்தனை தடைகள், எத்தனைவிதமான ஆபத்துக்கள்! அவைகளை வார்த்தைகளில் சொல்ல முடியாது.

ஆகவே என் அன்பு உள்ளங்களே! நாளை12 ஆம் திகதி புதன்கிழமையன்று எமது பிள்ளைகளின் விடுதலையை வேண்டியும், காணாமற் போகடிக்கப்பட்டோரைப் பத்திரமாக மீட்டுத்தருமாறும் தமிழ் மக்களின் மீது அக்கறைகொண்டுள்ள அன்பு நெஞ்சங்கள் ஒரு சிறப்புப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்துள்ளனர். கூட்டுப்பிரார்த்தனைக்குச் சிறப்புப் பலனுண்டு என்பதை நாம் நன்கறிவோம். எனவே இந்த நிகழ்வில் பிள்ளைகளைப் பிரிந்து தவிக்கும் தாய்மார்களும், கணவனின் அன்புக்காக ஏங்கும் மனைவியரும், மனைவியையும் சகோதர சகோதரிகளையும் பிரிந்து தவிப்போரும், அன்பிற்கினியவர்களின் பிரிவால் வாடுவோரும் என அனைவரும் எமக்காக நிகழ்த்தப்படும் இச்சிறப்புப் பிரார்த்தனையில் பக்திப் பரவசத்துடன் கலந்து கொண்டு ஒரு வேள்வியாக இதை நடத்தித் தரவேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றேன்.- என்றுள்ளது.

(க-400)

## கற்சிலைமடு கிராமத்தில் இந்திய வீட்டுத்திட்டத்துக்கான விவரம் திரட்டும் பணி ஆரம்பம்

முல்லைத்தீவு,செப்.11

கற்சிலைமடுவில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு இந்தியாவின் உதவியுடன் வீடுகளை அமைக்கும் பொருட்டு அதற்கான விவரங்களைத் திரட்டும் பணியில் யு.என். கபிற்றாற் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் கற்சிலைமடுக் கிராமம் அமைந்துள்ளது. தற்போது சுமார் 285 குடும்பங்கள் இங்கு மீள்குடியமர்ந்துள்ளன. போரினால் இங்கு அமைந்திருந்த வீடுகளில் பல, பகுதியாகவும் முழுமையாகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. சுமார் 30 வீடுகள் வரையில் புனரமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏனையோருக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் இங்குள்ள மக்கள் மிகவும் ஏழ்மை நிலையிலேயே உள்ளனர். இவர்கள் வீடுகள் இல்லாமையால் மிகவும் சிரமமான நிலையிலேயே தமது வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

மேலும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தமது நிலைமைகளை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றதால் தமக்கு வீடுகள் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் இவர்கள் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (க-500)

## மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம் சந்தேகநபர்கள் 41 பேரும் வைக்கப்பட்டனர் மறியலில்

மன்னார்,செப்.11

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த 41 பேரையும் இம்மாதம் 24 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதோடு பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 20 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதோடு மேலும் பலரை மன்னார் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் 11 பேர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 பேர் சரணடைந்தனர்.

குறித்த சந்தேகநபர்களிடம் முழுமையான வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட மன்னார் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை முன்னிலைப் படுத்தினர். இதன் போது இவர்கள் சார்பாக 3 சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த நிலையில் வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க குறித்த 41 சந்தேகநபர்களையும் இம் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள், வைத்தியசாலைப் பணியாளர்கள், ஓட்டோ ஓட்டுநர்கள் என பலரும் அடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

## தண்ணீர்த் தாங்கியையும் விட்டு வைக்காத திருடர்கள்

### வந்த கையோடு பறிபோனது

புதுக்குடியிருப்பு,செப்.11

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் குடிதண்ணீர்த் தேவைக்கென வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கி காணாமற் போயுள்ளதாக பொலிஸாரிடம் பாடசாலை சமூகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு உடைய பிளாஸ்ரிக்கிலான தண்ணீர்த் தாங்கியே காணாமற் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாட்டுக்கென இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் பாடசாலைச் சமூகத்தினர் பிரதேச சபையிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகக் கடந்த வெள்ளிக்கிழமை தண்ணீர்த்தாங்கி கொண்டு வரப்பட்டு பாடசாலை வளாகத்தில் அதற்குரிய வகையில் வைக்கப்பட்டது.

இந்த நிலையில் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களை அடுத்து நேற்றுப் பாடசாலைக்குச் சென்றோர் தண்ணீர்த் தாங்கியைக் காணாது திகைத்தனர் என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-400)



நெடுங்கேணி கற்குளம் - பட்டிக்குடியிருப்பு வீதியின் புனரமைப்புக்கென கிரவல் மண் குவிக்கப்பட்டுள்ளதால் அந்த வீதியில் பயணிக்கும் வாகனங்களின் நிலைமை இதுதான். (க-435)

## ஒட்டுசுட்டானில் இயங்கும் வங்கியில் கணினி வசதியில்லை வாடிக்கையாளர் பெரும் சிரமம்

முல்லைத்தீவு,செப்.11

ஒட்டுசுட்டான் இலங்கை வங்கிக் கிளையில் கணினி வசதிகளை ஏற்படுத்துமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் முதலாவதாகத் திறந்து வைக்கப்பட்டது இந்த வங்கியின் கிளையாகும். தற்போது கடந்த 6 மாதங்களாகத் தனியார் கட்டடமொன்றில் இந்த வங்கி இயங்கி வருகின்றது. ஆனால் இன்றுவரை கணினி வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் மக்கள் பணத்தை வைப்பிலிடுவதற்கும்,மீளப்பெறுவதற்கும் இரண்டு தடவைகள் வங்கிக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஏனெனில் முதல் நாள் இவர்களால் சமர்ப்பிக்கப்படும் வங்கிப் புத்தகங்கள் மறுநாளே வங்கி உத்தியோகத்தர்களால் இவர்களிடம் கையளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மக்கள் வீணாக அலைய வேண்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஆகவே இந்த வங்கிக் கிளையில் கணினி வசதிகளை ஏற்படுத்துமாறு ஒட்டுசுட்டான் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-500)

## குடிதண்ணீரைப் பெறுவதற்கு அலையும் கெங்காதரன் கிராமம்

### கொளுத்தும் வெயிலில் நீண்ட தூரம் செல்லும் அவலம்

அக்கராயன்,செப்.11

அக்கராயன் பிரதேசத்திலுள்ள கெங்காதரன் கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் பலர் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் தற்போது கொளுத்தும் வெயிலில் பெண்களும், சிறுவர்களும், வயோதிபர்களும் குடிதண்ணீரைத் தேடி நீண்ட தூரம் அலைந்து செல்கின்றமை பார்ப்பதற்கு வேதனை தருவதாக இங்குள்ள பலரும் தெரிவிக்கின்றனர்.

1984 ஆம் ஆண்டு சமாதானபுரம் என்ற பெயரில் வயல் காணித்திட்டமாக ஏற்படுத்தப்பட்ட இந்தக் கிராமம் 1994 இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. பின்னர் 1995 ஆம் ஆண்டு மேட்டு நிலக் குடியிருப்பாக மாற்றப்பட்டது. இங்கு சுமார் 40 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

இக்காலப் பகுதியில் இவர்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது. இந்தக் கிணறு இங்குள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வந்தது.

தற்போது சுமார் 151 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வரும் நிலையில் இவர்களின் தண்ணீர்த் தேவைகளுக்கென ஐந்து குழாய்க் கிணறுகளும், ஒரு கட்டுக் கிணறுமே இங்கு காணப்படுகின்றன. இந்தக் கட்டுக் கிணறு குளிப்பதற்கு மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் இரண்டு குழாய்க் கிணறுகள் பாவனைக்கு உதவாத நிலையிலுள்ளன.

இந்த நிலையில் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறு மட்டுமே குடிதண்ணீரை வழங்கி வருகின்றது. இதனால் குடிதண்ணீரைப் பெறுவதில் இங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் தற்போது கடும் வறட்சியும் நிலவுவதால் தாம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் விவசாய நிலங்களுக்கு பாதுகாப்பு வேலி அமைக்க கோரிக்கை

## ஒருங்கிணைப்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்து

காரைநகரில் விவசாய நிலப் பரப்புக்கள் தனியாகக் காணப்படுவதால், கடந்த காலங்களைப் போல் அவற்றுக்கு பாதுகாப்பு வேலி அமைத்து நெற்செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைநகரில் மக்கள் மீளக் குடியமர்ந்த காலப் பகுதியில் விவசாய நிலங்க ளைச் சுற்றி முட்கம்பிகளால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டதோடு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் பாதுகாப்புவேலிகள் அகற்றப்பட்டமையால் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக கால்நடைகள் பயிர் அழிவை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே மீண்டும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைநகர் பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் விவசாயிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

**காரைநகரில் ஆயிரத்து 200 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்ட போதிலும் அவற்றை கடந்த பல வருடங்களாக கால்நடைகள் வகைதொகை இன்றி அழித்து வருகின்றன.**

பெரும்போக நெற்செய்கைக்கான காலம் நெருங்கி விட்டதால் கால்நடைகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைநகரில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றை கடந்த பல வருடங்களாக கால்நடைகள் வகைதொகை இன்றி அழித்து வருகின்றன. இதனால் விவசாயிகள் வருடாந்தம் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

காரைநகரில் கால்நடைகளும் வருடாந்தம் அதிகரித்து வருகின்றன. காரைநகரில் இருந்து வெளியிடங்களுக்கு கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால் காரைநகரில் அதிகரித்துக் காணப்படும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதுடன், கால்நடை வளர்ப்போரும் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

விவசாய நிலங்கள் சில மேட்டு நிலங்களாக காணப்படுவதனால் அவற்றிலிருந்து மண் எடுக்கப்பட்டு இயற்கை பசளைகளை இட்டு பண்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

மண் அகழ்வதற்கு அனுமதிக்கப் படாமையால் வயல் நிலங்கள் மேடாகி வருகின்றன. இதனால் இயற்கைப் பசளைகளை இடமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர் என்றும் விவசாயிகள் இந்தக் கூட்டத்திலே தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலென்ரின், விவசாயிகளின் பல் வேறு பிரச்சினைகள் ஆரா யப்பட வேண்டி உள்ளதால் அடுத்த வாரம் விவசாயக் குழுக் கூட்டத்தை நடத்தி இந்த விடயங்கள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும்- என்றார். (ம-250)

# களவாக மாடு பிடித்தவர் வேலணையில் அகப்பட்டார்

யாழ்ப்பாணம், செப்.11

வேலணை அராலி வெளியில் களவாகமாடு பிடித்துக் கொண்டிருந்த நால்வரில் ஒருவர் வேலணை பிரதேச சபைத் தலைவரிடம் மாட்டிக் கொண்டார்.

சம்பவம் நான்கு தினங்களுக்கு முன் இடம்பெற்றது.

நான்கு பேர் கொண்ட இத் திருட்டுக்குழுவில் மூவர் தப்பி ஓடிவிட்டபோதும், மன்னாரைச் சேர்ந்த ஒருவரை பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

தற்சமயம் தண்ணீருக்காக அலையும் கால்நடைகளால் ஓடித்தப்ப முடியாத நிலை யில் துரத்தும்போது அவை வீழ்ந்து விடுவதாகவும், திருடர்கள் அவற்றை இலகுவாகப் பிடித்து இறைச்சிக் காக விற்பனை செய்வதாகவும் கூறப்படுகின்றது.

பொதுமக்கள் தமது கால்நடைகளைக் கண்காணிக்க வேண்டும் எனவும் தலைவர் சிவராசா கேட்டுக்கொண்டார். (ம-7-50)

# வசந்தபுரம் கிராமத்துக்கு மின் வழங்க நடவடிக்கை

கொழும்புத்துறை.செப்.11

கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடற்கரை வீதியில் இருந்து உள்ளக குறுக்கு வீதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு மின் கம்பங்கள் நடும் பணிகள் தற் போது நடைபெற்று வருகின்றன.

மீள்குடியமர்த்தப்பட்ட இந்தப்பகுதி மக்களின் இரவு நேரப்பாதுகாப்பு கருதி, தற்போது தற்காலிக இணைப்புக்கள் மூலம் வீட்டுக்கு ஒரு மின் விளக்கு பொருத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-135)

# இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, செப்.11

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மீசாலைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நேற்று முன்தினம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நீரிழிவு, இரத்த அழுத்தம், கண் ஆகிய பரிசோதனை லயன் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையிலான குழுவினரால் நடத்தப் பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெற்ற முகாமில் கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு உள்ள

**வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.**

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. சுமார் 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் இதில் கலந்து கொண்டனர். (ம-9)

# வீடு உடைத்துச் சேதம் சந்தேகத்தில் 6 பேர் கைது

வலி.வடக்கு, செப்.11

வேலணை கிழக்கில் வீடு ஒன்றினுள் புகுந்த இனந் தெரியாத குழு வீட்டை சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் உடைத்து சேதப் படுத்தியுள்ளது.

இந்த விடயம்தொடர் பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸார் எடுத்த நடவடிக்கையை அடுத்து சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)


# மந்திகை முன்பாக பாதசாரிக் கடவை

வடமராட்சி, செப்.11

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள மந்திகைச் சந்தியில் பாதசாரிக் கடவைக்கான மஞ்சள் கோடுகள் இடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் மந்திகை பஸ்தரிப்பிடத்தில் பாதசாரிக் கடவை இடப்பட்டுள்ளதனால் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் நோயாளர்கள், பார்வையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் நன்மை பெற்றுள்ளனர். (ம-8)

# கழிவுநீர் வாய்க்காலில் முடக்கம் மணிக்கூட்டு வீதியில் துர்நாற்றம்



கொழும்புத்துறை,செப்.11

யாழ்.மணிக்கூட்டு வீதியில் உள்ள பிரதான கழிவு நீர் வாய்க்காலில் பல மாதங்களாக நீரோட்டம் தடைப்பட்டுத் தேங்கியுள்ளதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை கழிவுநீர் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றின் கழிவுநீர் இந்தப் பிரதான கால்வாய் வழியாகவே கடலைச் சென்றடைகிறது.

இந்தக் கால்வாயின் ஒரு பகுதியான ஆஸ்பத்திரி சந்தியில் இருந்து மணிக்கூட்டு சுற்றுவட்டம் வரையிலான கால்வாய்ப் பகுதி நீண்ட காலமாகச் சுத்தம் செய்யப்படாது அடைபட்டுக் காணப்படுகிறது.

இதனால் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கத்துக்கும் இது ஏதுவாக உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வருவோரும் இந்த வீதியால் பயணிப்போரும் துர்நாற்றத்தால் பெரும் அசௌகரியம் அடைகின்றனர்.

நகரப் பகுதியில் இவ்வாறு கழிவுநீர் தேங்கிநின்று சுகாதாரத்துக்கு ஊறு விளைவிப்பதைத் தடுக்க உரியவர் கள்நடவடிக்கைஎடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

# இருள் சூழ்ந்த பல வீதிகள்

கொழும்புத்துறை.செப்.11

கொழும்புத்துறை சுவாமியார் வீதி மற்றும் வளன்புரம் பகுதி வீதிகளில் உள்ள மின் விளக்குகள் ஒளிராமையால், அப்பகுதிகள் இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன.

ஒரு சில மின் கம்பங்களைத் தவிர ஏனைய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் ஒளிராமல் பழுதடைந்து காணப்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதிகளிலுள்ள மின் விளக்குகளை ஒளிரச் செய்யுமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ம-135)

# மண்டைதீவு பிரதான வீதி திருத்தப்படாமையால் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.11

பண்ணை மண்டைதீவு சந்தியில் இருந்து மண்டைதீவு பிள்ளையார் கோயில் வரையான 6.4 கிலோ மீற்றர் நீளம் கொண்ட பிரதான வீதி திருத்துவதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

18 மாதங்களில் வீதி திருத்தி முடிக்கப்பட வேண்டிய நிலையில், எட்டு மாதங்கள் கடந்தும் அதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாதது குறித்து மண்டைதீவு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

மண்டைதீவு-யாழ்ப்பாணத்துக்கான பிரதான வீதி இதுவாகும். வீதி புனரமைக்கப்படாத நிலையில் வாகனப் போக்குவரத்துக்கு பெரும் சிரமப்படவேண்டி யுள்ளதாக சாரதிகள் கூறுகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைக்கத் தேவையான மண் கொண்டுவந்து வீதியோரங்களில் போடப்பட்டிருந்தது.

எனினும் அவை திருத்த வேலைக்கு உகந்தவையல்ல என்று தெரிவித்து மீளக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

# குடிதண்ணீர் விநியோகத்துக்கு நிதி கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட இருநூறு குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்துக்கென பிறவுண்ஸ் நிறுவனம் ரூபா 5 லட்சம் பெறுமதியான காசோலையை மாநகர முதல்வரிடம் கையளித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதற் கட்ட திட்டத்துக்கென இந்தத் தொகை கையளிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-7)

# எழுதுமட்டுவாழ் வயல்களில் நெற்செய்கையாளர் சிரமதானம்

தென்மராட்சி, செப்.11

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு வயல் பகுதியில் இன்று நெற் செய்கையாளர்களால் சிரமதானம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்தப்பகுதி வயல்களில் காலபோக நெற் செய்கை மேற்கொள்வதற்கான ஆயத்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான வேலிகள் அமைப்புப் பணிகளே சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள அனைத்து நெற்செய்கையாளர்களையும் இன்று காலை 9 மணிக்கு வயல்களுக்கு வருகை தருமாறு பிரிவு கமக்கார அமைப்பின் செயலாளர் சி.தெய்வேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (ம-9)

# சுகாதார விதிமுறைகள் புறக்கணிப்பு 'மிக்ஸர்' நிலையம் மூடப்பட்டது


தென்மராட்சி-செப்.11

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக தயாரிக்கப்படாத 'மிக்ஸர்' தயாரிப்பு நிலையம் சுகாதார பகுதியினரால் மூடப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வயல் பகுதியில் இயங்கும் மிக்ஸர் தயாரிப்பு நிலையமே மூடப்பட்டது.

நகரசபை சுகாதாரப் பகுதியினர் இந்த நிலையத்தில் திடீர் பரிசோதனை நடத்திய வேளையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படாத நிலையிலும், இந்த வருடத்திற்குரிய தொழில் நடத்தும் உரிமைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத நிலையிலிலும் காணப்பட்டது.

இவற்றைச் சீர் செய்யும் வரை இயங்குவதற்குத் தடைவிதிக்கப்பட்டு அந்த நிலையம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து டில்லி செல்லும் வழியில், சென்னைக்குச் சென்ற பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் ஜெயலலிதா மலர்க்கொத்து கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

## 8 மாநிலங்களில் டுவிட்டருக்குத் தடை

### ஆலோசிக்கிறது மத்திய அரசு

தமிழகம் உட்பட 8 மாநிலங்களில் 'டுவிட்டர்' இணையத்தளத்தை தடை செய்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

தேவையற்ற வதந்திகளைப் பரப்பி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் நிகழ்வுகளைத் தடுக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதையடுத்து தமிழகம், கர்நாடகம், ஆந்திரம், அசாம், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் டுவிட்டர் இணையத்தளத்தை முடக்க மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. (வ)

## டுவிட்டர், பேஸ்புக்கில் இணையவுள்ளார் 'ஜெ'



சென்னை, செப்.11

சமூக வலைத்தளங்களான பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் முதல்வர் ஜெயலலிதா விரைவில் இணையப் போவதாக அரசியல் வட்டாரத்தில் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய நவீன உலகில் சக்தி வாய்ந்த ஊடகமாகத் திகழ்வது தொலைக்காட்சி, இணையத்தளம், பேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்றவைகள் என்று கூறலாம். திரையுலகப் பிரபலங்கள் முதல் அரசியல் தலைவர்கள் வரை பலர் டுவிட்டர் மற்றும் பேஸ்புக்கில் உள்ளனர். இந்த நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த சில தினங்களுக்கு முன்பு திடீரென பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் இணைந்தார். அவருக்கு பல திசைகளில் இருந்து வாழ்த்தும், எதிர்ப்பும் வந்து குவிந்தன.

அதையடுத்து அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா விரைவில் பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் இணைய உள்ளார் என்று அரசியல் வட்டாரத்தில் தெரிவிக்கப் படுகின்றது. (வ)

## மஹிந்தவின் வருகையை தடை செய்ய வேண்டும்

### தமிழக மனித உரிமை கழகம் தீர்மானம்

ஈழத்தமிழர்களை கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி இந்தியா வருவதை இந்திய அரசு தடை செய்ய வேண்டும் என்று தமிழக மனித உரிமை கழகம் மாவட்ட செயற் குழு கூட்டத்தில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கீரமங்கலத்தில் தமிழக மனித உரிமை கழகம் மற்றும் தமிழக மக்கள் புரட்சி கழகம் கட்சிகளின் மாவட்ட செயற் குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் வேம்பை சின்னதுரை தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:-

எதிர்வரும் 21 ஆம் திகதி ஈழத்தமிழர்களை ஈவு இரக்கம் இன்றி கொன்று குவித்த இலங்கை தலைவர் இந்தியா வருவதை இந்திய அரசு தடை செய்ய வேண்டும். தியாகி இமானுவேல் சேகரன் நினைவு நாளில் மாவட்டத்தில் இருந்து திரளாகக் கலந்து கொள்வது போன்ற விடயங்கள் நிறைவேற்றப்பட்டன. (வ)

## கூடங்குளத்தில் தொடரும் பதற்றம்

# முற்றுகைப் போராட்டத்தின் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு

### பொலிஸார் தடியடியும் நடத்தினர்

கூடங்குளம், செப்.11

கூடங்குளம் அணு மின் நிலையம் அருகே நேற்று முதல் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அணு மின் நிலைய எதிர்ப்புப் போராட்டக்காரர்களை நேற்று பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் கலைத்தனர். பதிலுக்கு மக்களும் தாக்குதலில் இறங்கியதில் பொலிஸ்காரர்கள் உட்பட பலர் காயமடைந்தனர்.

பொலிஸாரின் தாக்குதலில் கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். அணு உலையில் யுரேனியம் எரிபொருள் நிரப்பப்படுவதைக் கண்டித்து போராட்டம் நடைபெற்று வருகிறது. கடல் வழியாக நேற்று முன்தினம் முற்றுகையிடச் சென்றவர்களை சுனாமி நகரில் பொலிஸார் தடுத்தனர். அவர்கள் தடுத்ததைத் தொடர்ந்து கடற்கரையிலேயே நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் தங்கி பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.





கூடங்குளத்தில் போராட்டக்காரர்களுடன் உயர் அதிகாரிகள் சமரசப் பேச்சில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் மாவட்ட ஆட்சியாளர் மற்றும் உயர் அதிகாரிகளின் வேண்டுகோளைப் புறக்கணித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் முற்றுகைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர மக்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

இதில் பொலிஸார் சிலர் காயம்அடைந்துள்ளனர். பொலிஸாரின் தடியடியைத் அடுத்து போராட்டக்காரர்கள் சிலர் கடலுக்குள் இறங்கினர். போராட்டத்தில் ஈடுபட்ட பல மீனவர்கள் படகில் ஏறி கடல் வழியாகத் தப்பினர்.

*பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டனர்*

இதேவேளை வன்முறையின்போது பொலிஸார் தாக்கி 5 பத்திரிக்கையாளர்கள் காயமடைந்துள்ளனர். பத்திரிகையாளர்களின் கமராக்களைப் பறித்த பொலிஸார் அதை கடலில் வீசியும், உடைத்தும் அராஜகம் புரிந்தனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் தாக்குதலில் மலையாளப் பத்திரிகையாளர் உட்பட 5 பேர் இலேசான காயமடைந்தனர். அவர்களின் கமராக்களையும் பொலிஸார் பறித்து உடைத்தனர்.(வ)

## இந்தியா வரும் மஹிந்தவுக்கு எதிராக நாளை ஆர்ப்பாட்டம்

### டி.ராஜேந்தர் தெரிவிப்பு

இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதியின் வருகையைக் கண்டித்து நாளை புதன்கிழமை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று டி.ராஜேந்தர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் கைகளில் படிந்திருக்கிறது, இரத்தக்கறை. அதைதமிழர்களால்மறக்கமுடியவில்லை, இன்று வரை. இந்த நிலையில் இரத்தக் கறை படிந்த ராஜபக் ஷவுக்கு, ரத்தினக் கம்பளம் விரித்து ஆரத்தி எடுத்து, ஆரத்தழுவி மகிழ மத்திய அரசு நீட்டுகிறது இருகை. அதனால்தான் ராஜபக்ஷ மீண்டும் தருகிறாரோ இந்தியாவுக்கு வருகை.

மத்திய அரசு சிங்கள இராணுவத்துக்கு, தமிழ் நாட்டிலே கொடுத்து கொண்டிருப்பது இராணுவப் பயிற்சி. இது மத்திய அரசு தமிழர்களை கேவலப்படுத்துவதற்கான, அதிகபட்ச அநியாய முயற்சி. மத்திய அரசின் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (வ)

## பிரதமரின் சொத்து ரூ. 25 கோடி அமைச்சர்களை விடக் குறைவாம்

பிரதமர் மன்மோகன் சிங்கின் தற்போதைய மொத்த சொத்து மதிப்பு ரூ 25 கோடி என புள்ளி விவரம் வெளியாகியுள்ளது.

பிரதமர் காரியாலயத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் இப்புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி பிரதமரின் தற்போதைய சொத்து மதிப்பு கடந்த வருடத்திலும் பார்க்க இரு மடங்காக அதிகரித்துள்ளது.

எனினும் அவரை விட ஆளும் மத்திய அரசில் உள்ள மேலும் சில அமைச்சர்களின் மொத்த சொத்து மதிப்பு அதிகமாக உள்ளது. பிரபல் படேலின் சொத்து மதிப்பு ரூ.125 கோடியாகவும், சரத் பவாரின் சொத்து மதிப்பு ரூ. 55கோடியாக உள்ளது. எனினும் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியின் சொத்து




மதிப்பு ரூ 125 லட்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசில் உள்ள அமைச்சர்களில் மிகவும் குறைவான சொத்துமதிப்பு உடையவராக இவர்தான் உள்ளார்.

மன்மோகன் சிங்கை பொறுத்தவரை அவருடைய - மாருதி 800 - கார், சந்திகார் மற்றும் டில்லியில் உள்ள இரு மாடி வீடுகள் மற்றும் வங்கி வைப்புத் தொகை என்பன அனைத்தும் சேர்த்து அண்ணளவாக ரூ.25 கோடியாக உள்ளது.

கடந்த வருடம் அவரது மொத்த சொத்து மதிப்பு ரூ.12.5 கோடியாக இருந்தது. எனினும் இம்முறை அவரது சொத்து மதிப்பு இரட்டை மடங்காக அதிகரித்ததற்கு, அவர் மேலதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என பொருள்படாது. ஏற்கனவே இருந்த சொத்துக்களின் பெறுமதி உயர்வடைந்துள்ளதே காரணம் என்று பிரதமர் காரியாலயம் விளக்கம் அளித்துள்ளது.

மன்மோகன் சிங்குக்கு அசாமில் உள்ள டிஸ்பூர் வங்கியில் வைப்பு நிதி உள்ளது. இதில் அவர் ரூ.19000 மட்டுமே வைப்பில் இட்டுள்ளார். (வ)

## வெண்மைப் புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியன் காலமானார்



இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்படும் அமுல் நிறுவுநர் வர்கீஸ் குரியன் (வயது 90) நேற்று குஜராத்தில் காலமானார்.

1949 ஆம் ஆண்டு தனக்குக்கிடைத்தஅரசவேலையை விட்டுவிட்டு குஜராத் மாநிலம் ஆனந்த்தில் கூட்டுறவுப் பால் பண்ணையை அமைத்தார்.

உலகின் பிரபல பால் உற்பத்தி நிறுவனமாக தற்போது திகழும் அமுல் நிறுவனத்தை நிறுவிய பெருமை இவருக்கு உண்டு.

இந்த அமுல் நிறுவனம் 200 இற்கும் மேற்பட்ட கூட்டுறவு பால் சந்தைகளை உருவாக்கியதன் மூலம் நாட்டில் பால் உற்பத்தி கோடிக் கணக்கில் பெருகியது. வர்கீஸ் குரியன் 10 மில்லியன் (1 கோடி) கால்நடை விவசாயிகளை ஒருங்கிணைத்தார். (வ)

## ஆற்றில் கவிழ்ந்தது படகு

### 6 பேர் சாவு

பீகாரில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

பீகார் மாநிலம் போஜ்பூர் மாவட்டத்தின் ஹார் கிராமத்தில் 14 பேர் மட்டும் செல்லக்கூடிய படகு ஒன்றில் 40 பேரை ஏற்றிச் சென்ற படகு சோன் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதுவரை 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சிலர் ஆற்றில் நீந்தி கரையை அடைந்தனர். மேலும், சிலரை அருகே இருந்த கிராம மக்கள் மீட்டுள்ளனர் என்று போஜ்பூர் மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெறுவதாகவும், சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக் துணை ஜனாதிபதிக்கு தூக்கு



ஈராக்கின் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹாஷ்மி, 45 பேரை கொன்றது தொடர்பான வழக்கில் அந்தநாட்டு நீதிமன்றம் அவருக்கு தூக் குத் தண்டனை அறிவித்துள்ளது.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின் அமெரிக்காவின் உதவியுடன் அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.

துணை ஜனாதிபதி பதவியில் இருந்த தாரிக் அல் ஹாஷ்மி, 26 சம்பவங்களில் 46 பேரைச் சுட்டுக்கொல்ல உத்தரவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த வழக்கில் அவரை முன்னிலையாகி வாக்கு மூலம் அளிக்கும்படி பாக்தாத் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் துருக்கி சென்ற ஹாஷ்மி மீண்டும் நாடு திரும்பவில்லை.

இதற்கிடையே ஹாஷ்மி மீதான குற்றம் நிரூபிக்கப் பட்டதால் அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு இவர் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். கடந்த 2010ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் மீண்டும் இவர் துணை ஜனாதிபதியாக தெரிவானார். (வ)

# அடுத்தடுத்து குண்டுகள் வெடிப்பு

## ஈராக்கில் 100 பேர் சாவு; 250 பேர் காயம்



ஈராக்கில் நிகழ்ந்த அடுத்தடுத்த குண்டு வெடிப்பில் 100 பேர் உயிரிழந்தனர். 250 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் உள்ள பாதுகாப்புப் படைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் மார்க்கெட்டுகளை குறி வைத்து பல்வேறு இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

தெற்கு ஈராக்கில் உள்ள ஒரு மசூதி அருகே நடந்த மிக மோசமான இரு கார் குண்டுவெடிப்புகளில் மட்டும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

மேசன் பகுதியில் நடந்த தாக்குதலில் 14 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் படையினர், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இறந்துள்ளனர்.

எண்ணெய் நிறுவனம் ஒன்றின் அருகே நடந்த மற்றொரு தாக்குதலில் அங்கு வேலையில் இணைவதற்காக நின்றிருந்த பலர் உயிரிழந்தனர்.

இந்த மாதம் மட்டும் நடந்த தாக்குதல்களில் மொத்தம் 131 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## இந்தோனேசியாவில் குண்டுவெடிப்பு

### 6 பேர் காயம்

ஜகார்த்தா, செப். 11

இந்தோனேசியாவில் வீடு ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 6 பேர் காயமடைந்தனர்.

அந்த வீட்டில் வைத்து தீவிரவாதிகள் வெடிகுண்டைத் தயாரித்துள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக குண்டு வெடித்துச் சிதறியது. இதில் படுகாயமடைந்த இருவர் வெடிகுண்டைத் தயாரித்தவர்கள் என்று தெரிகிறது. அயலிலுள்ள வீடுகளைச் சேர்ந்த 4 பேரும் காயமடைந்தனர்.

ஜகார்த்தாவின் புறநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதே பகுதியில்தான் சில தினங்களுக்கு முன்பு பொலிஸார் சோதனை மேற்கொண்டு வெடிகுண்டு தயாரிப்பதற்கான பொருள்களைக் கைப்பற்றினர். இந்தநிலையில் அங்கு மீண்டும் வெடிகுண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவத்தை அடுத்து தீவிரவாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தோனேசிய பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

குண்டு வெடித்த சில நிமிடங்களில் சம்பவ இடத்தில் இருந்து ஒருவர் தப்பி ஓடியதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அவரும் தீவிரவாதி என்ற சந்தேகம் உள்ளது.



பலஸ்தீன பிரதமர் சாலம் பேயட் ஜேர்மனியின் வெளியுறவுத் துறை அமைச்சர் கெய்டோ வெஸ்டர் வெலியை ரமலாவில் வரவேற்று வாழ்த்தினார்.

## நியூயோர்க்கில் அடுத்தடுத்துச் சூறாவளி: சேதம் இல்லை

வொஷிங்டன்,செப்10

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் நேற்று முன்தினம் இரண்டு சூறாவளிகள் தாக்கின.

நியூயோர்க்கின் கடற்கரையோரத்தில் உள்ள குயின்ஸ் நகரில் முதலில் ஒரு சூறாவளி கடுமையாகத் தாக்கியது.

சிறிது நேரத்தில் 10 மைல்கள் தூரத்தில் உள்ள ப்ரூக்ளின் நகரில் அடுத்த சூறாவளி தாக்கியது.

புழுதியைக் கிளப்பி சுற்றிச் சுழன்ற இந்த சூறாவளியால் அந்தப்பகுதியில் மின்சார விநியோகம் தடைப்பட்டது.

சூறாவளி தாக்கும் அபாயம் இருப்பதாக வானிலை ஆய்வு மையம் மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்ததால், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர்.

இதன் காரணமாக இவ்விரு சூறாவளியாலும் பெருமளவில் சேதங்கள் ஏற்படவில்லை. (வ)

# மோனாலிசா ஓவியத்தை எங்களிடம் ஒப்படையுங்கள்

## பிரான்ஸிடம் இத்தாலி கோரிக்கை



பிரான்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ள வரலாற்று புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று இத்தாலியின் தேசிய வரலாறு, கலாசாரம் மற்றும் நினைவுச் சின்ன பாதுகாப்புக் குழு வலியுறுத்தி உள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த ஓவியர் லியனடோ டாவின்சி. இவர் வரைந்த ஓவியங்கள் உலக புகழ் பெற்றவை.

அவற்றில் மர்மப் புன்னகையுடன் உள்ள மோனாலிசா ஓவியம் மிகச் சிறந்த ஓவியமாகப் போற்றப்படுகிறது.

1503ஆம் ஆண்டில் மோனாலிசா ஓவியத்தை வரையத் தொடங்கி சில ஆண்டுகளில் முடித்த டாவின்சி, பிரான்ஸுக்கு 1516 ஆம் ஆண்டு குடிபெயர்ந்தார்.

அப்போது டாவின்சியிடம் இருந்து பிரான்ஸ் மன்னர் குடும்பத்தினர் அந்த ஓவியத்தை வாங்கி வைத்துக் கொண்டனர். பிரான்ஸ் புரட்சிக்கு பின்னர் அந்த ஓவியம் பரிஸில் உள்ள புகழ் பெற்ற லூவ்ரி அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

1911ஆம் ஆண்டு மோனாலிசா ஓவியம் கொள்ளை போனது. அருங்காட்சியகத்தில் வேலை செய்த வின்சென்சூ பெருஜியா என்பவர், ஓவியத்தை திருடிச் சென்றது 2 ஆண்டுகள் கழித்து கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் இத்தாலி மீது பற்றுள்ளவர். பிளாரன்ஸ் நகரில் அவர் வசித்த வீட்டில் இருந்து மோனாலிசா ஓவியம் மீட்கப்பட்டது. பின்னர் பரிஸில் உள்ள லூவ்ரி அருங் காட்சியகத்தில் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

இந்தநிலையில் இத்தாலியின் பொக்கிஷமான மோனாலிசா ஓவியத்தை திரும்ப உஃபிஸி அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று இத்தாலி தேசிய வரலாறு, கலாசாரம் மற்றும் நினைவுச் சின்ன பாதுகாப்பு குழு வலியுறுத்தி உள்ளது.

# விமானக் குண்டு வீச்சின் மூலம் பின்லேடனைக் கொல்லும் திட்டம்

அல்குவைதா தீவிரவாதத் தலைவர் ஒஸாமா பின்லேடனை விமானம் மூலம் குண்டுகளை வீசிக் கொல்ல திட்டம் தீட்டப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனை கடந்த ஆண்டு அமெரிக்க அதி ரடிப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

இந்த படையில் இருந்த வீரர் ஒருவர், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து புத்தகமாகத் தொகுத் துள்ளார்.

அதில், ஒசாமா பின்லேடனைக் கொல்ல ஜனாதிபதி ஒபாமாவும், ஆலோசகர்களும் பல்வேறு திட்டங்கள் குறித்து தீவிரமாக ஆலோசித்தனர்.

முதலில் விமானம் மூலம் சென்று குண்டுகள் வீசி வீட்டைத் தகர்த்து பின்லேடனைக் கொலை செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதற்கு பாதுகாப்பு அமைச்சர் உட்பட பலர் ஆதரவு தெரிவித்தனர். ஆனால் கடைசி நேரத்தில் அந்தத்திட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

# சிரியா விவகாரம் குறித்து புடின் - ஹிலாரி பேச்சு



மாஸ்கோ,செப்.11

சிரியா விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், அமெரிக்க வெளிவிவ காரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பேச்சு நடத்தினார்.

ரஷ்யாவிலுள்ள வலாடிவோஸ்டோக் நகரில் நடைபெறும் ஆசியா- பசிபிக் பொருளாதார ஒத்து ழைப்பு மாநாட்டில் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதில் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கலந்து கொண்டார். பின்னர் அவர் சிரியா விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடின், வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்கிய் லாவ்ரோவ் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து ஹிலாரி கிளிண்டன் கூறுகையில், சிரியா பிரச்சினை தொடர்பாக ரஷ்யாவின் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீர்வு காண்பது குறித்து பேச்சு தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

## சர்ச்சைக்குரிய தீவுகள் சீனா– ஜப்பான் தலைவர்கள் சந்திப்பு

ரஷ்யாவில் நடைபெறும் ஆசிய- பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்கச் சென்ற சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா ஆகியோர் சீனா- ஜப்பான் நாடுகளுக்கிடையே அமைந்துள்ள தீவுகள் தொடர்பாக சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இவ்விருநாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்கள் பிரச்சினைக் குரிய தீவுகளுக்குச் சென்று கொடியேற்றினார்கள்.

இந்தத் தீவுகள் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தனியாருக்குச் சொந்தமானது. எனவே இதை அரசே விலைக்கு வாங்கலாம் என்று ஜப்பான் அரசு முடிவு செய்தது. ஆனால் இதற்குச் சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.

# ஒரேசூலில் பிறந்த சிறுவர்களை இனங்காண தலைமுடியில் இலக்கம் பொறித்த தாய்



ஒரேசூலில் பிறந்த சிறுவர்கள் நால்வரை ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் இலகுவாக இனங்கண்டு கொள்வதற்காக அவர்களது தலையில் தலைமுடியில் வெவ்வேறான இலக்கங்கள் வடிவமைக்கப்பட்ட சம்பவமொன்று சீனாவில் இடம் பெற்றுள்ளது.

6 வயதான இந்த மாணவர்கள், சீனாவின் தென்பிராந்தியமான குவாங்டோங் மாகாணத்தில் சென்ஸென் நகரில் அமைந்துள்ள பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலைக்குச் சென்ற முதல் நாளிலேயே ஆசிரியர்கள் இவர்கள் ஒவ்வொருவரையும் அடையாளம் காண வேண்டுமென்பதற்காக இந்தச்சிறார்களின் தாயார் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

ஜியாங் யுங்லோங், ஜியங் யுங்ஸியாவோ, ஜியாங் யுன்ஹாங், ஜியாங் யுன்லின் என இந்தச்சிறார்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது.

மேற்படி சிறுவர்களின் தந்தைக்கும் இவர்களை அடையாளம் கண்டுகொள்வது சிரமமாக இருந்துள்ளது.

மேற்படி சிறுவர்களின் பெற்றோர் செல்வந்தர்களாக இல்லாதபோதும் இந்தச்சிறுவர்கள் முறையாக கல்வி கற்க வேண்டுமென அவர்களின் பெற்றோர்கள் விரும்புகின்றனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பாக மாற ஊசி மருந்தேற்றிய பெண் சாவு



கறுப்பு நிறமாக மாற ஊசி மருந்து ஏற்றிய பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பிரிட்டனில் இடம் பெற்றுள்ளது.

பிரிட்டனின் போல்ட்டன் நகரைச் சேர்ந்த ஜென்னா விக்கெர்ஸ் என்ற 26 வயதுப் பெண் கடந்த வாரம் மெலனோட்டான் என்ற ஊசி மருந்தை உடம்பில் ஏற்றிக் கொள்ள வந்த இடத்தில் ஊசி போட்டவுடனேயே சுருண்டு விழுந்து இறந்தார்.

பிரிட்டனில் இந்த மெலனோட்டன் மருந்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு செயற்கைச் சுரப்பு மருந்தாகும். உடம்பில் மெலனின் சுரப்பைத் தூண்டுகிறது. கதிரவனின் கதிர் வீச்சிலிருந்து தோலைப் பாதுகாக்கிறது. மேனி வண்ணத்தை வெள்ளையிலிருந்து பழுப்பாக மாற்றுகிறது.

எனினும் இந்த மருந்துக்கு மோசமான பின்விளைவுகள் இருப்பதால் இதற்கு சட்ட அனுமதி கிடைக்கவில்லை. எனவே இந்த மருந்தை எவரும் விற்பது சட்டப்படி குற்றமாகும். (வ)

# தொடர் குண்டு வெடிப்பு

### சிரியாவில் 17 பேர் சாவு

**காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் பரிதாபமாக 17 பேர் உயிரிழந்தனர். குண்டுவெடிப்பில் இடிந்த கட்டடங்களில் யாராவது சிக்கி உள்ளார்களா என்பதைக் கண்டறியும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.**



சிரியாவின் அலெப்போ மாநகரில் காரில் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டு வெடித்துச் சிதறியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக நடைபெற்று வரும் புரட்சியின் எதிரொலி மக்களையே பாதிக்கிறது.

குண்டுவெடிப்புகள் மூலமாக சிரியா முழுவதும் அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. தினமும் குண்டு வெடிப்பு நிகழ்வது அங்கு வழமையாகிவிட்டது.

இந்தநிலையில் நேற்று காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் பரிதாபமாக 17 பேர் உயிரிழந்தனர்.


குண்டுவெடிப்பில் இடிந்த கட்டடங்களில் யாராவது சிக்கி உள்ளார்களா என்பதைக் கண்டறியும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

மருத்துவமனை மற்றும் பள்ளிக் கூடத்திற்கு அருகே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடைய இராணுவ வீரர்கள் தங்கியுள்ள தற்காலிக முகாம் மற்றும் இராணுவ மையம் அருகே அடுத்தடுத்து இரண்டு சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதில் ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த இரு தாக்குதல்களுக்கும் எந்த ஓர் அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## விமான எரிபொருள் தாங்கி மாறியது தண்ணீர் சூடாக்கியாக



சீனாவைச் சேர்ந்த திறமைமிக்க விவசாயி ஒருவர், பழைய போர் விமானம் ஒன்றின் எரிபொருள் தாங்கியை தண்ணீர் சூடாக்கி இயந்திரமாக மாற்றியுள்ளார்.

சீனாவின், சான்டோங் மாகாணத்தின் யான்டாய் நகரைச் சேர்ந்த பெங் வெங்க் எனும் விவசாயியின் குடும்பத்தினர் ஆறு பேரும் வெந்நீர் குளியலுக்கு இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

மீள்சுழற்சி நிலையம் ஒன்றிலிருந்து மேற்படி எரிபொருள் தாங்கியை அவர் பெற்றுக் கொண்டார். வெள்ளியிலான இந்த எரிபொருள் தாங்கியை சிறிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் தண்ணீர் சூடாக்கியாக வடிவமைக்கலாம் என்ற யோசனையானது அவருக்கு பின்பே வந்துள்ளது.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

இராணுவத்தில் நான் கடமையாற்றிய காலம் முதல் நான் இராணுவ பொருள்கள் மற்றும் விடயங்களில் மீது கொள்ளை பிரியனாகவே உள்ளேன். மீள்சுழற்சி நிலையத்தில் மக்கள் குறிப்பிடத்தக்க பொருள்களை விட்டுச் செல்வதால் எப்போதும் அங்கு மக்கள் காணபபடுவதை நான் அவதானித்துள்ளேன்.

நான் இந்த விமானத்தின் பாகத்தை கண்டபோது அதனை நல்ல விடயங்கள் எதற்கேனும் பயன்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். நான் எப்போதும் நல்ல பொருள்களை உருவாக்குவேன் - என்றார்.

## அனான், பில்கேட்ஸ் பெயர்கள் சீன அமைதி விருதுக்கு பரிந்துரை



சீன அமைதி விருதுக்கு ஐ.நா. முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான், மைக்ரோசொப்ட் நிறுவுநனர் பில்கேட்ஸ் ஆகியோரின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சீன கன்பூஷியஸ் அமைதி விருதுக்கு பரிந்துரை செய்யப்படுபவர்களின் பெயர்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன.

சீன அரசின் பரிந்துரை எதுவும் இல்லாமல் சுதந்திரமாக முடிவெடுத்தே இப்பெயர்களை அறிவித்ததாக விருதை வழங்கும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன், தாய்லாந்துப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா, சீன சமூக சேவகர் வாங் டிங்கோ, பீஜிங் பல்கலைக் கழக பேராசிரியர் டேங் யீஜி, சீன விஞ்ஞானி யுவான் லாங் பிங், பன்சென் லாமா ஆகியோரின் பெயர்களும் இவ்விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

திபெத்திய மத தலைவர் தலாய்லாமாவுக்கு அடுத்து இரண்டாவது நிலையில் உள்ளவர் பன்செனலாமா.

ஆனால் இவர் சீன அரசால் நியமிக்கப்பட்டவர் என்பதால் இவரை திபெத்தியர்கள் மதத்தலைவராக ஏற்றுக் கொள்வதில்லை.. (வ)


ஜுப்பிற்றர் முன்பள்ளி - சங்கானை
Jupiter pre - School - Chankanai

**ஆசிரியர்கள் தேவை**

எமது முன்பள்ளிக்கு இரண்டு ஆசிரியைகள் தேவையாக உள்ளனர் க.பொ.த. உ/த சித்தியடைந்த அல்லது முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்ட அல்லது மேற்கொள்கின்ற 20 - 45 வயதிற்குட்பட்டவர்கள். கீழ்வரும் முகவரிக்கு 28.09.2012 வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

(22752) (45.6.7)

தலைவர்: ஜுப்பிற்றர் கழகம், 758, வல்லை வீதி, சங்கானை.


## மரண அறிவித்தல்

### *சின்னத்தம்பி தனபாலசிங்கம்*

(பிராந்திய முகாமையாளர்- வடக்கு மற்றும் கிழக்கு Commercial Credit PLC)



**கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் நேற்று முன்தினம் (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் சின்னத்தம்பி- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தீப்தகுமார் (UK), ராஜேஸ்குமார் (வல்வெட்டித்துறை நகரசபை), லலித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.பாலேந்திரன், திருமதி ந.பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி T.உமையாள், திருமதி R.சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமனும், அவந்தி, ஆரணா ஆகியோரின் பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி.**

(சி/3192)(45.6.7)

தகவல்: **குடும்பத்தினர்.**


திடநம்பிக்கையுடனான முதலீட்டிற்கு...

பங்குச் சந்தையில் முதலீடு செய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

முதலீட்டுக்கான அறிவு

வவுனியா

2012 செப்ரெம்பர்
15, 22, 29 மற்றும் ஒக்டோபர் 06
மு.ப 09.00 முதல் பி.ப 01.00 வரை
ரோயல் கார்டின்
(Royal Gaarden) – வவுனியா

தலைப்புக்கள்
பங்கு முதலீடு பற்றிய அறிமுகம் ◂
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல் ◂
பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும் ◂
பங்குகளில் முதலீடு செய்தல் ◂

வளவாளர்கள்
திரு. ஆ. சுப்ரமணியம்
தலைவர், நிதி முகாமைத்துவ துறை
முகாமைத்துவ வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திரு. வெற்றிவேல் குமணன்
ACCA (UK)

மொழி மூலம்: தமிழ்
பதிவுக் கட்டணம் ரூபா. 500/-

(சி/3243) (45.6.7)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: – 2221455, 021 – 5672444, 0777822014

COLOMBO STOCK EXCHANGE


## உலக பொருளாதார இயந்திரம் ஆசியா: ஹிலாரி விவரிப்பு



உலக பொருளாதாரத்தின் இயந்திரமாக ஆசியா பரிணமிக்கிறது என்று அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.

இந்த நிலையில் பிராந்திய ரீதியான சமாதானத்தை ஆசிய நாடுகள் பேணாத பட்சத்தில், அது உலக பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய நாடுகளின் தலைவர்களின் ஆசிய பிராந்திய ரீதியான பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் .

கிழக்கு சீனா மற்றும் தென்சீன கடற்பிராந்தியங்களிலுள்ள தீவுகளின் உரிமை தொடர்பான பிரச்சினைகளை சீனா மற்றும் அயல் நாடுகள் தீர்த்துக்கொள்ளவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(08)

"என்ன அண்ணை, நீங்கள் சைக்கிள் கரியரில் வைத்திருந்த பை கீழே விழுந்துவிட்டது. அதை எடுத்துக் கொடுக்க உங்களைக் கூப்பிட்டால் நீங்கள் திரும்பிப் பார்க்காமல் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறீர்கள்'' எனக்கூறி என்னுடைய சைக்கிளிலிருந்து கீழே விழுந்த பையை என்னிடம் கொடுத்தார் பின்னே துரத்திக் கொண்டு வந்த மனிதர். வந்தது மனிதனே தவிர பேய் அல்ல எனப் புரிந்து கொண்டேன். எனக்கு ஏற்பட்ட பயம் சுடுகாடு பற்றி நண்பர் முன் கூட்டிச் சொன்னதால் ஏற்பட்ட பயமே தவிர அங்கே பேயும் இல்லை; பிசாசும் இல்லை. அங்கு சுடுகாடு இருக்கிறதென்று தெரியாத பொழுது எனக்கு எந்தவிதமான பயமும் ஏற்படவில்லை. பயம் என்பது எண்ணத்திலே ஏற்பட்டதே தவிர நடைமுறையிலேயில்லை.

இலங்கையில் டாக்டர் கோவூர் என்கிற மனோ தத்துவ நிபுணர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் பேய் பற்றிய சம்பவம் ஒன்றைச் சொன்னார். பேய் இருப்பதாக ஒருவர் சாதித்தார். இல்லையென்று ஒருவர் மறுத்தார். பேயை நம்பியவர் சுடுகாடு ஒன்றில் உள்ள மரம் ஒன்றை குறிப்பிட்டு நள்ளிரவில் அந்த மரத்தில் உன்னால் ஆணி அடித்துவிட்டு வரமுடியுமா என்று சவால் விட்டார்.



பேயை நம்பாதவர் அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டார். அவர் சொன்னபடியே நள்ளிரவில் ஒரு சுத்தியலையும் ஆணியையும் எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட மரத்தைத் தேடிச் சென்றார். சுடுகாட்டிற்குப் போனவுடனே அவரை அறியாமல் அவருக்குப் பயம் ஏற்பட்டது. இருந்தாலும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அந்த மரத்தின் மீது சுத்தியலால் ஆணியை அடித்தார். அடித்துவிட்ட திருப்தியில் திரும்பிய போது யாரோ சட்டையை பிடித்து இழுப்பதை உணர்ந்தார். திரும்பிப் பார்க்க அவருக்குப் பயம். வேறு வழியின்றித் திரும்பிப் பார்க்காமல் சட்டையைக் கழற்றி அப்படியே விட்டு விட்டு ஓடி வந்துவிட்டார். மறுநாள் காலை பேயை நம்பும் நண்பர், "ஆணி அடித்துவிட்டாயா? போய்ப் பார்க்கலாமா?'' என்றார். இவரும் தன்னுடைய துணிச்சலை காட்டும் விதத்தில், "ஆணியை அடித்துவிட்டேன். அங்கே பேயும் இல்லை; பிசாசும் இல்லை'' என்றார். இருவரும் சேர்ந்து சுடுகாட்டுக்குப் போனார்கள். மரத்தில் ஆணி அடித்திருந்தது என்னவோ உண்மை. அந்த ஆணியோடு சேர்த்து அடிக்கப்பட்ட சட்டையும் தொங்கிக் கொண்டிருந்தது. பயத்தில் ஆணியை அடிக்கும் போது காற்றில் பறந்து மரத்தோடு சேர்ந்திருந்த சட்டையையும் சேர்த்து அடித்துவிட்டார். மரத்தோடு சேர்த்துசட்டை அடிக்கப்பட்டு விட்டதால் யாரோ பிடித்து இழுப்பது போல் தோன்ற அவர் சட்டையை கழற்றி விட்டு வந்து விட்டார்.

பேயை நம்பிய நண்பர் சொன்னார். "பேய் என்கிற ஒன்று இருப்பதாக நானும் நம்பவில்லை. பேய் வெளியில் எங்கும் இல்லை. நம்முடைய மனதில் தான் இருக்கிறது. மனம் பயத்திற்கு இடம் கொடுக்கின்ற போது பேய் அங்கு குடிபுகுந்து விடுகிறது. நீ துணிச்சலாக கவனமாக ஆணியை அடித்திருக்க மாட்டாய். எப்படியோ ஆணியை அடித்து விட்டு வந்துவிட வேண்டும் என்கிற பரபரப்பில் நீ ஆணியை அடித்ததால் சட்டையும் சேர்த்து அடிக்கப்பட்டு விட்டது'' என்று விளக்கம் சொல்ல நண்பரும் தெளிவு பெற்றார்.

டாக்டர் கோவூர் இந்தக் கதையைச் சொல்லி பேய்கள் என்பவை மனிதனுடைய கற்பனையில் தான் இருக்கின்றனவே தவிர நிஜமாக இல்லை என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நம்முடைய பயஉணர்ச்சி அனைத்துக்கும் சிறு வயதிலிருந்தே நமக்கு அளிக்கப்படும் பயிற்சியே காரணம். காலம் காலமாக பேய் பிசாசுகள் இருக்கின்றன என்கிற நம்பிக்கை நம்முடைய இரத்தத்தில் ஊறி வந்துவிட்டதால் நம்மால் சுலபத்தில் மாற்றிக்கொள்ள முடியவில்லை. மனம் ஒரு நிலையில் இல்லாமல் தடுமாறுகின்றவர்கள் பல ஸ்தலங்களுக்குச் சென்று தெய்வங்களை தரிசிக்கும் பொழுது மனநிம்மதி பெறுவதற்கும் அந்த நம்பிக்கை தான் காரணம்.

தன்னுடைய ஆற்றலில் நம்பிக்கை வைக்கிற மனிதன் எவனும் பேய் பிசாசுகளை நம்புவதில்லை. பேய்கள் இருப்பதாக நம்புகிறவர்கள் கூட இருட்டில் தான் பேய்கள் நடமாடுவதாகச் சொல்கிறார்களே தவிர, பகல் நேரத்தில் நல்ல வெளிச்சத்தில் பேய்களைப் பார்த்ததாக எனக்கு தெரிந்த வரையில் யாரும் சொல்லி நான் கேள்விப்பட்டதில்லை.

நகரங்களில் பேய்களின் நடமாட்டம் குறைவு, கிராமங்களில் இவைகளின் நடமாட்டம் அதிகம். காரணம் தெளிவானது. மின்சார வெளிச்சம் உள்ள இடங்களில் பேய்கள் வரப் பயப்படுகின்றன. மின்சார வசதியில்லாத அல்லது குறைவான கிராமங்களில் இருளில் பேய்கள் வசதியாகக் குடிபுகுந்து விடுகின்றன. வெளிச்சத்தைக் கண்டால் பேய்கள் ஓடிவிடும் என்றால், பேய்களை விரட்டத் தேவையானது வெளிச்சமே தவிர பேய் ஓட்டும் பூசாரிகள் அல்ல.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# வாழ்வில் திட்டமிட்டு முன்னேற சமுர்த்தி செயற்பாடு வழிவகுக்கும்

## யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

சமுர்த்தி செயற்பாடுகள் உங்களது வாழ்க்கை நிலையை நீங்கள் எதிர்காலத்தில் எவ்வாறு வளப்படுத்த முடியும், என்பதை அறிந்து திட்டமிட்டு முன்னேற வழிவகுக்கக் கூடிய ஒன்றாக உள்ளது என்று யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்தின் உதவி வழங்கல், பரிசில்கள் வழங்கல் நிகழ்வுகள் அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தொழில் வளங்களைப் பெருக்கி வாழ்வில் உயர் நிலையை எட்ட வேண்டும். தொடர்ந்தும் வறுமை நிலைக்குள் உள்ளோமே என்ற எண்ணத்தில் இருந்து மக்கள் விடுபட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

மக்களது வாழ்வாதாரத்துக்காக வழங்கப்படும் உதவிகளைத் தொடர்ந்தும் மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உதவிகள் மூலம் நம்மை வளப்படுத்த முடியும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டு முன்னேறுங்கள். வேலணை சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் உங்களதும், உங்களது பிள்ளைகளதும் எதிர் காலம் குறித்து எடுத்துள்ள அக்கறை இன்றைய நிகழ்வினூடாக உணரப்படவேண்டும். அவர்கள் எடுத்த முயற்சி வெற்றி பெற வேண்டுமானால் அது செயற்பாடுகளில் தான் தங்கியுள்ளது.

மக்களின் உயர்வுக்காக தங்களது நேரத்தைச் செலவிட்டு நிதியுதவிகளைச் சேகரித்து வழங்கும் அவர்களது அர்ப்பணிப்புமிக்க சேவைக்கு உரிய பெறுமதியை நீங்கள் அளிக்க வேண்டும். கொடி விற்பனை மூலம் சேகரித்த நிதியில் கல்விக்கு மட்டுமன்றி உங்கள் வாழ்வுக்குத் தேவையான உபகரணங்களையும் சீட்டிழுப்பின் மூலம் பரிசாக வழங்கியுள்ளனர்.

ஒரு நல்ல நிகழ்வில் முதன் முதலாக யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் என்ற முறையில் கலந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது- என்றார். (எ-7)

# நடமாடும் சேவைகளைப் பயன்படுத்தி தேவையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

நவாலி, செப்.11

பிறப்புச் சான்றிதழ் ஒருவருடைய பிறப்பை உறுதிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் அதனை பெற்றுக் கொள்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.

எனவே பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் நடமாடும் சேவையைப் பயன்படுத்தி பிறப்புச் சான்றிதழைப் பெற்று உங்கள் தேவைகளை நிறைவேற்றுங்கள் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடமாடும் சேவை அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசிய தேவைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறது. நேர்முகத் தேர்வுக்கும் பாடசாலை செல்வதற்கும் அடையாள அட்டைக்கும் பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறது. எனவே இந்த நடமாடும் சேவை மூலம் பிறப்புச் சான்றிதழைப் பெறுவது இலகுவானதாக இருக்கும்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் ஒரு தேவையைக் கூட உங்களால் நிறைவேற்ற முடியாது. அந்தளவுக்கு பிறப்புச் சான்றிதழ் பெறுமதி மிக்கது.

எனவே சிரமம் பாராது பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி பிறப்புச் சான்றிதழைப் பெற்று உங்களின் அத்தியாவசிய தேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளுங்கள்- என்றார். (எ-100)

பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் ஒரு தேவையைக் கூட உங்களால் நிறைவேற்ற முடியாது. அந்தளவுக்கு பிறப்புச் சான்றிதழ் பெறுமதி மிக்கது.

# பதவி உயர்வு

துணுக்காய், செப்.11

பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தில் நீண்ட காலமாக பிரதம லிகிதராகக் கடமை புரிந்து வந்த கா.சிவப்பிரகாசம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் பதவி உயர்வு பெற்றுள்ளார். (எ-415)

# இளைஞர் அணி பொறுப்பாளர் தெரிவு

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக தலைமையகத்தின் இளைஞர் அணிப் பொறுப்பாளராக வலி. வடக்கு பிரதேச சபையின் உப தலைவர் ச. சஜீவன் தெரிவு செய்யப்பட்டார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமும், சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறையும் சேர்ந்து தமிழ்க் கல்வி மாநாடு ஒன்றை அண்மையில் சென்னையில் நடத்தியுள்ளனர்.

இந்த மாநாட்டில் வலி. வடக்கு பிரதேச சபையின் உப தலைவர் ச. சஜீவனும், பாண்டியன்குள பிரதேச சபையின் உப தலைவர் ச.செந்தூரனும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்விலேயே அனைத்துலக தலைமையகத்தின் இளைஞர் அணி பொறுப்பாளராக சஜீவன் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)



யாழ்.மாவட்டத்திலிருந்து முதன் முறையாக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநராக பொறுப்பேற்றுள்ள லயன் [illegible] கங்கராஜாவுக்கு யாழ்.நகரில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்திய வரவேற்பு நிகழ்வில் அனைத்து கழகங்களின் சார்பில் ஞாபகார்த்த பரிசு வழங்கப்படுகிறது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933,
2229944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021228 0065
தொலைநகல்: 021228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 0212262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## காலப் பிழை

இது தகவல் தொழில்நுட்ப உலகு என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதுதான் மனிதர்களை நுகர்வோராகவும் பண்டங்களாகவும் மதிக்கக் கற்றுத் தந்திருக்கிறது. அறிவியலும் தொழில்நுட்பமும் வளர வளர இந்த உலகில் மனித விழுமியங்களும் ஒழுங்குகளும் குலையத் தொடங்கிவிட்டன. எது ஒழுக்கம் என்ற கேள்விகளை இந்த அறிவியல் தொழில்நுட்ப உலகு மீள்பரிசீலனைக்கும் உள்ளாக்குகிறது.

நேற்றைய பத்திரிகைகளை ஆக்கிரமித்திருந்த ஒரு செய்தி, அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தனது மகளின் குழந்தையை [பேர்த்தி] பெற்றெடுத்திருக்கிறார் ஒரு வயது முதிர்ந்த பெண். சின்டி ரூட்ஜெல் என்ற அந்தப் பெண்ணுக்கு வயது 53. பேர்த்தியைப் பெற்றெடுத்த பாட்டி என்று ஊடகங்கள் அதனைக் கொண்டாடின.

சின்டியின் மகளுக்குப் பிள்ளைப் பேறு கிடைக்க வாய்ப்பில்லாமல் போனதால் அவரது கருமுட்டையையும் அவரது கணவனின் விந்தணுவையும் சேர்த்து செயற்கை முறையில் கருவாக்கியிருக்கிறார்கள், அந்தக் கரு சின்டியின் வயிற்றில் வளர்க்கப்பட்டது. இப்போது அந்தக் கரு குழந்தையாகப் பிரசவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையைப் பெற்றெடுத்தவர் சின்டி என்றாலும் அந்தப் பிள்ளையின் தாய் அவர் இல்லை என்கிறது இந்த அறிவியல் உலகு. இங்கேதான் மனித விழுமியங்களும் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறது.

''பெற்றால்தான் பிள்ளையா'' என்கிற தமிழ் மரபுத் தொடரை மறுத்து ''பெற்றாலும் பிள்ளையில்லை'' என்று சொல்கிறது மருத்துவ அறிவியல். அதனைப் பொறுத்தவரைக்கும் சின்டி என்கிற மனிதர் ஒரு கர்ப்பப் பை இயந்திரம் மட்டுமே. அவரது இரத்தத்தில் வளர்ந்த குழந்தை அவருக்குப் பேர்த்தி முறையே தவிர மகள் முறையல்ல. மருத்துவ அறிவியல் முடிந்த முடிவாக இதனையே சொல்கிறது.

இதுதான் இன்றைய உலகு. இந்த உலகில் எப்படியும் வாழ முடியும். தங்கள் தேவைக்காக எதையும் செய்ய முடியும். அதில் மனித ஒழுக்கம் விழுமியம் என்பவற்றுக்கு பெரிதான இடம் ஒன்றில்லை. அப்படிப்பட்ட ஓர் உலகில் வாழும் நாம் மட்டும் எப்படி விதிவிலக்குகளாகிவிட முடியும்?

எம்மால் மருத்துவ அறிவியலில் சாதிக்க முடியாவிட்டாலும் இந்த உலகுக்கு ஏற்றவகையில் தகவமைத்துக் கொள்ளும் தகுதியைக் கொண்டிருக்கிறோம் என்பதை காட்டும் சம்பவங்கள் பல நடந்தேறுகின்றன. வீட்டில் வந்து தங்கி நின்ற ஒன்றுவிட்ட சகோதரன் தங்கையைப் பலாத்காரம் செய்தமையையும் ஒன்றுவிட்ட தந்தை முறையிலானவர் மகளையே புணர்ந்தமையையும் வேறு எப்படி எடுத்துக்கொள்வது? இது அவர்களின் பிழையன்று; காலப்பிழை. இந்தக் காலத்துக்குள் வாழ்வதற்கு அவர்கள் தங்களைத் தகவமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் தேற்றிக்கொள்ளவேண்டும். ஏனெனில் இவற்றைத் தடுப்பதற்கான பொறிமுறைகள்தான் எம்மிடம் இல்லையே!



# கும்பகர்ணன் தூங்கினா...

### பாரதியார் எழுதிய கட்டுரை இது

இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. ''ராமராவண யுத்தத்திற்கு ராமராவண யுத்தமே நிகர்'' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூட, கும்பகர்ணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக்கணக்கான ஆடு மாடு குதிரைகளின் கால்களில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்னார்கள்; தூக்கம் கலையவில்லை. ஏழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடியிடிக்கச் சொல்லி ராவணன் கட்டளையிட்டானாம்; மேகங்கள் போய் இடித்தனவாம்; கும்பகர்ணன் குறட்டை நிற்கவேயில்லை.

மேற்படி கும்பகர்ணனைப்போலே சில தேசங்கள் உண்டு. அண்டங்களத்தனையும் இடிந்து விழுந்தாலும் காதுகேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சிலவுண்டு. அந்தத் தேசங்களிலே வாஸம் செய்வோர் மஹா பாவிகள். மாதுர் துரோகம், பதுர் துரோகம், சகோதரத் துரோகம், தெய்வத் துரோகம், சுதேசத் துரோகம் முதலிய பெரிய பாதகங்கள் செய்து சீரழிந்த மானிடர் அப்படிப்பட்ட தேசங்களில் வாழ்கிறார்கள்.

ஆனால், ஹிந்து தேசம் அப்படி............யில்லை! இங்கு தமிழ் நாட்டைப்பற்றியே முக்கியமாகப் பேச வந்தோம்; தமிழ் நாடு மேற்படி மஹா பாதக ஜாப்தாவைச் சேர்ந்ததன்று, அன்று!

ராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய அய்யரும், இவர்களைப்போன்ற வேறு சில மகான்களும் தமிழ் நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர். ஹிந்து தர்மத்தின் புதுக் கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ் நாடு முதலாவது அங்கீகாரம் செய்துகொண்ட பிறகுதான், வங்கம், மாஹாராஷ்ட்ரம் முதலிய ஹிந்து தேசத்து மாகாணங்கள் அவருடைய பெருமையை உணர்ந்தன.

பூமண்டல முழுதிலும் பெரிய விழிப்பொன்று வரப் போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ் நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால், இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது.

ஒரு தேசத்தின் பொதுப்புத்தியை அளந்து பார்க்க வேண்டுமானால், அதற்கு எத்தனையோ அறிகுறிகள் உண்டு. அந்த தேசத்து ராஜாங்க நிலை, தர்ம ஸ்தாபனங்களின் நிலை, கோயில்களின் நிலை முதலிய எத்தனையோ அடையாளங்களால் ஒரு தேசத்தாரின் பொது ஞானத்தை அளவிடலாம்.

இவற்றுள்ளே சமாசாரப் பத்திரிகைகளையும் ஓரடையாளமாகக் கருதத்தகும். ஆனால் ஐரோப்பா, அமெரிக்க கண்டங்களில் நடக்கும் பத்திரிகைகளுடன் தமிழ்நாட்டுப் பத்திரிகையை ஒப்பிட்டுப் பார்த்து, இவற்றின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு, 'ஆஹா' இப்படிப்பட்ட தமிழ் நாடு எங்கே பிழைக்கப்போகிறது? என்று எண்ணிப் பாழும் நெஞ்சு உடைந்து போகவேண்டாம். ஏனென்றால், வர்த்தமானப் பத்திரிகை நாமாக உண்டாக்கிய கருவியன்று. பிறரிடமிருந்து கற்றுக்கொண்ட தந்திரம். சென்ற முப்பது வருஷங்களாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும், சரியாக முதிர்ச்சி அடையவில்லை.

தவிரவும், தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் எத்தனைக் கெத்தனை மதிப்புக் கொடுக்கிறார்களோ, அத்தனைக்கத்தனை நாட்டில் மதிப்பேறி, அதனால் பத்திரிகைகளுக்கு தகுந்த லாபமுண்டாய், அதிலிருந்து சரியான வித்வான்களின் கூட்டம் யதேஷ்டமாய்ச் சேர்ந்து, அந்தத் தொழில் மேன்மையடைய இடமுண்டாகும்.

தமிழ்நாட்டில் இப்போது நடைபெறும் ராஜாங்கம் தமிழ் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. தமிழ் பாஷையை முதலாக மதிப்பதன்று. ''தமிழ் முழு நாகரிக முடையதா, இல்லையா'' என்பதைப் பற்றிய சந்தேகங்களுடையது. ஆதலால், தமிழ்ப் படிப்பில்லாமலும், தமிழ் மணமில்லாமலும் ஸந்தோஷமடைந்திருக்கும் இயல்புடையது.

தவிரவும், தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோருக்குச் சரியான திரவிய லாபம் இல்லாமலிருப்பதற்கு வேறு பல காரணங்களும் உள. அவற்றுள் பத்திராதிபர்களின் அஜாக்கிரதை (சோம்பேறித்தனம்) ஒன்று.

எனக்கு நாலைந்து முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் ஒன்று வாரப் பத்திரிகை. அது பழுத்த சுதேசியக் கட்சியைச் சேர்ந்தது. ஆனால் தக்க பயிற்சியில்லாதவர்களால் நடத்தப்படுவது.

சில தினங்களின் முன்பு அந்தப் பத்திரிகையில் யுத்த சம்பந்தமான தலையங்கம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. அதில் ருஷியாவில் 'போல்ஷெவிக்'

என்ற ஒரு மனுஷ்யன் ...
கட்சி ஏற்படுத்தி நமது ...
செய்வதாகவும் சொல்...

அஃது அந்நாட்டி...
களில் ஒன்றாகிய 'மகில...
பெயரென்றும் ஒரு ...
அல்லவென்றும் அ...
கொள்ளவில்லை. பே...
ஒவ்வொரு வியாசத்...
மேலே இங்கிலீஷ் ...
கிறது. ''ருஷியாவின் ...
Russia'', ''தாய்ப்பால...
பயிற்றல்'' 'The Ve...
ction.'' ஆஹா! நான் ...
முதலாவது போட்...
போட்டேன். அந்தப் ...
யில்லை. இங்கிலீஷ...
ழைக் கீழே போட்டிரு...
பார்த்தாயா? என்னை...
முதலாவது தமிழ் வா...


'American woman' ...
Mathadhipaties' ''நம...
எழுதியிருக்கிறது. க...
என்ன அநாவசியம் ப...

இங்கிலாந்தில் ...
ப்ரான்ஸ் தேசத்து மந்தி...
யும் பெரிய சாஸ்திரி...
நிபுணர், த்ரவ்ய சாஸ்...
தலைவர் முதலியவர்...
பல ப்ரெஞ்சு ராஜாங்க ...
யும், ப்ரெஞ்சு பத்தி...
பெயர்த்துப் போடுகிற...

அப்படியே ப்ரான்...
ஜெர்மன் பாஷையில...
மொழிபெயர்த்து எ...
மொழி பெயர்ப்புகள்...
கங்களையும் பிரயே...
அன்னிய பாஷையின்...
றும் வழக்கம் கிடையா...
முழுவதும் தமிழ் ந...
நடையில் தமிழை எ...
நமது பத்திராதிபர்க...
முதலாவது, நீ எழு...
இங்கிலீஷ் தெரியாத ...
சொல்லிக்காட்டு. அத...



கவிதை எழுது...
கவியன்று. கவி...
வாழ்க்கையாக...
வாழ்க்கையே ...
செய்தோன்,
அவனே கவி



அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதித்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
பிச்சைவாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதிலும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்பத் தில்லையே.
இச்சகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

கச்சணிந்த கொங்க மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
நச்சவாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
[illegible]கள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ழுதுபவன்
...ு. கவிதையே
...யாக உடையோன்,
...கயே கவிதையாகச்
...ன்,
...கவி

- பாரதி.

...ானாம்

...ுஷ்யன் இருப்பதாகவும், அவன் ஒரு
...த்தி நமது நேசக் கட்சிக்கு விரோதம்
...ம் சொல்லியிருந்தது!
...ந்நாட்டில் ராஜ்யப் புரட்சிக் கூட்டங்
...கிய 'மகிஸிமிஸ்த்' கட்சிக்கு மற்றொரு
...ம் ஒரு மனுஷ்யனுடைய பெயர்
...றும் அந்தப் பத்திராதிபர் தெரிந்து
...லை. மேலும், அதே பத்திரிகையில்
...பியாசத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு
...கிலீஷ் மகுடமொன்று சூட்டியிருக்
...பாவின் நிலைமை:' 'The Situation in
...ய்ப்பாஷையின் மூலமாகக் கல்வி
'The Vernaculars as media of instru
...! நான் மாற்றி எழுதுகிறேன். தமிழை
...போட்டு, இங்கிலீஷை பின்னே
... அந்தப் பத்திரிகைகளில் அப்படி
...ங்கிலீஷை முன்னே போட்டு, தமி
...பாட்டிருக்கிறது. ''அமெரிக்கா ஸ்திரீ''
... என்னைத் தெரியாமலே என் கை
...மிழ் வார்த்தை எழுதுகிறது.
...woman'' ''அமெரிக்கா ஸ்திரீ'', 'Our
...s' ''நமது மடாதிபதிகள்'', என்று
...றது. காயிதப் பஞ்சமான காலம்;
...சியம் பார்த்தீர்களா?
...ந்தில் வர்த்தமானப் பத்திரிகைகள்
...ந்து மந்திரிகளுடைய உபந்யாசங்களை
...ாஸ்திரிமார், பெரிய கைத்தொழில்
...ய சாஸ்திர நிபுணர், ஜனத்திருத்தத்
...லியவர்களின் உபந்யாசங்களையும்,
...ாஜாங்க சம்பந்தமான விவகாரங்களை
...சு பத்திரிகைகளிலிருந்து மொழி
...பாடுகின்றன.
... ப்ரான்ஸ் தேசத்துப் பத்திரிகைகள்
...ஷையிலிருந்து பல விஷயங்களை
...த்து எழுதுகின்றன. ஆனால் அந்த
...ர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்
... பிரயோகங்களையும் கைவிட்டு
...ஷையின் வசன நடையைப் பின்பற்
...டையாது. ஆனால் தமிழ் நாட்டிலோ
...மிழ் நடையைவிட்டு இங்கிலீஷ்
...ழை எழுதும் விநோதமான பழக்கம்
...ாதிபர்களிடம் காணப்படுகிறது.
... நீ எழுதப்போகிற விஷயத்தை
...ரியாத ஒரு தமிழனிடம் வாயினால்
...டு. அதன் பின்னர் எழுது.



# நம்பிக்கை இருந்தால் வானமும் வசப்படும்

''காக்கைச் சிறகினிலே நந்தலாலா
நின்றன் கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா''

''நல்லதோர் வீணை செய்து அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ''

''நெருங்கின பொருள் கைபட வேண்டும்
மனதில் உறுதி வேண்டும்''

''வட்ட கரிய விழியில் கண்ணம்மா
வானக் கருனைக் கொள்''

இந்த அழகிய வரிகள் எல்லாவற்றுக்குமே ஓர் ஒற்றுமையுண்டு. அவை அனைத்துமே ஒரே பேனாவில் இருந்து உதிர்ந்த வரிகள் வரகவி என்று அழைக்கப்பட்ட ஒரு கவிஞரால் வடிக்கப்பட்ட கவிதைகள். சினிமாப் பாடல்களாக வந்ததால் அவை பெரும் புகழ் பெற்றன. ஆனால் சினிமா நமக்குக் காட்டாத இன்னும் பல அரிய கவிதைகளை தமிழ் உலகுக்கு தந்திருக்கிறார் அந்த அமரகவி. அவர்தான் மீசைக் கவிஞன் என்றும் முண்டாசு கவிஞன் என்றும் தமிழ் இலக்கியம் உலகம் போற்றும் மகாகவி பாரதியார்.

1882 ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதி தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரம் என்னும் ஊரில் சின்னச்சாமி அய்யருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார் பாரதியார். அவருக்கு பெற்றோர் இட்ட இயற்பெயர் சுப்ரமணியன். சுப்பையா என அவரை செல்லமாக அழைத்தனர். சுப்பையாவுக்கு 5 வயதானபோது அவரது தாயார் இறந்து போனார். 2 ஆண்டுகள் கழித்து தந்தையார் மறுமணம் செய்து கொண்டார். சிறு வயதிலிருந்தே சுப்பையாவுக்கு மொழி மீது சிறந்த பற்றும் புலமையும் இருந்தது.

7 வயதிலேயே அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவருக்கு 11 வயதானபோது அவரது கவி பாடும் ஆற்றலையும் புலமையையும் வியந்து பாராட்டி அவருக்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கினார் எட்டயபுர மன்னர். அன்றிலிருந்து அவர் பெயர் சுப்ரமணிய பாரதி என்றானது. பாரதி தமிழும் கவிதையுமாக தமிழுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்க, அவரது தந்தையோ தனது மகன் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிப் பெற வேண்டும் என விரும்பி அவரைத் தமிழ்ப் பள்ளியில் சேர்க்காமல் ஆங்கிலமும் கணிதமும் பயில்வதற்காக திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு சென்று கல்வி பயின்ற பாரதி படித்துக் கொண்டிருந்தபோதே செல்லம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார் தந்தை. ஆனால் பின்னாளில் இது போன்ற பால்ய விவாகத்தை வன்மையாகக் கண்டித்தார் பாரதி. ''பாலருந்தும் மழலையர் தம்மையே கோலமாக மணத்திடைக் கூட்டும் இப்பாதகர்கள் இன்னும் ஆயிராமாண்டு அடிமைகளாக இருந்து அழிவர்'' என்று சபித்தார். நல்ல நிலையில் இருந்த பாரதியின் தந்தை எட்டயபுரத்தில் பருத்தி அரவை ஆலை நிறுவ விரும்பினார் அந்த ஆலைக்காக வெளிநாட்டிலிருந்து கப்பல்களில் வந்துகொண்டிருந்த இயந்திரங்களும் உதிரிப் பாகங்களும் கடலில் மூழ்கவே அவருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

அந்தக் கவலையிலிருந்து மீள முடியாமல் நோய்வாய்ப் பட்டு அவர் இறந்து போனார். அப்போது பாரதிக்கு வயது 16தான். தந்தையின் மறைவிற்குப் பிறகு பாரதியின் குடும்பத்தில் வறுமை வந்து சேர்ந்தது. பிறகு காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமஸ்கிருதத்தையும் இந்தியையும் கற்றார். சமஸ்கிருத மொழியில் முதல் வகுப்பில் தேறினார். ஆங்கிலக் கவிஞர்களான ஷெல்லி, பைரன் போன்றோரின் கவிதைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் பின்னாளில் ஷெல்லிதாசன் என்ற புனைப்பெயரில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

இந்தி சமஸ்கிருதம் தவிர்த்து ஆங்கிலம், பெங்காலி, ஹச் போன்ற மொழிகளிலும் புலமைப் பெற்றிருந்தார் பாரதி. அத்தனை மொழிகளில் புலமைப் பெற்றிருந்ததால்தான் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று துணிந்து சொன்னார் பாரதி. தீண்டாமையை அறவே வெறுத்தவர் பாரதி. அதற்கு தன்னையே முன் உதாரணமாக்கிக் கொண்டார். தீண்டாமை எனும் கொடுமைக்கு ஆளானோரிடம் அன்பு செலுத்தியதோடு அவர்களுக்கு இல்லாதது தனக்கு வேண்டியதில்லை என்று கூறி தான் அணிந்திருந்த பூ நூலை அறுத்தெறிந்தார்.

நான்கு ஆண்டுகள் காசியில் இருந்துவிட்டு திரும்பிய பாரதி, எட்டயபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவைக் கவிஞராகப் பணியாற்றினார். 1903 ஆம் ஆண்டு 21 ஆவது வயதில் அவரது எழுத்துக்கள் முதன்முதலில் அச்சில் வந்தன. அதற்கு அடுத்த ஆண்டு மதுரை சேதுபதிப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அதன் பின்னர் 'சுதேசமித்திரன்' பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1905ஆம் ஆண்டு சுதந்திர வேட்கை காரணமாக அரசியலில் பிரவேசிக்கத் தொடங்கினார் பாரதி.

கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சியுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சகோதரி நிவேதிதாவை சந்தித்த பாரதி அவரையே தனது ஞான குருவாக ஏற்றுக் கொண்டார். 1907 ஆண்டில் 'இந்தியா' என்ற வார ஏட்டையும் 'பாலபாரதம்' என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். அப்போது பாரதியின் கவனம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது சுதந்திரத்தை வலியுறுத்தும் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் பிரசுரித்தார், வ.உ.சிக்கு விதிக்கப்பட்ட இரட்டை ஆயுள் தண்டனையை கடுமையாகக் கண்டித்து கட்டுரைகள் எழுதினார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கவனம் பாரதி பக்கம் திரும்பியது. பாரதியை கைது செய்ய முனைந்தனர். அதனையறிந்த பாரதி தன் நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்த பாண்டிச்சேரியில் சிலகாலம் தலைமறைவாக வாழ்ந்தார்.

அவ்வாறு வாழ்ந்தபோதுதான் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம், போன்ற புகழ்பெற்ற அமரக் கவிதைகளை எழுதினார்.

அதோடு 1912 ஆம் ஆண்டு பகவத் கீதையை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார் பாரதி. பாண்டிச்சேரியில் இருந்தவாறே அவர் 'இந்தியா' பத்திரிக்கையின் மூலம் தொடர்ந்து சுதந்திர வேட்கையைத் தூண்டிவிடும் கட்டுரைகளை எழுதினார்.

பாரதியின் குரலுக்கு தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி 'இந்தியா' பத்திரிகைக்குத் தடை விதித்தது. 1918ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் இருந்து வெளியேறிய பாரதி தமிழ்நாட்டு எல்லையில் பிரிட்டிஷ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 34 நாள்கள் காவலில் வைக்கப் பட்டுப் பிறகு விடுவிக்கப்பட்டார். விடுதலையானதும் கடையம் எனும் ஊரில் குடியேறினார் பாரதி. அங்கு வறுமையில் வாடிய அவர் தனது சிரமத்தை விவரித்து எட்டயபுர மன்னருக்கு கடிதம் எழுதினார், ஆனால் பாரதிக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை.

பாரதியின் மனைவி செல்லம்மாள் வீட்டின் வறுமை தெரியாமல் கணவரைப் பராமரித்தார். அத்தகைய மனைவி வாய்த்ததால்தான் குடும்ப கவலையே இல்லாமல் தமிழ்ப் பணியிலும் பொதுவாழ்விலும் ஈடுபட முடிந்தது. வறுமையில்கூட பாரதியிடம் தன்மானமும் செருக்கும் இருந்தது. பொதுவாகக் கொடுக்கிற கை மேலேயும் வாங்குகிற கை கீழேயும் இருக்கும். ஆனால் அந்த இலக்கணத்தையும் மாற்றினார் பாரதி. ஒருமுறை அவரின் பணக்கார நண்பர் தட்டில் பணமும் பட்டாடையும் வைத்து பாரதியிடம் நீட்டினார். ''தட்டை உமது கையிலேயே வைத்திரும்'' என்று கம்பீரமாய் சொன்னபடி தமது கைகளால் அவற்றை எடுத்துக்கொண்டாராம் பாரதி.

அவர் கவிராஜன் என்பதால் அத்தனை மிடுக்கு என்று கூறுகிறது ஒரு குறிப்பு. மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லா உயிர்களுக்கும் வயிறு நிறைய வேண்டும் என விரும்பியவர் பாரதி. அதனால் வீட்டில் செல்லம்மாள் வைத்திருந்த கொஞ்சம் அரிசியையும் காகங்களுக்கு வாரி இறைத்து விட்டு மதியம் உண்ண உணவு இல்லாமல் அவர் பசியோடு இருந்த நாள்களும் உண்டு. ''காக்கைக் குருவி எங்கள் ஜாதி'' என்று பாடியவராயிற்றே!

ஒருசமயம், நண்பர் ஒருவர் தமக்கு அளித்த பட்டாடையை வழியில் மேலாடையின்றி அவதிப்பட்ட ஓர் ஏழைக்கு போர்த்தி மகிழ்ந்தார் பாரதி. இப்படி தாம் வறுமையில் வாடியபோதுகூட மற்றவர்களுக்கு வாரி வழங்கினார் அந்த மகாகவி. ஆனால் அவரது வாழ்க்கையில் வறுமையைத் தந்த இயற்கை அவரது ஆயுளிலும் தாராளம் காட்ட மறுத்துவிட்டது. 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் தான் வழக்கமாகச் செல்லும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றார் பாரதி. எதிர்பாராவிதமாக அந்தக் கோவில் யானை அவரைத் தூக்கி எறிந்தது. அதனால் பலத்த காயமுற்று நோய்வாய்ப்பட்டார். சிறிது நாள்களில் வயிற்றுக் கடுப்பு நோயால் அவதியுற்று அதே ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தனது 39 ஆவது வயதில் காலமானார்.

இளம் வயதிலேயே அவர் மாண்டது அவலம் என்றால் அதை விட இன்னும் ஒரு சோகமான நிகழ்வை 'கவிராஜன் கதை' என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார் கவிஞர் வைரமுத்து. பாரதியின் இறுதி ஊர்வலத்தில் மிகச் சிலரே கலந்துகொண்டனராம். அதனைக் குறிப்பிடும்போது: ''இறுதி ஊர்வலத்தின் எண்ணிக்கை இருபதுக்கும் குறைவாக இருந்ததாம். தோழர்களே! மகா கவிஞனுக்கு மரியாதை பார்த்தீரோ அவன் உடம்பில் மொய்த்த ஈக்களின் எண்ணிக்கையில் கூட ஆள்கள் இல்லையே!''

தமிழ் பாரதிக்கு கிடைத்த வரம் பாரதி தமிழுக்கு கிடைத்த வரம். பாரதி குழந்தைகளுக்காகப் பாடினார். பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடினார். அறியாமை நீங்கவும் ஜாதி வெறியை சாடவும் நாடு விடுதலைப் பெறவும் பாடினார். அந்தத் தீர்க்கத்தரிசியின் பல கனவுகள் பலித்தன.

அவர் இன்னும் அதிகம் காலம் வாழ்ந்திருந்தால் தமிழ் இன்னும் வளம் பெற்றிருக்கும், தமிழனும் வளம் பெற்றிருப்பான். மனித நேயமும் பெண் முன்னேற்றமும் ஜாதி ஒழிப்பும் சமத்துவமும் வறுமை ஒழிப்பும் தான் பாரதியின் வாழ்க்கைக் கனவுகளாயின. அந்தக் கனவுகள் மெய்ப்படும் என்ற தன்னம்பிக்கையை அவர் எப்போதுமே இழந்ததில்லை.

நமக்கும்கூட அந்த விதி பொருந்தும். நாம் விரும்பும் இலக்கை நோக்கி தன்னம்பிக்கையோடு பயணித்தால் நாம் விரும்பும் வானம் நமக்கும் வசப்படும் என்பதுதான் பாரதியின் 39 ஆண்டுகால வாழ்க்கை நமக்கு சொல்லும் முக்கிய பாடம்! நாமும் வாழ்க்கையில் நம்பிக்கையோடும் விடாமுற்சியோடும் போராடினால் நமக்கும் அந்த வானம் வசப்படாமலா போகும்!

நன்றி: ஈகரை தமிழ்க் களஞ்சியம்

## பாரதி : சிறு குறிப்புகள்

### பத்திரிகையாளன்

தமிழின் கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர். தம் எழுத்துக்களின் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர். இவரின் சமகாலத்தைய மனிதர்கள் மகாத்மா காந்தி, பால கங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ. சிதம்பரம்பிள்ளை மற்றும் மகான் அரவிந்தர் ஆகியோர்.

பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக நவம்பர் 1904 முதல் ஓகஸ்ட் 1906 வரை பணியாற்றியதோடு தம் வாழ்நாளின் இறுதியிலும் ஓகஸ்ட் 1920 முதல் செப்டம்பர் 1920 வரை அந்த இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி மறைந்தார். 'சக்கரவர்த்தினி' என்ற மகளிர் மாத இதழிலும் (ஓக. 1905 - ஓக. 1906), 'இந்தியா' என்ற வார இதழில் (மே 1905 - மார்.1906/செப்.1906, புதுச்சேரி: 10.19.1908- 17.05.1910), 'சூரியோதயம்' (1910), 'கர்மயோகி' (டிசெம்பர் 1909-1910), 'தர்மம்' (பெப். 1910) என்ற இதழ்களிலும் 'பாலபாரதா ஆர் யங் இண்டியா' என்ற ஆங்கில இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

### தேசியக் கவி

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசிய கவியாக போற்றப்படுகிறார். ''மண்ணும் இமயமலை எங்கள் மலையே... மாநிலமீதுபோல் பிறிதிலையே... இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே... இங்கிதன் மாண்பிற்கெதிர் எது வேறே'' என்று எழுதியவர்.

தன்னுடைய தாய்நாட்டை நினைந்து பெருமை கொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர். ''வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்றவர், பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்றார்.

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர்செய்யும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விடுதலைக்கு முன்பே கனவுகண்டவர்.

''ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்'' என்று விடுதலைக்கு முன்பாகவே பா[illegible] விடுதலைக்கு முன்பாகவே உயிர்நீத்தவர்.

### புதுக்கவிதைப் புலவன்

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடல்களின் இலக்கணக் கட்டுக்களைத் தகர்த்தெறிந்தவன். இவருக்கு முன்பாக கவிபுனைந்த கவிஞர்கள் தொல்காப்பிய இலக்கணம் சிறிதும் வழுவாமல், பொருள்கொள், யாப்பு, அணி என இலக்கணத்தில் கட்டுண்டு கற்றோர் மட்டும் கற்றறியும் கவிதைகளையே புனைந்தனர்.

இலக்கணச் சட்டங்களைத் தகர்த்தெறிந்த பாரதி, புதுக் கவிதை எனப் புகழப்படும், பாமரரும் கேட்டுணரும் வசன கவிதையைத் தமிழுக்குத் தந்தவர்.

### பெண்ணுரிமைப் போராளி

தமிழகத்தில் முதலில் பெண்ணுரிமையைப் பேசியது பாரதியாகத்தான் இருக்க முடியும். ''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத் திருநாட்டில் மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே'' என பெண்ணுரிமையை ஏத்தினார். ''போற்றி போற்றி யோராயிரம் போற்றி நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகான்'' என்ற பாரதி, ''பெண்மை வாழ்கவென கூத்திடுவோமடா'' என்றார். பெண்களின் கல்வியறி வுக்காகவும் சட்டங்களைச் செய்திடவும் கனவு கண்ட பாரதி, சாதம் படைக்க மட்டு மல்லாது தெய்வச் சாதிபடைக்கவும் பெண்கள் தகுதிபடைத்தவர்கள் என்று கண்டார்.

### பாஞ்சாலி சபதம்

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியை பாரத தேவியாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் பாஞ்சாலி சபதம். அழகிய இலக்கிய நயத்தையும், மிக அழகான கவிநயத்தையும் கொண்ட தமிழின் அழியாக் காவியமாகபாரதியின் பாஞ்சாலி சபதம் விளங்குகிறது.

### பாரதியார் நினைவுச் சின்னங்கள்

தமிழ்நாடு அரசு மகாகவி பாரதியார் நினைவினைப் போற்றும் வகையில் பாரதியார் நினைவுச் சின்னங்களாக -எட்டயபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாகவும், சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாகவும், கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர் பிறந்த எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மைய மண்டபத்தில் மகாகவி பாரதியின் ஏழு அடி உயர திருவுருவச்சிலை அமைக்கப்பட்டு 11-12-1999 அன்று பஞ்சாப் மாநில முதல்வர் தர்பாராசிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 25 சதுர அடி பரப்பளவில் 1,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் திறந்தவெளிக் கலையரங்கம் உள்ளது. இங்குபாரதியின்வாழ்க்கைவரலாறுதொடர்பானபுகைப்படக்கண்காட்சியும்வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளை எப்படி வாழ வைப்பது

ஓர் ஊரில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் சுவாமி கும்பிடுவார்.

ஆனால், ஒன்று... அவருக்கு சிவனைப் பிடிக்கும். பார்வதியைப் பிடிக்காது. எனவே சிவனை மட்டும் வணங்கி விட்டு வந்து விடுவார்.

கோயிலில் சிவனும், பார்வதியும் ஒன்றாக உட்கார்ந்திருந்தாலும் இவர் என்ன செய்வார் தெரியுமா? அவர்கள் இருவருக்கும் நடுவிலே புகுந்து சிவனை மட்டும் மூன்று முறை சுற்றி வணங்கி விட்டு வந்து விடுவார்.

பார்வதிக்கு கோபம். தன்னைப் புறக்கணிப்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தாள். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தாள். அதை நடைமுறைப்படுத்தவும் செய்தாள்.

அதாவது- ஒரு முறை அந்த முனிவர் வந்த சமயத்தில்... பார்வதி, சிவனோடு இணைந்து அர்த்தநாரீஸ்வராக காட்சியளித்தாள்.

ஒரே உடலில் பாதி சிவன், பாதி பார்வதி, இதைக்கண்ட முனிவர் திகைத்தார்.

இந்தச் சங்கடத்தை எப்படிச் சமாளிப்பது?

யோசித்தார் அந்த முனிவர்.

உருவத்தை மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி முனிவருக்கு இருந்தது. எனவே, அவர் ஒரு வண்டாக மாறினார். அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு துளையைப் போட்டார். அதன் வழியே உள்ளே புகுந்தார்.

மூன்று முறை சிவனை மட்டும் சுற்றி வணங்கி விட்டு புறப்பட்டுப் போய்விட்டார்.

பார்வதிக்கு மிகப் பயங்கரமான கோபம் ஏற்பட்டது. அவளால் பேசாதிருக்க முடியவில்லை. சிவனைப் பார்த்துச் சொன்னாள். ''இதோ பாருங்கள்... நான் என்ன செய்தாலும் நீங்கள் அதில் தலையிடக்கூடாது! என்ன...!'' என்றாள்.

''சரி!'' என்றார் சிவன்.

பார்வதி அந்த முனிவரை அழைத்தார். ''இதோ பாரப்பா! நீஎன்னை அவமானப்படுத்தினாய்! சக்தியான என்னை நீ அவமதித்ததால் இந்த விநாடியிலிருந்து உன் உடம்பில் உள்ள சக்தி போகட்டும்!'' என்றார்.

அவ்வளவு தான். அந்தக்கணமே சக்தியெல்லாம் இழந்து வெறும் சக்கையாகி விட்டார் முனிவர்.

பரம்பொருளான சிவனைப் பார்த்து அலறத் தொடங்கினார். ''நமசிவாய.... தவிக்கும் உன் பக்தனைக் காப்பாற்று... !'' என்றார்.

''பக்தனே! உன் அறியாமைக்காக வருந்துகிறேன்!''

''என்ன சொல்கிறீர் ஈசா?''

''நானும் சக்தியும் ஒன்று தான்!''

''அடக்கடவுளே! இத்தனை நாளாக வணங்கிக் கொண்டு இருக்கின்றேன். இதை முன்பே சொல்லியிருக்கலாம் தானே என்ன?''

இன்றைய பக்தர்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது!

'எல்லாம் ஒன்று' என்கிறான் இறைவன் . இல்லை... வேறு வேறு! ' என்கிறான் மனிதன்.

இந்த மனிதனை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மனிதர் மதங்களை உண்டாக்கினார்கள்.



ஆனால், இன்றைய மதங்களுக்கு இருக்கிற கவலை - மனிதனை எப்படி வாழ வைப்பது என்பதல்ல! கடவுளை எப்படி வாழ வைப்பது என்பது தான்!

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# தொன்மை மிகு வரலாற்றுக் காப்பகமான யாழ். தொல்பொருள் அருங்காட்சியகம்

**எஸ்.யேசுதாஸ்**



புராதன காலந் தொட்டு மக்களின்வாழ்வு முறையின் பரிமாண வளர்ச்சிப்படிகளையும், அவர்கள் வாழ்ந்த தொன்மையான இடங்களையும், இனங்கள், குழுமங்களின் பூர்வீக வரலாறுகளையும், அவரவர்கள் சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல், கலை, கலாசார, பண்பாட்டு, விஞ்ஞான செயற்பாடுகளையும், பண்டைய நாகரிக வளர்ச்சி முறைகளையும், ஒவ்வொரு இனத்தின், மொழி, மத இருப்புக்களையும், அவற்றின் பரம்பல்களையும் மற்றும் இன்னோரன்ன விடயங்களைக் கால வரையறைகளோடு கோடிட்டுக் காட்டி நிற்பது தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் புதைபொருள் அருஞ் சின்னங்களாகும்.

இவ்வாறான ஆய்வுகள் வழியாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிறப்புடன் விளங்கி கால ஓட்டத்தால் பூமியினுள் அமிழ்ந்து போன பல நகரங்கள், நாகரிக நதிப்படுக்கை வரலாறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல அரிய உயிரின எச்சங்கள், பயன்பாட்டுப் பொருள்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான அரிய பொருள்கள் மனித தோற்றுகையின் வரலாற்றிற்கும் பூமிப் பந்தை அன்றிலிருந்து இன்றுவரை எவ்வாறு மனிதன் ஆட்சி செய்து, நிர்வகித்து அனுபவித்தான் என்பதற்கும் சான்றாகவும் விளங்குகின்றன.

இந்த அரிய வரலாற்றுப் பொக்கிஷங்கள் அழிவுற்று சிதைவடைந்து மறைந்து போகாதிருக்கவும் தொடர்ந்து வரும் சந்ததிகளும் தொல்லியல் வரலாற்று ஆவணச் சான்றுகளை அறிந்து வரலாற்றை தெரிந்து கொள்ளவும் பாதுகாத்து காட்சிப்படுத்தவும் உலகெங்கும் பல தொல்பொருள் அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன.

இந்த வகையில் இலங்கையின் மரபுரிமைகளை வெளிப்படுத்தும் பல அருங்காட்சிக் கலைக் கூடங்கள் தேசிய பிராந்திய மட்டங்களில் அமைக்கப்பட்டு அவ்வப் பிராந்திய தொல்லியல், வரலாறு, பண்பாடு சார்ந்த கலைப் பொருள்கள், சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டு மக்களிடையே கடந்து போன வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தும் நூதனசாலைகள் (மியூசியம்) அமைக்கப்பட்டன.

**இலங்கையில் அருங்காட்சியகங்கள் தோற்றம் பெறுவதற்கு பிரித்தானியர் ஆட்சிக் காலமே கால்கோளாக அமைந்தது. பிரித்தானிய ஆட்சியில் இங்கு பணிபுரிந்த படைவீரர், நிர்வாகிகள், பொறியியலாளர்கள், ஆய்வாளர்கள் புராதன தலை நகரங்களாக விளங்கிய அனுராதபுரம், பொலநறுவை, கண்டி போன்ற இடங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களின் போதும் கண்டு பிடித்த புராதன சின்னங்களை ஆராய்ந்து அரச அலுவலகங்களில் பாதுகாத்து வந்தனர்.**

இலங்கையில் அருங்காட்சியகங்கள் தோற்றம் பெறுவதற்கு பிரித்தானியர் ஆட்சிக் காலமே கால்கோளாக அமைந்தது. பிரித்தானிய ஆட்சியில் இங்கு பணிபுரிந்த படைவீரர், நிர்வாகிகள், பொறியியலாளர்கள், ஆய்வாளர்கள் புராதன தலை நகரங்களாக விளங்கிய அனுராதபுரம், பொலநறுவை, கண்டி போன்ற இடங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களின் போதும் கண்டு பிடித்த புராதன சின்னங்களை ஆராய்ந்து அரச அலுவலகங்களில் பாதுகாத்து வந்தனர்.

இந்த அரிய வரலாற்றுச் சின்னங்களைக் கண்ணுற்ற ஸ்மித்தேக்ஸ் என்பவரின் மனதில் அனைத்தையும் ஒன்றிணைத்து அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கும் திட்டம் உருவானது. அதன்படி 1873 இல் கொழும்பில் முதலாவது தொல்பொருள் காட்சிச்சாலையை நிறுவினர். அதற்கான கட்டடப் பணிகள் 1875 இல் முடிக்கப்பட்டு அது 1877 இல் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. முழுக்க முழுக்க ஐரோப்பிய காலக் கலைமரபில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் இன்றும் தென்னாசியாவில் உள்ள முக்கிய அருங்காட்சியகங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. இது 1942 இல் தேசிய அருங்காட்சியகமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து அனுராதபுரம், பொலனறுவை, இசுறுமுனி, கதிர்காமம், மிகிந்தலை, யாழ்ப்பாணம், வவுனியா, வெகெரகல ஆகிய இடங்களில் பிராந்திய நூதன சாலைகள் அமைக்கப்பட்டன. வடபகுதியில் உள்ள புராதன சின்னங்களைத் தாங்கிய தொல்பொருள் காட்சிக் கூடங்கள் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாண தொல்பொருட் காட்சிச்சாலை நாவலர் வீதியில் நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. இங்கு தொல்லியல் திணைக்களத்தினால் அகழ்வாராய்ச்சிகள் மூலம் பெறப்பட்ட அரிய சின்னங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட புராதன கலைப் பொருள்கள், வரலாற்று ஆவணச் சின்னங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நாவலர் வீதியில் இயங்கி வரும் நூதனசாலை முதலில் ஆரம்பிக்கப்பட்ட இடம் யாழ். பிரதான வீதி இரண்டாம் குறுக்குத் தெருவிலாகும். இந்தப்பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் 1956 ஆம் ஆண்டு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு அங்கு யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட பலதரப்பட்ட தொல்லியல் வரலாற்றுச் சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

ஆயினும் இதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் தனிப்பட்ட முறையில் அருங்காட்சியகம் இருந்துள்ளதாக பிரித்தானியர் ஆட்சிக் கால குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது. சென்ஜோன்ஸ் கல்லூரி வளாகத்தில் மலை வேம்பு மரங்களுக்கிடையில் மூன்று மண்டபங்களைக் கொண்ட துவைனம் மியூசியம் பிரதான வீதியை நோக்கியதாக 1918 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

பிரித்தானிய ஆட்சி நிர்வாகத்தில் அதிகாரியாக 1896 வரை கடமையாற்றிய சேர் வில்லியம் துவைனம் என்பவரின் ஞாபகார்த்தமாக அவரது மகளான நோறா துவைனம் என்பவரால் வில்லியம் துவைனத்தின் 91 ஆவது பிறந்த தினமான 22.03.1918 இல் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரச நிர்வாக சேவையில் 1896 வரை பணியாற்றிய துவைனத்தால் 50 ஆண்டுகளாக அரச செயற்பாடுகளின் போதும் பொதுமக்களிடமிருந்தும் பெறப் பட்ட புராதன சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயினும் காலப்போக்கில் இந்தஅருங்காட்சியகம் அழிவடைந்து விட்டது. அங்கிருந்த பொருள்கள் தற்போதைய அருங்காட்சியகத்திற்கு மாற்றப்பட்டதா என்பதை அறிய முடியாது உள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனைப் பூங்காவில் திரளும் சுற்றுலாப் பயணிகள்



கண்டி,செப்.11

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ள பேராதனைப் பூங்காவைப் பார்வையிடுவதற்காக நாளாந்தம் சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணமுள்ளனர்.

பேராதனைப் பூங்காவைப் பார்வையிடுதற்காக வருடம் தோறும் குறைந்தபட்சம் 12 லட்சம் சுற்றுலாப் பய ணிகள் வருவதாக பேராதனைப் பூங்கா அதிக்ாரிகள் தெரிவித்தனர். இந்தப் பூங்கா 1821ஆம் ஆண்டு ஆங்கி லேயரின் ஆட்சிக்காலத்தில் சட்டபூர்வமாக அரச நிர்வாகத் துக்கு உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 11 பேரில் பிள்ளையான் மட்டுமே வெற்றி

### ஆளுங்கட்சியில் போட்டியிட்ட கருணாவின் சகோதரி படுதோல்வி

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட 11 வேட்பா ளர்களில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டுமே இந்தத் தடவை வெற்றிபெற்றுள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின்படி மாவட்ட ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 35 பேரில் 15 பேர் முஸ் லிம்கள். தமிழர்கள் 12 பேரும், சிங்களவர்கள் 8 பேரும் இம் முறை மாகாணசபைக்கு இன ரீதியாகத் தெரிவுசெய்யப்பட் டுள்ளார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட 11 வேட்பாளர்களில் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டுமே இந்தத் தடவை வெற்றிபெற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட பிரதிஅமைச்சர் கருணாவின் சகோதரியான ருத்ரமலர் ஞானபாஸ்கரன் படுதோல்வியடைந்துள்ளார். இவரே முதலமைச்சருக்குப் பொருத்தமானவர் என பிரதியமைச்சர் கருணா பிரசாரக்கூட்டங்களில் முழங்கி வந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)

# தமிழினத்தின் தனித்துவத்தை பறைசாற்றியது தேர்தல் முடிவு

### கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு கோணேஸ்வரன் நன்றி

திருகோணமலை,செப்.11

தமிழ் மக்கள் ஒருபோதும் பதவிக்கும் சலுகைக்கும் சோரம்போகமாட்டார்கள். அச் சுறுத்தல்களையும் இழப்பு களையும் கண்டு தங்கள் போராட்டத்தைக் கைவிட மாட்டார்கள் என்பதை கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடி வுகள் பறைசாற்றி நிற் கின் றன. எனவே, தமிழினத்தின் தனித்துவத்தை நிலைநாட்டு வதற்காக - தமிழ்த் தேசிய இருப்பைத் தக்கவைப்ப தற்காக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த தமிழ்பேசும் மக்கள் அனை வருக்கும் கூட்டமைப்பின் சார் பில் நன்றி கூறுகிறேன்.

-இவ்வாறு தெரிவித் துள்ளார் தமிழரசுக் கட்சியின் திருமலை மாவட்ட உபதலை வரும், அந்தமாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாள ருமான கவிஞர் கந்தவனம் கோணேஸ்வரன்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

கிழக்குத் தேர்தல் முடிவு கள் மூலம் சர்வதேசத்துக்கும் இலங்கை ஆட்சியாளருக்கும் தமிழ் மக்கள் ஒரு தெளிவான செய்தியைத் தெரிவித்துள் ளார்கள். நீதியான உரிமைக் காக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பின்னால் அணி திரண்டுள்ளோம் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டியுள் ளார்கள்.

உண்மையில் கிழக்குத் தேர்தல் முடிவு தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத் தியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அதிகூடிய வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியீட்டியுள்ளது. அதே போல், தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோண

**உண்மையில் கிழக்குத் தேர்தல் முடிவு தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத் தியுள்ளது.**



மலையையும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு தன்வசப் படுத்தி முதலிடத்தில் நிமிர்ந்து நிற்கிறது.

இது கடவுளாள் வழங்கப் பட்ட ஓர் அரிய சந்தர்ப்பம். இந்தப் பொன்னான சந்தர்ப் பத்தை நாம் உரிய முறையில் பயன்படுத்தி எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப் பதற்கான அடுத்த நகர் வுக்குத் தயாராக வேண்டும்.

திருமலையில் தமிழ்க் கூட்டமைப்பு மேலுமொரு ஆசனத்தைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு அதிகமாகவே இருந்தது. ஆனால், அது துர திஷ்டவசமாக நழுவிச்சென்று விட்டது. எமது மக்களின் வாக் களிப்பு வீதம் இன்னும் அதி கமாக இருந்திருந்தால் அந்த ஆசனத்தைக் கைப்பற்றி ஆட்சி யமைக்கக் கூடிய பலத்தை மிக இலகுவில் பெற்றிருக்க முடி யும். சலுகைக்காகவும் பணத் திற்காகவும் விலை போவோர் தமிழர்கள் அல்லர் என்பதை எமது மக்கள் மீண் டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டியுள் ளார்கள்.- என்றுள் ளது. (ச)

## உறுதியான முடிவை எடுப்பது அவசியம்

### மு.கா. பிரதித் தலைவர் கூறுகிறார்

அம்பாறை,செப்.11

மத்திய அரசில் இருந்து கொண்டு கிழக்கு மாகாணத் தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவு எடுப்பதென்பது சாத்தி யமற்றதாகவே இருக்கும். எவ்வாறாயினும் உறுதியான முடிவுடனேயே நிலைப் பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித்தலைவர் காபீஸ் நஷீர் அகமட் சயினுலாப்தீன் தெரிவித்தார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணம் முஸ் லிம் முதலமைச்சர் ஒருவரைக் கொண்ட முஸ்லிம் மாகாண மாக இருக்க வேண்டும் என் பதில் உறுதியாக இருக்கிறோம். இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களும் சிங்களவர்க ளினதும், வடமாகாணம் தமி ழர்களுக்கானது என்றும் உறு திப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சரைக் கொண்ட மாகாணமாக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பது என்றால் அரசில் இருந்து விலகியே அதனைச் செய்தாக வேண் டும். எப்படியிருந்தாலும் உறு தியான முடிவுடனேயே நிலைப் பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

மட்டக்களப்பில் கல்குடா தொகுதியில் அரசியல் வாதி களின் அடாவடித்தனம் கார ணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடைக்க வேண்டிய ஒரு உறுப்பினர் இல்லாது போயுள்ளது. அத னைப் பெற் றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள் ளேன்.

பிரதேசவாதம் கடந்த ஓர் அரசியலை செய்யவுள்ளேன். இத்தேர்தலில் எமக்கு ஆதரவு தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு மிகுந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கி றேன். எனது சேவை தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்படும்- என்றார். (ச)

## அம்பாறையில் மண் கவ்விய மாகாணசபை உறுப்பினர்கள்

அம்பாறை,செப்.11

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இம்முறை அம்பாறை மாவட்டம் சார்பாகப் போட்டியிட்ட முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் பலர் தோல்வியடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான கல்முனையைச் சேர்ந்த கே.எம்.எம். ஜவாத், எம்.ஏ. அப்துல் மஜீத் ஆகியோர் இம்முறை தோல்வி யடைந் துள்ளனர். அமைச்சர் அதாவுல்லாவின் அணி சார்பாகக் கடந்த முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாகாணசபை உறுப்பினராகவிருந்து இந்தமுறை முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்ட மருதமுனையைச் சேர்நத எம்.எல்.துல்கர் நஹீம் என்பவரும் தோல்வியைத் தழுவியுள்ளார். (ச)

## திஸ்பனை- எல்ஜின் வீதி காப்பெற் வீதியாக மாறியது

லிந்துலை,செப்.11

லிந்துலை பிரதேசத் துக்குட்பட்ட திஸ்பனை- எல் ஜின் வரையிலான பிரதான வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பணிப்புரையின் கீழ் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப் புக் குழுத் தலைவரும் கால் நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்ச ருமான ஆறுமுகன் தொண்ட



மானின் வேண்டுக் கோளுக் கிணங்க சுமார் 240 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கைபேசிகளை திருடிய சிப்பாய் சிக்கினார்

திருகோணமலை,செப்.11

திருகோணமலை துறை முகப் பொலிஸ் பிரிவில் உள்ள நெல்சன் சினிமா திரை யரங்குக்கு முன்னால் 36,000 ரூபா பெறுமதியான கைய டக்கத் தொலைபேசிகளைத் திருடிய கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்ற தாக திருகோணமலை துறை முகப் பொலிஸார் தெரிவித் தனர்.

திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளுடன் சந் தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபர் திருகோண மலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளார். (ச)


## கிழக்கில் ஆட்சி அமைப்பதற்கு அரசைத் தவிர யாருக்கும் ஆதரவு

### உறுதியளிக்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

மட்டக்களப்பு,செப்.11

கிழக்கு மாகாணத்தில் அரசைத் தவிர வேறு யார் ஆட்சியை அமைத்தாலும் அவர்களுக்கு ஐக்கிய தேசி யக் கட்சி முழு ஆதரவையும் வழங்கும். அரசுக்கு வட மத் திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் 60 ஆயிரத்து 422 வாக்குகள் குறைவடைந் துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு லட் சத்து 26 ஆயிரத்து 891 வாக் குகள் அதிகரித்துள்ளன என்று ஐ.தே.க. வின் பொதுச் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட செய்தி யாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட் சிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். அதேபோன்று நடைபெற்று முடிந்த மூன்று மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகள் குறித்து ஆராய சட்டத்தரணி தயா பெல்பெல மற்றும் கௌரி சங்கரி தவராசா தலைமையிலான ஐவர் அடங்கிய குழு அறிக்கை தயாரிக்க உள்ளது .

திருகோணமலை முதலா வது வாக்களிப்பு நிலையத் தில் வாக்கு கணிப்புகளில் மோசடிகள் இடம்பெற்றுள் ளன. இதனைத் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட் டுள்ளோம். கிழக்கு மாகா ணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்தால் ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவை வழங்கும்.

எவ்விதமான ஆதரவும் ஆளும் கட்சிக்கு ஐ.தே.க. வழங்காது. பொது மக்கள் தற்போது மாற்றி யோசிக்க ஆரம்பித்துள்ளனர். அரசின் வாக்குகளில் வீழ்ச்சி காண்கின்றமை அரசியல் மாற்றத்தின் ஆரம்பமாகும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் புதிய சிந்தனை உருவாகும். தொழில் வளர கூடுதல் கவனம் கொள்வீர்கள். தொழில் நுட்ப அறிவு வளரும். தாராள பணவரவு வந்து சேரும். உங்கள் வாழ்வியல் அனுபவத்தை உறவினரிடம் சொல்வீர்கள்.

**இடபம்:** நிதான செயலால் மட்டுமே நன்மை பெறுகிற வாய்ப்பு அதிகரிக்கும். சகத்தொழில் சார்ந்த எவருடனும் சச்சரவு கூடாது. வேலைப் பளு அதிகரிக்கும். பணவரவில் மந்த நிலை இருக்கும். புதிய செலவு ஏற்படுவதால் சேமிப்பு பணம் செலவாகலாம்.

**மிதுனம்:** உங்களின் அனுபவ அறிவு பரிமளித்து கூடுதல் புகழ் பெறுவீர்கள். பிறருக்கு உதவும் பனப்பாங்கு வளரும். தொழில் வளர்ச்சியில் சாதனை இலக்கை அடைவீர்கள். இயன்ற அளவில் அறப்பணி செய்வீர்கள். தாயின் அன்பு, ஆசி பலமாகக் கிடைக்கும்.

**கடகம்:** உங்களின் செயல்களில் சீர்த் திருத்தம் செய்வது அவசியமாகும். புதிய சூழ்நிலைகளை சரி செய்ய அனுபவசாலிகளின் ஆலோசனை உதவும். கூடுதல் உழைப்பால் தொழில் வளர்ச்சியில் இருந்த தாமதம் விலகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். எந்தப் பொருளையும் நிர்ப்பந்தத்தின் பேரில் வாங்கக்கூடாது.

**சிங்கம்:** உங்கள் எண்ணத்திலும், செயலிலும் கூடுதல் உற்சாகம் ஏற்படும். பிறர் நலன் கருதி செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சி அதிர்ஷ்டகரமாக முன்னேற்றம் பெறும். கூடுதல் பணவரவை தகுந்த சேமிப்பாக மாற்றுவீர்கள். உறவினர்களிடம் இந்த மனக்கவலை சரியாகும்.

**கன்னி:** உங்கள் திறமையை வளர்க்கும் விதமாக செயற்படுவீர்கள். நண்பர், உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். ஆதாய பணவரவு எதிர்பார்ப்பை விட அதிகம் கிடைக்கும்.

## நாளை

ஆவணி - 27 புதன்கிழமை 12.09.2012
திதி: ஏகாதசி மு.ப. 10.16 வரை
நட்சத்திரம்: பூசம் பி. இ. 03.46 வரை
சுபநேரம்: 04.33- 06.03 வரை
ராகுகாலம்: 12.03- 01.33 வரை

**துலாம்:** உங்கள் மனதில் குழப்பமான சிந்தனை இருக்கும். அறிமுகம் இல்லாதவரின் பிரச்சினையில் ஆலோசனை சொல்ல வேண்டாம். தொழிலில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவு குறைந்தளவில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். பொறுமை காப்பதால் நன்னிலை ஏற்படும். தொழில் சார்ந்த குளறுபடி சரிசெய்வது நல்லது. பணப் பரிவர்த்தனையில் உரிய பாதுகாப்பு நடைமுறை அவசியம். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**தனுசு:** உங்களின் வெளி வட்டாரப் பழக்கம் புதிய நன்மை ஒன்றைப் பெற்றுத்தரும். தொழிலில் அபரிதமான வளர்ச்சி உண்டு. கூடுதல் பணவரவில் சேமிக்கவும் வழி உண்டு. உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**மகரம்:** உங்களுக்கு வாழ்வில் புதிய நம்பிக்கை ஏற்படும். ஆதாய பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் வெற்றி பெறுவீர்கள்.

**கும்பம்:** உங்களை நிர்ப்பந்தம் செய்து சிலர் சாதகமாகப் பயன்படுத்த எண்ணுவர். எந்த சூழ்நிலையிலும் அவர்களுக்குத் துணை போக வேண்டாம். தொழில் முறை சீராக புதிய நடைமுறை உதவும். பணவரவு குறைவதால் சேமிப்பை பயன்படுத்துவீர்கள். சீரான ஓய்வு, உடல் நலம் காக்கும்.

**மீனம்:** நீண்ட நாள் தாமதமான செயலில் புதிய திருப்பம் ஏற்படும். உங்களை விமர்சித்தவர் புகழ்வது போல பாசாங்கு செய்து பேசுவர். தொழில் வகையில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். வருமானத்தை விட செலவு அதிகரிக்கும். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 6 | | 2 | | 5 |
| 6 | 5 | | | | 1 | 7 | | |
| 1 | 2 | | | | | 8 | 4 | |
| | 9 | 3 | | 5 | | | 8 | 2 |
| | | | 3 | | 2 | | | |
| 5 | 4 | | | 7 | | 1 | 3 | |
| | 6 | 5 | | | | | 7 | 8 |
| | | 1 | 7 | | | | 2 | 4 |
| 2 | | 7 | | 4 | | 3 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 6 | 2 | 9 | 4 | 7 | 1 |
| 2 | 4 | 7 | 8 | 5 | 1 | 6 | 3 | 9 |
| 1 | 6 | 9 | 4 | 7 | 3 | 8 | 5 | 2 |
| 6 | 1 | 2 | 9 | 8 | 7 | 5 | 4 | 3 |
| 5 | 7 | 4 | 2 | 3 | 6 | 9 | 1 | 8 |
| 3 | 9 | 8 | 5 | 1 | 4 | 7 | 2 | 6 |
| 4 | 2 | 3 | 7 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 7 | 8 | 1 | 3 | 9 | 5 | 2 | 6 | 4 |
| 9 | 5 | 6 | 1 | 4 | 2 | 3 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## தாவீதுப்பிள்ளை அருளானந்தம்

(இளைப்பாறிய அதிபர் கட்டைக்காடு முள்ளியான்)

கட்டைக்காடு முள்ளியானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாவீதுப்பிள்ளை அருளானந்தம் நேற்று (10.09.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித கப்பல் ஏற்று மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கட்டைக்காடு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டைக்காடு,
முள்ளியான்.

(22753) (45.6.7)

தகவல்:
**பிள்ளைகள்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
12.10.1949



மறைவு
13.08.2012

## மாணிக்கம் சபாநாதன்

எமது அன்புத் தந்தை அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.09.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

இல.36, வைத்தியசாலை வீதி,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி. (19323) (2.6.7)

- **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் இலங்கை மின்சாரசபையுடன் இணைந்து மேற்கொள்ள வுள்ள விசேட மின்னி ணைப்பாளர் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடு செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே. ஏ. தில கரத்ன மற்றும் மின்சக்தி, வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம். என். சீ. பெர்டினான்டஸ் ஆகியோர் கைச்சாத்திடுகின்றனர்.

# தேர்தலில் வெற்றிபெற்ற மாகாணங்களில் அபிவிருத்தி

கொழும்பு,செப்.11

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்ற மாகாண சபைகளின் அபிவிருத்தியை மேலும் பலப்படுத்த அரசு தம்மை அர்ப்பணிக்கும் என்று முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகா ணங்களில் தொடரும் ஆட்சிக் காலத்தில் மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத் துவதிலும் மாகாண அபிவிருத்தி நடவடிக்கை யைக் காத்திரமானதாக முன்னெடுப் பதிலும் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று அவர் தெரி வித்தார்.

(ச)

# மூன்று மாகாண சபைகளிலும் சனிவரை கூட்டம் நடத்தத் தடை

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்



மூன்று மாகாணங் களையும் சேர்ந்த 108 பொலிஸ் நிலையங்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடு படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு,செப்.11

தேர்தல் முடிவடைந்த போதிலும் மூன்று மாகாண சபைகளிலும் ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத் துவதற்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தடை விதிக் கப்பட்டிருப்பதாக தேர்தல் களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

கிழக்கு, சப்ரகமுவ மற் றும் வடமத்தி ஆகிய மூன்று மாகாண சபைகளிலும் எதிர் வரும் 15 ஆம் திகதி வரை தேர்தலுக்குப் பின்னரான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இதற்கென மூன்று மாகா ணங்களையும் சேர்ந்த 108 பொலிஸ் நிலையங்கள் பாது காப்புக் கடமையில் ஈடு படுத் தப்பட்டுள்ளன. இந்தக் காலப் பகுதிக்குள் வெற்றிக் களிப் பைக் கொண்டாடும் வகை யிலோ அல்லது எதிர்ப்பைத் தெரிவித்தோ ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்து வது சட்டத்தை மீறும் செயல் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தை அவமதித்துச் செயற்படுவோர் பாரபட்ச மற்ற முறையில் கைது செய் யப்படுவர். இவர்களுக்கெதி ராக வழக்குத் தொடரமுடிவ துடன் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்க முடியும் என்றுஅவர் கூறினார்.

தேர்தல் முடிவடைந்த தைத் தொடர்ந்து பெரிய ளவில் முறைப்பாடுகள் எது வும் பதிவாகவில்லை என்று சுட்டிக்காட்டிய அவர், இதுவ ரையில் மூன்று மாகாணங் களிலும் அமைதியான சூழ் நிலையே நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே தேர்தல் நடவடிக் கைகளுக்காக ஈடுபடுத்தப் பட்டிருந்த 20,000 பொலிஸார் மற்றும் முப்படையினர், தேர் தலின் பின்னரான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கட மையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# கபிலவஸ்துவை அலரி மாளிகையில் வைத்து வழிபடுவதற்கு அனுமதி மறுப்பு

## மஹிந்தவின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,செப்.11

புத்தரின் எலும்புகள் அடங்கிய கபிலவஸ்து புனித சின்னத்தை அலரிமாளிகை யில் வைத்து வழிபடுவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை இந்தியா நிராகரித்துள்ளது.

அண்மைய தமிழ்நாட்டு நிலவரங்களினால் பாதிக்கப் பட்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு இது மற்றொரு அடியாக விழுந்துள்ளது.

அலரி மாளிகையில், கபி லவஸ்து புனித சின்னத்தை வழிபாட்டுக்காக வைப்ப தற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மூலம் இந்தியாவிடம் 3 விடயங்கள் குறித்து வேண்டு கோள் விடுத்திருந்தார்.

புனித சின்னங்களை மேலும் ஒரு வாரத்துக்கு இலங்கையில் வைத்திருப்ப தற்கு அனுமதிக்க வேண் டும், அதிகளவு இடங்களில் அதனை வழிபாட்டுக்கு வைக்க அனுமதிக்க வேண் டும், அலரி மாளிகையில் வழி பாட்டுக்காக வைக்க அனும திக்க வேண்டும் ஆகியனவே அந்தக் கோரிக்கைகளாகும்.

புனித சின்னத்தை வழிபாட்டுக்கு வைக் கும் கோரிக் கையை ஏற்க முடியாது என்றும் புதுடில்லி அறிவித்துள்ளது.

இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, இதுபற்றி புது டில்லிக்கு அறிவித்திருந்தார். அதற்கு புதுடில்லி உடனடி யாகவே பதில் அனுப்பியுள் ளது.

அதன்படி முதல் இரு கோரிக்கைகளுக்கும் எதிர்ப்பு ஏதுமில்லை என்றும், அலரி மாளிகையில் புனித சின் னத்தை வழிபாட்டுக்கு வைக் கும் கோரிக்கையை ஏற்க முடியாது என்றும் புதுடில்லி அறிவித்துள்ளது.

அலரி மாளிகை ஒரு வழிபாட்டு இடமல்ல என் றும், அது இலங்கை ஜனாதி பதி அல்லது பிரதமரின் வசிப் பிடமாக இருப்பதாலேயே அங்கு புனித சின்னங்களை வைக்க அனுமதிக்க முடியாது என்று இந்தியா கூறியதாக வும் இந்தியத் தூதரக வட் டாரங்கள் கூறியுள்ளன. (ச)

# ரயிலுடன் மோதியது கார்

## நால்வர் படுகாயம்

கொழும்பு,செப்.11

கந்தான - கிரியுல்ல - படகம பகுதி ரயில் கடவை ஒன்றில் கார் ஒன்று விபத்துக் குள்ளானதில் நால்வர் படு காயமடைந்து ராகம வைத்தி யசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

குறித்த ரயில் கடவையில் அபாய விளக்கு ஒளிர விடப் பட்டிருந்தபோதும் படகம வழியாக நீர்கொழும்பு வீதிக் குள் பயணிக்க முயற்சித்த கார், அவிசாவளையில் இருந்து கொழும்பு நோக்கி பய ணித்த ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரை பெண் ஒருவரே செலுத்திச் சென்றுள்ளார்.

காரில் குறித்த பெண் ணின் கணவர், தாய், மகள் மற்றும் சகோதரி ஆகியோர் பயணித்துள்ளனர்.

விபத்தில் கணவரைத் தவிர ஏனையோர் காயம டைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கந்தான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# முதலைக்கு இரையான சிறுவன்

கொழும்பு,செப்.11

அக்குரஸ்ஸ - பரதுவ கிராம சிறுவன் ஒருவன் நில் வளா கங்கையில் நீராடச் சென்றபோது குறித்த சிறுவனை முதலை காவிச் சென்றுள்ளது.

பாதுகாப்பற்ற இடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 12 வயதுடைய ரொஷான் என்ற சிறுவனே நீராடச் சென்றபோது முதலையால் காவிச் செல்லப் பட்டுள்ளான்.

அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# முதலமைச்சர்கள் யார்? இந்தவாரம் தீர்மானம்

இந்த வாரத் துக்குள் தேர் தல் முடிவுகள் வர்த்த மானியில் அறிவிக்கப்படும்.

தேர்தல்கள் நிறைவ டைந்த மாகாணங்களுக்கான முதலமைச்சர்கள் குறித்து இந்த வாரம் தீர்மானிக்கப் படும் என்று அரசு தெரி வித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச்செய லாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்துக்குள் தேர் தல் முடிவுகள் வர்த்த மானியில் அறிவிக்கப்படும்.

அதன் பின்னர் மாகாண முதலமைச்சர்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தேசிய சுதந்திர முன்னணி யும் அரசுடன் இணைந்த கட்சிகள் என்பதால், கிழக் கில் ஆட்சி அமைப்பதில் சிக்கல் ஏற்படாது என்று அரசு தெரிவித்துள்ளது. (ச)

# நுரைச்சோலை மின்னுற்பத்தி வழமைக்கு

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் மீளவும் தேசிய மின்சார விநியோகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என மின்சாரவளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தொழில்நுட்ப கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்த இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் பணிகள் பரிசோதனை முயற்சிகளின் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் வழமைக்குத் திரும்பியிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் நாட்டின் மின் சார விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்று நம்பிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை:

# நடைமுறைக்கு உதவ தயார் என்கிறது பொதுநலவாய நாட்டு அமைப்பு

கொழும்பு,செப்.11

இலங்கையின் நல்லி ணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்துவது தொடர் பில் பொதுநலவாய நாடுக ளின் செயலாளர் கமலேஸ் சர்மா, இலங்கை தலைவர்க ளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

பொதுநலவாய நாடு களின் நாடாளுமன்ற சம் மேளன மாநாட்டில் பங் கேற்க நேற்று இலங்கை வந் தடைந்த அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச் சர் ஜி.எல்.பீரிஸ் உட்பட்ட வர்களை சந்திக்கவுள்ளார்.

இது தொடர்பில் கருத்து ரைத்துள்ள பொதுநலவாய நாடுகளின் பேச்சாளர் ரிச்சட் உகு, நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தமது அமைப்பு முழு ஒத்து ழைப்பை வழங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச)

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந் துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு தமது அமைப்பு முழு ஒத்து ழைப்பை வழங்கும்

# மது அருந்தும் சாரதிகள் மீது நடவடிக்கை

24 மணி நேரமும் சோதனை நடக்கும்

கொழும்பு,செப்.11

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைத் தேடிப் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை முதல் தீவிர வலைவீச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இது குறித்து போக்குவ ரத்துப் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலை யங்களுக்கும் அறிவித்துள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் அலுவலகம் குறிப்பிட் டுள்ளது.

இதற்கு முன்னர் இரவு நேரங்களிலேயே சாரதிகள் சோதனை செய்யப்பட்டதாக வும், ஆனால் இனி 24 மணி நேரமும் சோதனை செய்யப் படுவர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் "கிட்ஸ்பார்க்" மற்றும் திருநெல்வேலி சிமாற்கிட்ஸ் ஆங்கில ஆசிரியர்களுக்கான பதவிவெற்றிடம்

உரும்பிராய் ''கிட்ஸ் பார்க்'' மற்றும் திருநெல்வேலி சிமாற்கிட்ஸ் முன்பள்ளிகளுக்கு, ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்கள் HNDE அல்லது அதற்கு நிகரான தகைமையுடையவர்கள், முன்பள்ளியில் ஆங்கிலம் கற்பித்த முன் அனுபவமுள்ளவர்களும் தங்கள் சுய விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 15.09.2012**

தொடர்புகளுக்கு:-

திருநெல்வேலி "சிமாற்கிட்ஸ்",
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
**T.P.0776565258, 0773867458**

(22764) (2-6-7)

## வைரவர் அருளோடு மனமார்ந்த நன்றிகள்

கடந்த 08.09.2012 அன்று இடம்பெற்ற உடுவில் ஞானவைரவர் ஆலய 24 ஆவது ஆண்டு விழாவில் சமயச் சொற்பொழிவையாற்றுவதற்கு வழிகாட்டல்களை வழங்கிய எனது ஆசையம்மா வான இளைப்பாறிய ஆசிரியை ஜெகதீஸ்வரி நாகலிங்கம் (B.A.Dip.inEd) அவர்களுக்கும் மற்றும் மாமிமாருக்கும், தாய், தந்தையரான திருமண வாழ்வில் வெள்ளி விழா கண்டு நிற்கும் திரு.இந்திரராஜா (Sworn Translator) திருமதி வசந்தா தேவி தம்பதியருக்கும், என்னை உரையாற்றுவதற்குக் களம் அமைத்த பெருமானின் தெற்கு வீதி நாற்சார் இல்லத்தில் வாழ்ந்து மறைந்த எனது பாட்டி அமரர் செ.நாகம்மாவின் சகோதரி மகன் கமலதாஸ் மற்றும் தொண்டர்களுக்கும், இணையத்தளங்களில் உரையினை வெளியிட்ட நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (22765) (2-6-7)


இ.மோகன் (மாணவன், வெளிவாரிப்பட்டப்படிப்புகள் பிரிவு)

## கிணறுகள் புனரமைப்பு

நாவற்குழி மேற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள விவசாயக் கிணறுகள் பல புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளதாக நாவற்குழி சந்தி சனசமூக நிலையத்தின் தலைவர் சி. உதயச்சந்திரன் தெரிவித்துள்ளார். தற்போது மூன்று கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் மேலும் நான்கு கிணறுகள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், இந்தப் புனரமைப்புப் பணியால் விவசாயிகள் மட்டுமல்ல பொது மக்களும் பயன் அடைந்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தப் புனரமைப்புப் பணிகள் வேள்ட் விஷன் நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (3-288)

## மரண அறிவித்தல்

### கந்தையா வல்லிபுரம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் நேற்று முன்தினம் (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம் மாள், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தயாவதி (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), சிவலட்சுமி (பிரதேச செயலகம், கரவெட்டி), கணேசலிங்கம் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஞானசீலன் (பிரதேச செயலகம், கரவெட்டி), செல்வகுமார் (சுதேச மருத்துவத் திணைக்களம்), வாசுகி (மாங்குளம் - மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனும், நிவேதிகா, ஆர்நிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேத்தாவடி
இடைக்காடு, அச்சுவேலி. (22762) (45.6.7)

தகவல்:
வ. கணேசலிங்கம் (மகன்)

## இலவச கணணி, ஆங்கில, வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகள் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சியில் ➡ ESOFT
The Leader in Professional ICT Education

கொழும்பு, யாழ் பிரபல விரிவுரையாளர்களினால் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்ளுக்காக வழங்கப்படுகிறது

**அனுமதி இலவசம்**

கருத்தரங்கின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அன்றைய தினத்தில் கற்கைநெறிக்கான ரூபா 1000 இனை செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு....

**5000/= கட்டணக்கழிவுடன்**

ஒரு வருட உத்தரவாதமுள்ள 4GB Pendrive இலவசமாக வழங்கப்படுகிறது

FREE



கருத்தரங்கின் ஆசனப் பதிவுகளுக்கு
**077 309 9 308**

இடம்:- ESOFT Computer Studies (Pvt)Limited
காலம்:- 14.09.2012 மு.ப 9.30 மணி
01, Kanagapuram Road, Kilinochchi

(சி/3199) (45.6.7)

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா - 2012

### அழைப்பு



**இடம்:-**
நல்லூர் துர்க்கா மணிமண்டபம்
**காலம்:-**
இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை
**நேரம்:-**
காலை 9.00 மணி தொடக்கம்
நண்பகல் 12.00 மணிவரையும்
பிற்பகல் 3.30 மணி தொடக்கம்
இரவு 8.00 மணிவரையும் என
இரு அமர்வுகளாக இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/3197) (2-6-7)

## குழாய்க் கிணறுகள் அடித்து வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

90ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களால் யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் 50 குழாய்க் கிணறுகள் அடித்து வழங்கப்படவுள்ளன. எனவே மேற்படி குழாய்க் கிணறுகளை இயந்திரத்தை பயன்படுத்தி அமைத்து வழங்குவதில் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் கூறுவிலைகளை எதிர்வரும் 17.09.2012 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பிவைக்கவும்.

கூறுவிலைதாரர் தமது கூறுவிலையை மூடிய கடிதவுறையில் அதன் இடதுபக்க மேல் மூலையில் "கூறுவிலைகோரல்" எனக்குறிப்பிட்டு முகாமையாளர் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:

பொதுமுகாமையாளர்,
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)
இல. 52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5072

(சி/3195) (45.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
04.05.1930



உதிர்வு
13.08.2012

### திருமதி சரவணமுத்து மகேஸ்வரி

கடந்த 13.08.2012 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (12.09.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தபாலகம், ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (22763) (2.6.7)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

# வெளிச்ச வீடுகள் அமைக்கும் திட்டம் கடற்றொழில் திணைக்களத்திடம் இல்லை

## யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.11

வெளிச்சவீடுகளை அமைப்பதற்கான திட்டம் கடற்றொழில் திணைக்களத்திடம் இல்லை.

கரையோரப்பகுதிகளில் வெளிச்சக் கம்பங்களை மட்டுமே கடற்றொழில் திணைக்களம் அமைக்கிறது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை- குருநகர் பகுதிக்கு இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் இருந்த வெளிச்சவீடுகள் தற்சமயம் இல்லை. இதனால் கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

சேதமடைந்த வெளிச்ச வீடுகளைப் புனரமைத்துத் தாருங்கள் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே கடற்றொழில் உத்தியோகத்தரால் இந்த விடயம் கூறப்பட்டது. குறிப்பிட்ட இடத்தில் மின் கம்பம் அமைத்து வெளிச்சம் வழங்குவதும் சாத்தியப்படாதது என அவர் மேலும் கூறினார்.

குறிப்பிட்ட வெளிச்ச வீட்டில் இருந்து வரும் வெளிச்சம் இருபது கிலோ மீற்றர் தூரத்துக்கு அனைத்து திசைகளுக்கும் தெரியக் கூடியதாக உள்ளதால் மீனவர்கள் தமது பகுதிகளுக்கு செல்வதற்கும் அது உதவியாக இருக்கும்.

ஆனால் மின் கம்பத்தினூடாக வழங்கப்படும் வெளிச்சம் ஒரே திசையை நோக்கியதாகவே இருக்கும் என்பதால் அது பயனற்றதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக துறைமுக அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொள்வதாக கூட்டத்துக்குத்தலைமை தாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம-7)

## பொற்கிழி வழங்கி கௌரவிப்பு



அச்சுவேலி, செப்.11

சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 86 வயது முதியவர்கள் இருவர் சமூகத்துக்குச் செய்த சேவையைப் பாராட்டி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த சின்னப்பு வைத்திலிங்கம் பாட்டப்பா, தம்பு இராமநாதன் சைவப்பா இருவரும் தமது வாழ்நாளில் கிராமத்துக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் செய்த சேவைகள் மற்றும் தொண்டுகளைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டி சூரியோதயம் கூட்டுறவு நகர் மண்டபத்தில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதி கொண்ட பொற்கிழி இவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை சுவிஸ் வாழ் சிறுப்பிட்டி மக்களும், சிறுப்பிட்டி நெற் இணையத்தாரும், சிறுப்பிட்டி வாழ் மக்களும் இணைந்தே நடத்தியமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (3-11)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் ஒரு வருட கால முழுநேர டிப்ளோமா தொழில் நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி நெறிக்கும், ஒன்றரை மாத பெண்களுக்கான மீன்பிடி தொழில் நுட்ப பயிற்சி நெறிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரங்களை கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு விண்ணப்பித்தோ, அல்லது நேரிலோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு கல்லூரி உதவிப் பணிப்பாளர் கு. ஆனந்தகுமரன் அறிவித்துள்ளார்.(3)

## பெருந்திருவிழா

கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன ஆலயம் கந்தையா சுவாமிகள் (குடைச் சாமியார்) சமாதி ஆலயம் ஆகியவற்றின் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், மறுநாள் சங்காபிஷேகமும், தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (3)

## சாட்டித் திருவிழாவை முன்னிட்டு மது விற்பனை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.11

சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய உற்சவத்தின் இறுதி நாளான 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 15 ஆம் திகதி சனிக்கிழமையும் மதுபானக்கடைகள், கள்ளுத் தவறணைகள் என்பன மூடப்பட்டிருக்கும்.

இந்த இரு தினங்களும் சாட்டி மாதா கோயில் பிரதேசத்தில் மது விற்பனையை இடைநிறுத்தக் கோரி, வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவித்தல் வழங்கப்படவுள்ளது எனவும், அதனை கண்காணிப்பதற்கு மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார். (3-7-49-135)

## இந்து சமய ஆய்வரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடம் தோறும் இந்து சமய தமிழ் இலக்கியம் சார்ந்த கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வரங்கை நடத்தி வருகின்றது.

அந்தவகையில் இந்தவருடம் இந்து சமயமும் அவைதீக நெறிகளும் என்னும் தலைப்பில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5, 6, 7, 8ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. இந்த ஆய்வரங்கில் நம்நாட்டு தமிழ்நாட்டு அறிஞர்கள் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த ஆய்வரங்கில் இந்துநாகரிகம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களை பயிலும் மாணவர்கள், பல்கலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்து கொள்ள விரும்புவோர் தமது பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார். (3)

## ஆற்றுகைக்காக புராண நாடகங்கள்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் நோக்கில் புராண நாடகங்களை அரங்காற்றுகை செய்ய இருக்கின்றது.

வள்ளி திருமணம், நந்தனார், பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்களும், காத்தவராயன் சிந்து நடைக்கூத்தும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளன.

விரும்பும் ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் கேட்டால் அவர்களது இடங்களில் இந்த நாடகங்களை ஆற்றுகை செய்ய பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுக்கும் என்று அதன் செயலாளர் சா.வ. தயாநிதி தெரிவித்துள்ளார். (3)


## அறிவித்தல்

### யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்

**ஓட்டோ உரிமையாளர்களுக்கு!**

**விசேட கலந்துரையாடல்**



யாழ்.குடா நாட்டில் வாடகைச் சேவையிலீடுபடும் ஓட்டோ உரிமையாளர், சாரதிகளுக்கான விசேட கலந்துரையாடல் நாளை (12.09.2012) புதன் கிழமை காலை 9.00 மணிக்குப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் (ஸ்ரான்லி வீதி) அலுவலகத்தில் நடைபெற இருப்பதால், தலைமைச்சங்கம் மற்றும் கிளைச் சங்க நிர்வாகப் பிரதிநிதிகள் மற்றும் ஓட்டோ உரிமையாளர், சாரதிகளை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

விடயம்:-
★ ஓட்டோக்களின் சேவை ஒழுங்கு
★ சாரதி ஒழுங்குமுறை
★ வாடகைக் கட்டண மீற்றர் பொருத்துதல்
★ பிறவும்

(22757) (2-6-7) - நிர்வாகம்.

## விற்பனைக்கு உண்டு

பாவனையிலுள்ள ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள்
★ 3 ஹோஸ் பவர் ஐஸ் பழபாத் (5தட்டு)
★ கிறீம் பீற்றர் - 01
★ டீபிரீசர் 6 அடி - 1, 5 அடி - 2
★ 10 K.V ஜெனரேட்டர் - 01 (இந்தியன்)
★ 2 K.V ஜெனரேட்டர் (சைனா)
★ TATA BUDDY xxxx 6103 ஐஸ்கிறீம் Van

தொடர்புகளுக்கு:-077 4539 820, 071 46 71 698 (22758) (2-7-6)

## T V மலிவு விற்பனை

Sony (Japan) Flat 21"-13000/=, 29"-15000/=, பைனியர் DTS அம்பிளிபயர் DVD (L.S) National AFD (RX - 53) ரேடியோ - கசெற், Box வகைகள்

தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)

சோனி ரேற்ட்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக) 56, K.K.S. வீதி, சுன்னாகம். (22543) (45-6-9)

## தவறிவிட்டது

சின்னராசா உதயகுமார் என்பருடைய தேசிய அடையாள அட்டை (713651907 V) மற்றும் பல ஆவணங்களுடன் கூடிய பேஸ் (30.08.2012) அன்று சந்நிதி ஆலயச் சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

தொடர்பு: தொ.பே. 077 9895 879 (22756) (45.6.7)

## தேவை

மூன்று அங்கத்தவர்கள்கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகரம், கொக்குவில் பகுதிகளில் வீடு ஒன்று தேவை

தொடர்பு: தொ.பே.077 3715 798, 077 7260 974. (22736) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

பன்னாலை சேர் கனகசபை பாடசாலைக்கு முன்பாக கிணற்றுடன் கூடிய 11½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பே.077 2401 296, 075 6286 749 (22736) (45.6.7)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே : 077 8996085

(22489) (5.6.7)

## ஆறாத மனங்களுடன் ஆண்டுகள் ஐந்து

குவலயத்தில் 04★03★1941





குகமயத்தில் 07★09★2007

அமரர்

**பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**

கண்முன்னே கண்டு வந்த உங்களது கனிந்த இன்முகத்தையும்
சிதறாத நற்பண்பு கொண்ட வழிநடத்தலையும் இழந்து
- ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
நீங்கள் விதைத்த உயிர்களுக்கு உயிர் உள்ளவரை வாழ்வோம்
உங்கள் வாழ்க்கை வழி.............
வளர்ப்போம் உங்கள் வம்சத்தை
அப்(பா) பாதை பற்றி............


'மயூரபவனம்' உடுவில், சுன்னாகம்.

நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர்

(22717) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் வங்கி வழங்கும் புதிய நடைமுறைக் கணக்கு



செலான்
நடைமுறை கணக்கு
அதிக வரப்பிரசாதங்களுடன் கவர்ச்சிகரமான வெகுமதிகள் பலவற்றையும் வழங்கும் ஒரே நடைமுறை கணக்கு

செலான் வங்கி தனது தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு நடைமுறைக் கணக்குகளுக்காக மிகவும் கவர்ச்சிகரமான பெறுமதிசேர் அனுகூலங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

தனது பாரம்பரிய நடைமுறைகளுக்கு அமைவாக செலான் வங்கி, திருமணம், சத்திரசிகிச்சை, குழந்தை பிறப்பு மற்றும் ஒருவரது 60 ஆவது பிறந்த தினம் போன்ற முக்கிய சந்தர்ப்பங்களில் தற்போது வழங்கி வருகின்ற SURE திட்டத்துடன் மேற்படி அனுகூலங்களை இணைத்துள்ளது.

புதிதாக நடைமுறைக் கணக்கு ஒன்றினைத் திறப்பதற்கான அடிப்படைத் தகுதியாக வெறும் 10,000 ரூபாவினை வைப்புச் செய்ய வேண்டும்.

கணக்கு வைத்திருப்பவர் 18 வயதிற்கு மேற்பட்ட ஒருவராகவும், கணிசமான மாத வருமானத்தைப் பெறுபவராகவும் இருப்பது அவசியமாகும்.

செலான் வங்கியின் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு தற்போது கிடைக்கக் கூடிய பெருமளவிலான அனுகூலங்கள் ஏனைய நிறுவனங்களிடமிருந்து தனித்துவமிக்க வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றன.

அவற்றுள் செலான் வங்கியின் எந்தவொரு ATM நிலையத்திலிருந்தும் குறிப்பிட்ட கணக்கிலுள்ள மீதிக்கு அமைவாக நாள் ஒன்றுக்கு 150,000 ரூபாவை மீள எடுக்கும் வசதியுடைய ஒரு இலவச வரவு அட்டையும் உள்ளடங்குகின்றது.

இந்த வங்கிச் சேவைக்கு மேலும் பெறுமதியைச் சேர்க்கும் விதத்தில் இலவச இணைய வங்கியியல் மற்றும் இலவச எஸ்.எம்.எஸ். வங்கியியல் வசதிகளும் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்கள் தமது கணக்கு மீதியைக் கேட்டறிந்து கொள்வதற்கும் ஏனைய சந்தேகங்களுக்கு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் 24 மணித்தியாலமும் இயங்கும் அழைப்பு நிலையத்தின் ஆதரவு இடமளிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, விஷேட கடனட்டை வசதியானது நாடெங்கிலும் உள்ள 350 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் விஷேட விலைக் கழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வெகுமதியை அளிக்கின்றது.

## அரச நிறுவனங்களைப் பலப்படுத்த Mobital- NTC நடவடிக்கை




மொபிடெல் நிறுவனம் அரச நிறுவனங்களைப் பலப்படுத்தும் நோக்கில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளது.

அரச நிறுவனங்களின் சேவையின் மேம்பாட்டிற்கென தனது உபஹார பொதியினை அறிமுகம்செய்த மொபிடெல், அதன் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய தொலைத்தொடர்புச் சேவையின் ஊடாக இலங்கை போக்குவரத்து ஆணைக் குழுவின் செயற்பாட்டு ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்கு முகமாகத் தனது பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பு 5இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் கேட்போர் கூடத்தில் தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பீ. ரத்னாயக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர்ரொஷான்குணவர்தன மற்றும் மொபிடெல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா ஆகியோரின் முன்னிலையில் இடம்பெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பீ. ரத்னாயக்க, தற்பொழுது இலங்கை அரசானது பாரிய தொரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ள இத்தருணத்தில் மக்கள் போக்குவரத்துத்துறை என்ற ரீதியில் இம்முயற்சி வெற்றி பெற பயணிகள் உட்பட அனைவரதும் பங்களிப்பும் தேவை.

மேலும், இதற்காகத் தொடர்ச்சியான தொடர்பாடல் முலம் எமது செயற்திறனை உறுதி செய்வது முக்கியத்துவம் பெறுவதுடன் பாரிய அளவிலான முதலீடுகளும் அவசியம்.

இதற்காகவே நாம் மொபிடெல் உடன் இணைந்துள்ளோம். மொபிடெல் நிறுவனமானது எமது அன்றாட செயற்பாடுகளுக்கு ஏற்ற கட்டுப்படியான கட்டணத் தீர்வுகளை வழங்குவது எமக்கு மிகச் சிறந்த சேமிப்பாகும் என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மொபிடெல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா, அரசின் முன்னணி நிறுவனமான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை வழங்குகிறது.

## VISA- CDB இணைவு




சிட்டிசன்ஸ் டெவலப்மன்ட் பிஸ்னஸ் பி. எல். சி. (CDB), இலங்கையில் VISA Debit Card I வழங்குவதற்காக இலங்கை கொமர்ஷல் வங்கி ஊடாக வீசா இன்டர்னெஷனலில் அங்கத்தவராக இணைந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கையில் VISA Debit Card யை வழங்குவதற்கு வீசா இன்டர்னஷனலில் இணைந்துள்ள முதலாவது நிதி நிறுவனமாக CDB தற்போது மாறியுள்ளது.

என்றும் போலவே CDB அதன் வாடிக்கையாளருக்கு சிறந்ததை வழங்க முன்வருகின்றது. நேரம் மிகவும் மதிப் புள்ளதாக இருப்பதனால் வாடிக்கையாளர்கள் தமது நாளாந்த கொடுக்கல் வாங்கல்களில் சிறந்த சேவைகளை எதிர்பார்க்கும் இக் காலகட்டத்தில், இந்த அங்கத்துவம் சிறந்த தீர்வை வழங்குகின்றது.

வீசா இன்டர்னஷனலுடன் இணைந்து இந்தச் சேவையை வழங்கும் முதலாவது நிதி நிறுவனம் என்ற வகையில், எமது வாடிக்கையாளருக்குச் சிறந்த சேவையை வழங்குவதுடன் போட்டித் தன்மைமிக்க அனுகூலங்களை இது பெற்றுத்தரும் என CDB இன் தகவல் தொழில் நுட்ப உதவிப் பொது முகாமையாளர் இம்தாத் நகூப் தெரிவித்துள்ளார்.

CDB VISA Debit Card மற்றும் ATM அட்டைகளுக்கு மேலதிகமான வசதிகளை எமது வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது. VISA Debit Card யை வைத்திருப்பதனால் ATM இயந்திரத்துக்குச் செல்லும் நேரத்தைக் குறைப்பதுடன், உலகம் முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான இடங்களில் Debit Card மூலம் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ள வழியமைக்கும்.

## UTE யின் பிரகாசிப்பு

இலங்கையின் பாரிய கட்டுமான துறையின் புதிய படைப்புகளை காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'Construct 2012' கண்காட்சி, அண்மையில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில்நடைபெற்றது. இக்கண்காட்சிக்கு யுனைடட் டிராக்டஸ் அண்ட் எகியுப் மண்ட் லிமிடெட் தொடர்ந்து நான்கா வது வருடமாகவும் பிரதான அனுசரணையை வழங்கியிருந்தது.

இக் கண்காட்சியின் போது காட்சிப்படுத்தப்பட் டிருந்த புதிய தொழில்நுட்பங்களை பார்வையிடுவதற்கு வாடிக்கையாளர்கள், துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் ஆர்வலர்கள் பெரு மளவானோர் வருகை தந்திருந்தனர். இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த துறைசார்ந்த முன்னேற்றங்கள் இந்நிறுவனத்தின் 'நீண்ட கால விற்பனைக்கு பின்னரான சேவை' என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக அமைந்திருந்தன.

எமது வியாபாரத்தை விரிவுப்படுத்தும் எதையும் நீண்டகாலத்தின் அடிப்படையிலேயே முன்னெடுப்போம்' என UTEயின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரியாட் இஸ்மையில் தெரிவித்தார். இவ்வாண்டு எமது அவதானம் "Product link' சம்பந்தமான சேவை முன்னேற்றம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. (த)

## வெற்றிப் பாதையில் எக்ஸ்போலங்கா

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி நிறுவனம் 2012-2013 நிதியாண்டின் முதலாவது காலாண்டில் கூட்டு வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக 335 மில்லியன் ரூபாவையும், கூட்டு வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக 461 மில்லியன் ரூபா வையும் பெற்றுள்ளது.

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீப் யூசுப் கூறுகையில், சரக்கு அனுப்புதல் மற்றும் உபகரண வழங்கல், பயணம் மற்றும் ஓய்வுகால ஏற்பாடுகள் போன்ற துறைகளில் நாம் மேற்கொண்டுள்ள முதலீடுகளுடன் தற்போது நாம் மேற்கொண்டு வரும் வர்த்தக செயற்பாடுகளைக் கூட்டிணைப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

ஸ்திரமிக்க வளர்ச்சிக்கான எமது தந்திரோபாயத் திட்டங்கள் எமது குழுமத்தின் வருமானத்தில் 24 வீதப் பங்கினைப் பெற்றுத் தந்துள்ளன. எமது வருமான மட்டங்கள் 8.4 பில்லியன் ரூபாவில் இருந்து 10.4 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதன் மூலம் அது தெளிவாகின்றது.

இக்காலாண்டு காலப்பகுதியில் எக்ஸ்போலங்கா குழுமமானது தந்திரோபாய மற்றும் ஒன்றிணைவு நுட்ப அடிப்படையிலான முதலீட்டு முயற்சிகள் ஒருசிலவற்றைக் கையகப் படுத்தியது.

அவற்றுள் குறிப்பாக அக்குவாசன் ஹொலிடேய்ஸ் இந்தியா' மற்றும் எக்ஸ்போ பிரைட் யூ.எஸ்.ஏ.' போன்ற நிறுவனங்கள் - பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தக் காலாண்டு காலப்பகுதியில் குழுமத்தின் கூட்டு வருமானம், கம்பனியின் ஒட்டுமொத்த இலாப மட்டம் ஆகியவற்றில் சாதகமான தாக்கங்களைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏற்படுத்தியுள்ளன.

# அழகை விரும்பும் பெண்களுக்கு அழகு சாதனப் பை ஒரிபிளேம் நிறுவனம் வழங்கும் வெகுமதி இதோ

ஒரிபிளேம் நிறுவன்ம் ஓடேல் நிறுனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒட்டாரா குணவர்த்தனவுடன் இணைந்து பெண்களுக்கான பிரத்தியேக அழகுசாதனப் பையை அறிமுகப்படுத்தியுள்ளது.

நேர்த்தியான வடிவமைப்பால் உருவான இந்தப்பை, நாட்டின் நாலாபுறமும் உள்ள, நவநாகரிகப் போக்குகளில் ஆர்வமுள்ளவர்களைக் கவரும் என்பதில் சந்தேகமில்லை.

இது அழகுணர்வு மிக்கவர்களுக்கும் பயணங்களின் போது அழகாகத் தோற்றமளிக்க விரும்புபவர்களுக்கும் ஏற்றது.

தற்காலத்துக்குப் பொருந்தக் கூடிய தோற்றமும் எக்காலத்துக்கும் ஏற்ற கவர்ச்சியும் கொண்டதாக வடிவமைக்கப்பட்ட இந்தப்பை நீங்கள் செல்லுமிடமெங்கும் உங்களை ஓர் அழகுக் குறியீடாக்குகின்றது.

அவசியமான அழகுசாதனப் பொருள்களை வைப்பதற்கென விஸ்தீரணமான இடவசதி கொண்ட இந்தப்பை, அழகுசாதனத் தூரிகைகள் வைப்பதற்கான பைக்கற்களையும் கொண்டது. உறுதியான மற்றும் நவநாகரிகத் தோற்றங் கொண்ட இந்தப்பை, தனியான மூன்று பிரிவுகளைக் கொண்டிருப்பதோடு, எடுத் துச் செல்வதற்கு வசதியாக - நீளத்தைக் கூட்டிக் குறைக்கக் கூடியவாறு இணைந்த பட்டையையும் கொண்டது.

இவ்வறிமுகம் குறித்துக் கருத்துக் கூறிய ஒட்டாரா, "ஒரிபிளேமுடன் இணைந்து பணியாற்றுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. தங்கள் இலக்குகள் - கனவுகளை நனவாக்குவதில் பல [illegible] பணியாற்றுகின்றமை எனக்கு ஊக்கமளிக்கின்றது. ஒற்றுமை,




துணிவு, பேரார்வம் போன்ற ஒரிபிளேமின் மதிப்பீடுகளை நானும் பகிர்ந்து கொள்கிறேன் என்றார்.

ஒரிபிளேம் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர், எரிக்ஸ்டென்பேர்க் கருத்துக் கூறுகையில் [illegible] பைக்கான ஒப்புதலைத் தந்து, ஒட்டாரா எங்களுடன் இணைந்தமை எங்களுக்குப் பெருமை தருவதோடு நாங்கள் மீண்டும் ஒரு முறை சந்தோஷமடைந்திருக்கிறோம்.

இந்தச் சலுகையில் 300 ரூபாவுக்கு இவ்வழகுப் பையைக் கொள்வனவு செய்வதன் மூலம் நீங்களும், ஒரு பாஷன் சின்னமாகலாம்'' என்றார்.

உலகளாவிய ரீதியில் 60 நாடுகளில் நேரடியான வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரிபிளேம், ஒரு சர்வதேச அழகு சாதனப் பொருள் விற்பனை நிலையமாக உயர்தரம் வாய்ந்த சருமப் பராமரிப்பு, வாசனைத் திரவியங்கள், வர்ண அழகு சாதனப் பொருள்கள், சவர்க்காரம், ஆரோக்கியம் தொடர்பான உபகரணங்கள் ஆகியவற்றை, சுயாதீன விற்பனை முகவர்களினூடாக இங்கு விற்பனை செய்கின்றது.

1997 ஆம் ஆண்டு முதல் ஒரிபிளேம் இலங்கையில் செயற்படுகின்றது. ஒரிபிளேமின் தனித்துவமான வர்த்தக எண்ணக்கரு மூலம், தங்கள் கனவுகளை நனவாக்க குறிக் கோள்களை நிறைவேற்ற விரும்புவோருக்குத் தனித்துவமான வியாபார வாய்ப்புக்களை ஒரிபிளேம் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றில் நாளைமறுதினம் மீள்குடியமர அனுமதி

யாழ்ப்பாணம், செப்.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை மீளக்குடியேற்றப்படவுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளில் மீளக் குடியேற்றம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன் பொக்கனை (செம்மன்குன்று கிராமம் உள்ளடங்கலாக) மற்றும் முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து உறவினர் நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் மக்கள் மீளக் குடியமர்வுக்கான சகல ஆயத்தங்களுடன் நாளைமறு தினம் காலை 9 மணிக்கு முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலைக்கு சமுகம் தருமாறும்,

அதேவேளை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேணாவில் கிராமம் தவிர்ந்த புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம் கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீளக் குடியமர்வதற்கான சகல ஆயத்தங்களுடன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு சமுகம் தருமாறும் அறிவித்துள்ளார்.

எனவே மீளக் குடியமரவுள்ள மக்கள் இதுவரை காலமும் தாங்கள் வசித்து வந்த பகுதிக் கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு அந்தப் பகுதி உதவி அரச அதிபரினாலும் ஒப்பமிடப்பட்ட விடுப்புக் கடிதத்தைச் சமர்ப்பித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (த-16)

**மீளக் குடியமரவுள்ள மக்கள் இதுவரை காலமும் தாங்கள் வசித்துவந்த பகுதிக் கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு அந்தப் பகுதி உதவி அரச அதிபரினாலும் ஒப்பமிடப்பட்ட விடுப்புக் கடிதத்தைச் சமர்ப்பித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.**

## தமிழ்ச் சங்க பாரதி விழா இன்று

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடத்தும் பாரதி விழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும்.

வண. கலாநிதி நி.மரியசேவியர் தலைமையில் நடைபெறும் காலை அமர்வில் மங்கல இசை, மங்கல விளக்கேற்றல், தமிழ் மொழி வாழ்த்து, தமிழ்த் தெய்வ வணக்கம் ஆகியவற்றுடன் சங்கத்தின் கட்சிக்குழு உறுப்பினர் ஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திகரக் குருக்களின் வாழ்த்துரையும், யோ. துஷிகரனின் வரவேற்புரையும் இடம்பெறும். மாணவர் அரங்க நிகழ்வில் எங்கள் பார்வையில் பாரதி என்னும் பொருளின் 'பாரதியின் சமூகம் பாரதியின் உரைநடை, பாரதியின் கவித்துவம்' ஆகியவையும் 'மகாகவி பாரதி' என்னும் இறுவட்டு வெளியீடும் இடம்பெறும். வெளியீட்டு உரையினை சங்கத் துணைச் செயலர் ச.லலீசான் நிகழ்த்த முதல் பிரதியினை யாழ். சிவகணேசன் களஞ்சிய உரிமையாளர் க.அருள்யோகன் பெற்றுக்கொள்வார்.

'பாரதியின் பன்முக ஆளுமையும் புனைத்திறனும்' எனும் பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழி பண்பாட்டுத்துறைத் தலைவர் கலாநிதி றமீஸ் அப்துல்லா சிறப்புரை நிகழ்த்துவார். சங்கத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் மாலை அரங்கில் 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற பொருளில் கவியரங்கமும், 'பாரதி கண்ட தெய்வீகம்' கலாநிதி ஆறு. திருமுகனின் சிறப்புரையும் 'பாரதியின் புலமைத்துவம்' எனும் நூல் வெளியீடும் இடம்பெறும். (16-9)

**தவறிவிட்டது**

கிருஸ்ணராஜா கிருஷ்ணமேனன் என்பவருடைய வங்கிக்கணக்கு கையேடு, பிறப்புச்சான்றிதழ் அடங்கிய பொதி ஒன்று தவறிவிட்டது.

(22782)(8.14) தொடர்புகளுக்கு : 077 0448184

# வட மாகாண வைத்தியசாலைக்களுக்கு 109 வைத்தியர்கள் புதிதாக நியமனம்

யாழ். போதனா வைத்தியசாலை உட்பட்ட வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு கடந்த மாதத்தில் மட்டும் சுமார் 109 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்துக்கு 31 வைத்தியர்களும், வவுனியா மாவட்டத்துக்கு 24 வைத்தியர்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 21 வைத்தியர்களும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 17 வைத்தியர்களும் மன்னார் மாவட்டத்துக்கு என 16 வைத்தியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நியமனதில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 13 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். டி.ஜெயந்தன், எஸ். மணிகரன், ஜே.விஜிதா, தர்மிகா அனோய், பா.சுதாகரன், எ.கிருஷ்ணமூர்த்தி, ஜே.ராமச்சந்திரன், ஜி.வேணி, எஸ்.பிரதீபா, எம்.வாகீஸ்வரன், எம். கந்தசாமி, வி.தனுசன், பி.ஜெயந்தி ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலையில் கடைமையைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 5 வைத்தியர்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 7 வைத்தியர்களும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு 3 வைத்தியர்களும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு 3 வைத்தியர்களும் நியமிக்கப்பட்டுள்னர். (16-4)

**காணவில்லை**



காலையடி பண்ணாகமத்தைச் சேர்ந்த பத்மநாதன் சிவகரன் (வயது 15) என்பவரை கடந்த 28.08.2012 தொடக்கம் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும்.

தொ.பேசி.இல- 0778515318, 0770066037, 0214916911

(22774)(9.14)

**தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கைநெறி**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான 1ம், 2ம், 3ம், கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் ஆரம்பமாகின்றன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலமும் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். 2012 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை மேலதிகமாக பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், BIT கற்கை நெறி,MCS தொ.பே.772395895

BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

## பாம்புக் கடிக்கு இலக்கான பெண் ஆஸ்பத்திரியில்

பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கோயிலாக்கண்டி, நாவற்குழியைச் சேர்ந்த சிவநேசதுரை ராதிகா (வயது-45) என்ற குடும்பப் பெண்ணே பாம்புக் கடிக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வடக்கில் தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில் உயிரினங்கள் பொதுமக்களின் குடிமனைகளை நோக்கி நகர்வதால் பொது மக்கள் மத்தியில் அச்சமான சூழலே நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 8448020

(சி/3303)(8.14)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA No. 1 புறொயிலர் குஞ்சுகள் 13.09.212 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

T.P 077 6090926

(22773)(9.14)

## மரண அறிவித்தல்

### சண்முகராஜா பாலகுமார்



நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சண்முகராஜா பாலகுமார் நேற்று (10.09.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் எழுபங்கநாச்சியார் தம்பதியரின் அன்பு மகனும் இராஜபூபதி (லண்டன்), சுலோஜனா, கலாதேவி, சந்திரவதனி, ஆனந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரும் கமலநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நாவாந்துறை றோ.க.வி.), கனீந்திரன், குலச்செல்வம், புஸ்பமலர், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

192, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து சகுந்தலாதேவி (ஆச்சி)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சகுந்தலாதேவி (ஆச்சி) நேற்று (10.09.2012) திங்கட்கிழமை காலமானார்.

தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சிவன் கோயிலடி,
நல்லூர்.

தகவல்:
குடைச் சுவாமி சேவை
நல்லூர்

(22786)(9.14)

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை இராஜகுரு



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை இராஜகுரு நேற்று (10.09.2012) திங்கட்கிழமை அகாலமரணமானார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(22781)(8.14)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி தனபாலசிங்கம்



கொமர்ஷல் கிரடிட் பினான்ஸ் பி.எல்.சி இன் வடக்கு கிழக்கு, பிராந்திய முகாமையாளர் சின்னத்தம்பி தனபாலசிங்கம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

உத்தியோகத்தர்கள்
கொமர்ஷல் கிரடிட் பினான்ஸ்
பி.எல்.சி

(22783)(9.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்தக உதவியாளர் தேவை

மருந்தக (Pharmacuticals) அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் பயிலுநர் பெண், அடிப்படை ஆங்கில அறிவு தேவை. சுயவிவரங்களுடன் 17.09.2012 இற்கு முன் தினமும் மாலை 3.00 மணிக்கு நேரில் வரவும்.

**SUPER DRUGS**

**Urumpirai Junction.**

(22767) (2-7-6)

## கண்ணீர் அஞ்சலி



வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்சபை உறுப்பினரான வ.கணேசலிங்கம்

அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**கந்தையா வல்லிபுரம்**

அவர்கள் 09.09.2012 ஆம் திகதி அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பணிப்பாளர்களும் பணியாளர்களும்.**

வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

(இ/3198) (2-6-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் தங்கம் தங்கராஜா

( உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலை காலஞ்சென்ற தலைவர் தங்கராஜாவின் துணைவியார்)



தோற்றம்
01★07★1924

மறைவு
13★08★2012

சிவபதமடைந்த எங்கள் குடும்ப குல விளக்கின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நாளை (12.09.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவின் போது நேரில் வந்தும் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து, தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல் மூலம் அஞ்சலிகள் செலுத்தி எமது துயரில் பங்கு பற்றி ஆறுதல் கூறி பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு. (22779) (8.14) குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தையா சிவஞானம்

(ஓய்வுபெற்ற இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் - காங்கேசன்துறை)

திதி: நவமி 11.09.2012



தோற்றம்
26★08★1942

மறைவு
22★09★2011

அப்பா......
ஓராண்டு கடந்தும்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா
ஈடேற்றத்துக்காய்
ஈசனடி வேண்டுகிறோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நிகழ்வு இன்று (11.09.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

86, ஐயனார் வீதி,
சுன்னாகம். (22770) (45.6.7) **குடும்பத்தினர்.**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில் பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(22778)(9.14) தொடர்பு: 0777037058

## வீடு வாடகைக்கு

நல்லூர், சட்டநாதர் வீதியில் உள்ள வீடு வாடகைக்குண்டு.

(22780)(9.14) *தொடர்பு-0776648656*

## Personal Classes

A/L மாணவர்களுக்கான இணைந்த கணித பாடம் (தமிழ் மொழிமூல) வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு:-0775804735

(22766) (2-7-6)

## தவறிவிட்டது

நாவாந்துறை கடற்கரை வீதி, யாழ். வைத்திய சாலை, சிறைச்சாலை, பிரதான வீதிக்கு இடையில் அடகுப் பத்திரமும் பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

(22776)(9.14) *தொடர்பு-0779659399*

## தளபாடங்கள் மலிவு விற்பனை

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள நிறுவனத்தில் Food City க்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

9.00 am - 4.00 pm வரை நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-0779546485, 0774128114

(22761) (2-7-6)

## ✚ கால்களை பராமரியுங்கள்

லாவா வைத்தியசாலை

Tel :021-2224333



கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!

கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.

**Foot Care Centre**
**Lava Hospitals**

LH Your Health Our Priority

No 75,temple road.Jaffna

(சி/2901)

## மணமகள்கள் தேவை

பிறப்பு:
1963. இந்து கௌரவகுடும்பம்.
நட்சத்திரம்: புனர்பூசம்.
உயரம் 5' - 6''
கி.பாவம் - 15. நகைக்கடை உண்டு.

பிறப்பு:
1968. இந்து கௌரவகுடும்பம். நட்சத்திரம்: அச்சுவினி. 4 ஆம் பாதம். கி.பாவம் - 13.
உயரம் 5' - 9''
கனடா P.R உள்ள வந்திருக்கும்.

பிறப்பு:
1980. இந்து கௌரவகுடும்பம்.
நட்சத்திரம்: பூரம். கி.பாவம் - 115 லக் செவ்வாய்.
உயரம் 5' - 4''
பிரான்ஸ் P.R உள்ள.

பிறப்பு:
1967. இந்து கௌரவகுடும்பம்.
நட்சத்திரம்: கேட்டை. 3 ஆம் பாதம். கி.பாவம் - 27. உயரம் 5' - 7''
அரச திணைக்களத்தில் வேலை உள்ள மனைவி இறந்த மணமகனுக்கு.

சகல தொடர்புகளுக்கும்
த.திருச்செல்வம்.
[illegible]
[illegible]
0776213832

(சி/3301) (2-7-6)

## கண்ணீர் அஞ்சலி

யா/நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியைகளான திருமதி யூட் யோகராசா கிருசாந்தி யின் அன்புத்தந்தையும், திருமதி பா. அமலதாஸினுடைய அன்பு மாமனாருமாகிய

### மடுத்தீன் இராசநாயகம்

**(11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)**

அவர்கள் கடந்த (09.09.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி

(22777)(8.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
திரு.வ.கணேசலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் க.வல்லிபுரம்
அவர்களின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் கழகம்*
*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி*

(22775) (15-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி அருட்செல்வி யோகேஸ்வரன்

அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**நல்லதம்பி சிவசுப்பிரமணியம்**

அவர்கள் காலமாகிய செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தோம்.அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.வித்தியாலயம்,
காரைநகர்.

(இ/3196) (2-6-7)

## மரண அறிவித்தல்

### *நல்லதம்பி சிவசுப்பிரமணியம்*



காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவசுப்பிரமணியம் (செட்டி மணியம்) நேற்று முன்தினம் (09.09. 2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னாச்சிப்பிள்ளை (தபால் திணைக்களம், மலேசியா), தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- அன்னம்மா (ஆசிரியர், வைத்தியர்) தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பாலசௌந்தரியின் அன்புக் கணவரும், அருட்குமரன் (லண்டன்), அருட்செல்வி (ஆசிரியை, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அருட்சோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி (லண்டன்), யோகேஸ்வரன் (மொபிற்றல் டிலேஸ், யாழ்ப்பாணம்), கிருஸ்ணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சந்தோஷ், சருஷன், மயூரி (லண்டன்), கிசால்வன், தேசிகன், சுஜீவன், கார்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரனும், ஞானம்பிகை, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விஸ்வேஸ்வரன் (நீர்ப்பாசனத்திணைக்களம்) மகேஸ்வரி மற்றும் அம்பிகை பாகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2012) செவ்வாய் காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பயிரிக்கூடல், தகவல்:
காரைநகர். (22771) (45.6.7) பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளத்தில் கொடூரத் தாக்குதல்





## குழந்தை துடிதுடித்துச் சாவு

கூடங்குளத்தில் அணு உலை மையம் அமைவதைக் கண்டித்து பொது மக்கள் நடத்திய ஜனநாயகப் போராட்டத்தின் மீது பொலிஸாரும், அதிரடிப் படையினரும் நடத்திய கண்மூடித் தனமான தாக்குதலில் ஏராளமானோர் படுகாயமடைந்தனர். மூன்று வயதுக் குழந்தை ஒன்று பொலிஸாரின் தாக்குதலில் சிக்கி உயிரிழந்துள்ளது. இதே வேளை கூடங்குள ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய சு.ப. உதயகுமார் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், எனினும் அதிலிருந்து மயிரிழையில் தப்பிய உதயகுமாரும் வேறு சிலரும் படகுகள் மூலம் தப்பித்துச் சென்று விட்டனர் என்றும் தெரியவருகிறது. (ங)







## தமிழ் மக்களின் உணர்வே எனக்குக் கிடைத்த வெற்றி

### கலையரசன் தெரிவிப்பு



நான் மக்களுக்காகப் பாடுபடுவதற்கும் கட்சியைக் கட்டிக்காப்பதற்கும் என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

எருவில்,செப்.11

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் தேர்தல்மூலம் வெளிப்படுத்தியதன் காரணமாகவே எனக்குப் பெரு வெற்றி கிடைத்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்டு அதிகப்படியான விருப்பு வாக்குகளினால் வெற்றியீட்டிய தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட த.கலையரசன் தெரிவித்தார்.

தமது ஆதரவாளர்களுடன் வெற்றிக்களிப்பில் ஈடுபட்டிருந்த வேளையில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தமுறை கிழக்கு மாகாணசபையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும் என்னும் நோக்கிலே எமது தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்றன. அந்தவகையிலே எமதுகட்சி 11ஆசனங்களைப்பெற்று இரண்டாவது பெருங்கட்சியாக கிழக்குமாகாணத்தில் இடம்பிடித்திருக்கின்றது.

அடுத்து வரும் நாள்களில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றி எமது தலைமை முடிவெடுக்கும். அதற்குக் கட்டுப்பட்டவனாய் நான் மக்களுக்காகப் பாடுபடுவதற்கும் கட்சியைக் கட்டிக்காப்பதற்கும் என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

எமது மக்கள் அன்றிலிருந்து இன்றுவரைக்கும்தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டவர்கள் என்பதை இந்தத் தேர்தலிலும் காட்டியிருக்கின்றார்கள். -என்றார்.

(ச-31)

# தமிழரும் முஸ்லிம்களும் கிழக்கில் ஆட்சி புரிவோம்

## அந்த நல்ல செய்திக்காக காத்திருக்கிறோம் என்கிறார் அரச பொது ஊழியர் சங்கத் தலைவர்

அம்பாறை , செப்.11

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அரசுக்கு எதிரான திடமான செய்தியையே வெளிப்படுத்தியுள்ளனர். எனவே தமிழர், முஸ்லிம்கள் இணைந்த ஆட்சி கிழக்கில் மலரத்தக்கதாக முஸ்லிம் காங்கிரஸின் முடிவு அமையவேண்டும் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின்படி அரசுக்கு எதிரான திடமான செய்தி ஒன்றை தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

### ஆரம்ப கட்டத்தில்

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் ஆரம்ப கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்தே போட்டியிடுவது என்று முடிவெடுத்த போது, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் மௌனப்புரட்சி ஒன்று ஏற்பட்டதுடன், அரசுடன் சேர்ந்து போட்டியிடக்கூடாதெனப் பெரும்பாலான கிழக்கு முஸ்லிம் மக்கள் கிளர்ந்தெழுந்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர், கொந்தளித்தனர்.

இந்தநிலையில் மக்களின் மன ஆதங்கங்களைப்புரிந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கத்தக்க வகையில் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்துக் களமிறங்கியது.

இந்த முடிவை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் மக்கள், ஒரு போதும் தமிழருக் கெதிராக முஸ்லிம்கள் செயற்படக்கூடாது, இழைக்கப்படும் அரசஅநீதிகள் இரு சமூகத்துக்கும் ஒரேவகையிலேயே உள்ளதால் ஒரே பாதையில் பயணிக்க வேண்டும் என்று எழுச்சிப் பிரவாகத்துடன் தேர்தல் களத்தைச் சந்தித்தனர்.

அவர்களது இந்த உணர்வலைகளுக்கு ஆதரவளிக்கும், உற்சாகமளிக்கும் வகையிலேயே முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசார மேடைகளில் முழக்கங்கள் முழங்கின.

இந்த வகையில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை கொண்டு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸ் பெருவெற்றியடையவும், கிழக்குமாகாணசபை ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழவும் வழிவகுத்துள்ளனர்.

### தீர்மானிக்கும் சக்தி

எனவே இன்று கிழக்கு மாகாண சபை ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கேற்பவும், அதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் நல்லுறவு மேலும் வலுப்பெறும் வண்ணமும் இதற்கான முடிவை எடுக்க வேண்டிய நிலையுள்ளது.

இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் புரிந்துணர்வுடனான பேச்சுக்களை நடத்துவதுடன், தமிழ், முஸ்லிம்கள் இணைந்த ஆட்சி இம்முறை மலரத்தக்கதாக முஸ்லிம் காங்கிரஸின் முடிவு அமைய வேண்டும்.

இதுவே தமிழ், முஸ்லிம் மக்களதும், புத்திஜீவிகள், அரசியல் முக்கியஸ்தர்கள் மற்றும் ஏனையோரதும் எதிர்பார்ப்பாகும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது வேலணை ஐயனார்



விருந்தினரிடம் வெற்றிக்கிண்ணத்தைப் பெறும் ஐயனார் அணித் தலைவர்.

விளையாட்டுத்துறை அமைச்சு, இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், வடமாகாண விளையாட்டுத் துறை ஆகியவற்றின் ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான செயற்திட்டத்தின் முதற்கட்டமாக வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 21 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்ட போட்டி கடந்த சனிக்கிழமை வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்தச் சுற்றுத் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்தஆட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் அற்புதமான திறனை வெளிப்படுத்தியது. சொந்த மைதானத்தில் விளையாடியமை அந்த அணிக்கு பலமாக அமைந்தது. எனவே ஆட்ட நேர நிறைவில் ஐயனார் அணி 4:1 என்ற ரீதியில் நயினாதீவு அண்ணா அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் ஆரம்பம் முதலே அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கையே போட்டியில் ஓங்கி நின்றது. நசரேத் அணி எதுவித கோல்களையும் அடிக்க முடியாதபடி ஆடிய பிலிப்ஸ் வீரர்கள், சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தமது அணி சார்பாக கோல்களை அடிக்கத் தவறவில்லை. இதனால் சென்.பிலிப்ஸ் அணி 3:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

இறுதியாட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

பரபரப்பான இறுதியாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் 2 : 1 என்ற கோல் கணக்கில், சென். பிலிப்ஸ் அணியை வீழ்த்தி வெற்றிக் கேடயத்தினைத் தனதாக்கிக் கொண்டது.

இந்தப் போட்டிக்கு விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், வேலணை பிரதேசசெயலககிராம சேவை உத்தியோகத்தர்களான சோ.பத்மரூபன், எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தப் போட்டியில் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்யும் பணியில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பா.முகுந்தன், வேலணை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.யசிதரன், வேலணை பிரதேச பதில் விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன், ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்கண்ணா, வேலணைப் பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர் தி.கோகுலரூபன், வேலணைப் பிரதேச உதைபந்தாட்ட வீரர்களான மு.சிவநேசன் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் ஈடுபட்டனர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணிக்கு**

நவஜீவன் விளையாட்டுக்கழகம் எதிர் வல்வை விளையாட்டுக் கழகம்

**பி.ப. 4.30 மணிக்கு**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் கலட்டி விளையாட்டுக் கழகம்

* * *

இளவாலை சென்.லூட்ஸ் வி.க. நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணிக்கு**

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

**பி.ப. 4.30 மணிக்கு**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

* * *

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 4 மணிக்கு**

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக்கழகம் (ங-23)

## நீக்கிலஸிடம் வீழ்ந்தது ரெட்றேஞ்சர்ஸ் அணி

யாழ்.உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி வெற்றி பெற்றது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

### வளர்மதி 'பி' பிரிவு வெற்றிக்கிண்ணம்

## அச்சுவேலி ஸ்ரார் அசத்தல்

பண்டத்தரிப்பு, செப். 11

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி சனசமூக நிலையமும், வளர்மதி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணியும் மோதிக் கொண்டன. போட்டியின் ஆரம்பத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முன்னிலை பெற்றிருந்தாலும் போட்டியின் இறுதியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆதிக்கம் செலுத்தி வெற்றியீட்டியது.

விறுவிறுப்பாக தொடங்கிய போட்டியின் முதலாவது சுற்று 29:27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இந்து இளைஞர்வசமானது. எனினும் இரண்டாவது சுற்றில் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் சுற்றைக் கைப்பற்றிக்கொண்டது.

எனினும் மூன்றாம் சுற்றை இந்து இளைஞர் அணி 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி கொள்ள, ஆட்டத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டது.

ஆனால் நான்காம் சுற்றிலிருந்து போட்டியை தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்த ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் நான்காம் சுற்றை 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும், ஐந்தாவது சுற்றை 15:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் கைப்பற்றிக் கொண்டது. இதனால் 5 சுற்றுக்கள் கொண்ட இறுதிப் போட்டியில் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று "பி" பிரிவு அணிகளிடையே முதலிடம் பெற்றது. (ங-130)

### ஆனந்தரட்ணம் வெற்றிக்கிண்ண ஹொக்கி

## யூனியன், உடுவில் மகளிர் சம்பியனாகின



யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனிடம் வெற்றிக்கிண்ணத்தைப் பெறும்

யூனியன் கல்லூரி அணித்தலைவர்

உடுவில் மகளிர் கல்லூரி அணித்தலைவி



**ஆண்கள் பிரிவில் யூனியன் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டன.**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை நடத்திய ஆனந்தரட்ணம் ஞபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கிச் சுற்றுத் தொடரின் ஆண்கள் பிரிவில் யூனியன் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டன.

முதலாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர நிறைவு வரை எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

இதில் யூனியன் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இந்தப் போட்டியிலும் கடைசிவரை இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.


பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி களமிறங்கியது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி ஆனந்தரட்ணம் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கனகரட்ண மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 'பி' அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனினும் சமநிலை தவிர்ப்பு வாய்ப்பு நேரத்தில் சிறப்பாக ஆடிய கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுவராஜிடம் அதிகம் எதிர்பார்க்க வேண்டாம்

**புற்றுநோயில் இருந்து குணமடைந்து மீண்டும் இந்திய அணிக்கு திரும்பியுள்ள யுவராஜ் சிங்கின் மீது அதிக எதிர்பார்ப்பு வைக்க வேண்டாம் என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று 0-2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான 2 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரில் கலந்து கொள்ள உள்ளது. இதில் முதல் 'ரி-20' ஆட்டம் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. இந்த ஆட்டத்துக்கான இந்திய அணியில் புற்றுநோயில் இருந்து குணமாகியுள்ள சகலதுறை வீரர் யுவராஜ் சிங், சேர்க்கப்பட்டுள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர் மீண்டும சர்வதேச போட்டியில் விளையாட உள்ளார். எனவே அவர் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் அவர் மீது அதிக எதிர்பார்ப்பு வைக்க வேண்டாம் என்று அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய அணியில் யுவராஜ் சிங்கிற்கு மீண்டும் வாய்ப்பு கிடைத்திருப்பது குறித்து உலகமெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் அவர் மீதான அதிக எதிர்பார்ப்புக் காரணமாக, அவருக்கு மனஅழுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவரை சாதாரணமாக விளையாட ரசிகர்கள் அனுமதிக்க வேண்டும். எனவே யுவராஜ் சிங்கின் மீது அதிக எதிர்பார்ப்பு வைக்க வேண்டாம்.

புற்றுநோயில் இருந்து மீண்டுவந்துள்ள அவர் உறுதியான மனநிலையுடன் உள்ளார். யுவராஜ் சிங் கடந்த காலத்தை போல கிரிக்கெட் போட்டியில் ரசித்து ஆட வாய்ப்பு வழங்க வேண்டும். இந்திய வீரர்களின் பயிற்சியின் போது யுவராஜ் சிங் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார். அவர் வழக்கம் போல சிரித்து பேசி வருவதால், தான் கடந்து வந்த நெருக்கடியான பாதைகளை அவர் நினைவில் கொள்வதில்லை என்பது தெரிகிறது என்றார். (5)

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

## 'ரி-20' உலகக் கிண்ணம் நடுவர்கள் அறிவிப்பு

இலங்கையில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான நடுவர்கள், போட்டி மத்தியஸ்தர்களின் விவரங்களை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள நடுவர்களுக்கான பட்டியலில் இலங்கையின் குமார் தர்மசேன இடம்பெற்றுள்ளதுடன், போட்டி மத்தியஸ்தர்களுக்கான பட்டியலில் இலங்கையின் ரஞ்சன் மடுகல்ல, கிரேம் லாபுரூய் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நடுவர்களாக பில்லி பௌடன், அலீம் தார், ஸ்டீவ் டேவிஸ், குமார் தர்மசேன, மராயஸ் எராஸ்மஸ், இயன் கூல்ட், ரொனி ஹில், ரிச்சாட் கெற்றல்புரோ, நைஜல் லோங், அசத் ரௌப், சைமன் ரௌபல், ரொட் ரக்கர், புரூஸ் ஒக்ஸன் போர்ட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தொடருக்கான போட்டி மத்தியஸ்தர்களாக ரஞ்சன் மடுகல்ல, கிரேம் லாபுரூய் ஆகியோரோடு நியூசிலாந்தைச் சேர்ந்த ஜெப் குரோவும் நியமிக்கப்பட்டுள்ளார். இதில் கிரேம் லாபுரூய் ஆண்களுக்கான இரண்டு போட்டியில் மாத்திரம் போட்டி மத்தியஸ்தராகப் பங்குபற்றவுள்ளார்.

ரஞ்சன் மடுகல்ல ஏற்கனவே 2007, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற உலக 'ரி-20' தொடர்களில் போட்டி மத்தியஸ்தராகப் பணியாற்றியுள்ளார். ஜெப் குரோ இதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டுக்கான தொடரில் போட்டி மத்தியஸ்தராகப் பணியாற்றியிருந்தார். (5)

# ஐ.பி.எல். தலைமை சவாலானது



இந்திய அணியை வழிநடத்துவதை விட, ஐ.பி.எல். தொடரில் அணித் தலைவராக செயற்படுவது சவாலான விடயம், என்று இந்திய முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வெற்றித் தலைவராக ஜொலித்தவர் கொல்கத்தாவை சேர்ந்த கங்குலி (வயது - 40). ஓய்வுக்குப் பின்னர் ஐ.பி.எல். தொடரில் விளையாடி வரும் இவர், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் மற்றும் புனே வாரியர்ஸ் அணிகளுக்காக தலைவராக செயல்பட்டுள்ளார்.

அணித் தலைமை அனுபவம் குறித்து கங்குலி கூறியதாவது:

இந்திய அணியை வழிநடத்துவதற்கும், ஐ.பி.எல். தொடரில் அணித்தலைவராக செயல்படுவதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இந்திய அணிக்கு தலைவராக இருப்பது எளிதான காரியம். ஆனால் ஐ.பி.எல். போட்டியில் தலைவராக இருப்பது சவாலான விடயம்.

ஐ.பி.எல். போட்டியில் அணி உரிமையாளர்களின் நெருக்கடி அதிகமாக இருக்கும். ஒவ்வொரு போட்டிக்கும் முன் மற்றும் போட்டி முடிந்த பின் அவர்களுக்கு நிறைய பதில் கூற வேண்டி இருக்கும். இதற்காக இரண்டு முறை எனது கைத் தொலைபேசியை நிறுத்தியே வைத்து விட்டேன். ஆனால் இந்திய அணியின் தலைவராக இருந்த காலகட்டத்தில், கிரிக்கெட் சபை மற்றும் தேர்வுக்குழுவினரிடம் இருந்து எவ்வித அழைப்பும் வரவில்லை. ஆடுகளத்தில் எந்த முடிவையும் சுதந்திரமாக எடுக்க முடியும்.


ஐ.பி.எல். போட்டியின் வரவால், முதல் தர போட்டியில் விளையாடும் இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இந்தத் தொடரின் மூலம் இளம் வீரர்களுக்கு பணம் மட்டுமல்லமால், எதிர் கால பாதுகாப்பும் கிடைக்கிறது. ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் ரூ. 400 மட்டுமே பெறுகின்றனர்.

எதிர்வரும் காலத்தில் இந்திய டெஸ்ட் அணியை தேர்வு செய்யும் வாய்ப்பு கிடைத்தால், ரஞ்சிக் கிண்ணத் தொடரில் வீரர்களின் திறமையை அடிப்படையாகக் கொண்டு அணியைத் தேர்வு செய்வேன். ஏனெனில் டெஸ்ட் போட்டிக்கு ரஞ்சிக் கிண்ணம் முன் உதாரணமாக விளங்குகிறது - என்றார். (5)

# எங்கும் வெல்வோம்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரில் எவ்வாறான ஆடுகளங்கள் கிடைக்கப்பெற்றாலும் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்களால் சாதிக்க முடியும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

உப கண்ட ஆடுகளங்கள் பொதுவாக சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமாகக் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், தங்களுடைய 15 பேர் கொண்ட அணியில் எவ்வாறான சூழ்நிலைகளுக்குமேற்றவாறு பந்துவீசக்கூடிய பந்துவீச்சாளர்கள் காணப்படுகிறார்கள் எனத் தெரிவித்த ஒற்றிஸ் கிப்ஸன், ஆடுகளங்கள் வழங்கும் சவால்களுக்குத் தங்கள் அணி தயாராகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.



மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இரண்டு பிரதான சுழற்பந்து வீச்சாளர்களான சுனில் நரைன் மற்றும் சாமுவேல் பத்ரி ஆகியோர் மட்டும் காணப்படுகின்ற போதிலும், மார்லன் சாமுவேல்ஸ், கிறிஸ் கெய்ல் ஆகியோரின் சுழற்பந்து வீச்சும் தங்களுக்குக் கைகொடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.ஒரு குறித்த ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சு சிறப்பாகச் செயற்படும் என்று அணித்தலைவர் கருதினால் அவர் கிறிஸ் கெய்லின் உதவியை நாடலாம் எனவும், அவர் 'ரி-20' போட்டியில் மிகச்சிறப்பாகச் செயற்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

சுழற்பந்துவீச்சுத் தவிர, மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்திலும் நம்பிக்கை வெளியிட்ட அவர், பிடல் எட்வேர்ட்ஸ், ரவி ராம்போல், டுவைன் பிராவோ, அன்ட்ரே ரசல் ஆகியோரின் வேகப்பந்து வீச்சுக்கள் தங்களது அணிக்கு உதவும் எனவும், டுவைன் ஸ்மித்தின் மிதவேகப்பந்துவீச்சும் தங்கள் அணிக்கு உதவும் எனவும் தெரிவித்தார்.தங்களது அணியில் மிகுந்த திறமையுடைய சுழற்பந்துவீச்சும், வேகப்பந்து வீச்சும் காணப்படுவதாகவும், எனவே எந்தவிதமான ஆடுகளங்கள் காணப்பட்டாலும், எந்தவிதமான மைதான நிலை காணப்பட்டாலும் தங்களால் சிறப்பாகச் செயற்பட முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோகோவிச் -முர்ரே இறுதியில் மோதல்

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு இறுதிக்கு இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே, சேர்பியாவின் ஜொகோவிச் முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமெரிக்க பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கின்றது.

இதில் முன்னதாக ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, செக்குடியரசின் தோமஸ் பெர்டிக்கை சந்தித்தார். அதில் அன்டி முர்ரே வெற்றியைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து கடந்த 8 ஆம் திகதி நடந்த இரண்டாவது ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் நடப்புச் சம்பியன் ஜொகோவிச், ஸ்பெயினின் டேவிட் பெடரரை சந்தித்தார். முதல் செற்றில் பெடரர் 5-2 என்று முன்னிலை வகித்த போது கனமழை காரணமாக, ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மீண்டும் ஆட்டம் தொடர்ந்தது. முதல் செற்றை பெடரர் 6-2 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜொகோவிச் அடுத்த இரண்டு செற்றை 6-1, 6-4 என்று தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். நான்காவது செற்றில் தொடர்ந்து அசத்திய ஜொகோவிச் 6-2 என்று கைப்பற்றினார்.

சுமார் 2 மணி நேரம் 32 நிமிடங்கள் வரை நடந்த இந்தப் போட்டியில் ஜொகோவிச் 2-6, 6-1, 6-4, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, நான்காவது முறையாக (2007, 2010-12) அமெரிக்க் பகிரங்க ரென்னிஸ் இறுதிக்கு முன்னேறினார். முன்னதாக 2007, 2010 இல் இறுதி வரை முன்னேறிய ஜொகோவிச், கடந்த ஆண்டு முதன்முறையாக அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் பட்டம் வென்றார்.

இறுதியாட்டத்தில் ஜொகோவிச், இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரேவை எதிர் கொள்கிறார். (5)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

Honda CD 200 மோட்டார் சைக்கிள் புத்தம்புதிய நிலையில் விற்பனைக்குண்டு.
XB - xxxx, wy xxxx
தொடர்பு: 077 7311691, 077 6213887
(22780)(8.14)


## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் அமிர்தலிங்கம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல 118/1, உதயநகர் மேற்கு கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அமிர்தலிங்கம் (ஆசாரி மூர்த்தி) 08.09.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் (ஆசாரி சின்னத்தம்பி கற்பகம் ஆகியோரின் பாசமிகு மகனும் சின்னையா சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மருமகனும் சாந்தலட்சுமியின் அன்புக்கணவரும் துதிலட்சுமி (சறோ), மகேந்திரகுமார் (மகேஸ்வரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவதாஸ் (பிரான்ஸ்) கிருசா, கிசியந்தி, கிருசாந்தினி, தவஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகுமார், சோதீசன், உசா ஆகியோரின் மாமனும் கனகரத்தினம், அன்னலட்சுமி, மனோகரன் (டென்மார்க்), புஸ்பராணி, புனிதராசன் (ஜேர்மனி), வரதராசன் (ஜேர்மன்), சுந்தரலிங்கம், ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தேவராணி மற்றும் மருதலிங்கம் காலஞ்சென்ற யோகராசா மற்றும் வவா, றஞ்சி, பிரதீபா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் பாவேந்தன், பாகீசன், பிரியங்கா, கோநிலா, கோபிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.09.2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.118/1 உதய நகர் மேற்கு,
கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்.

(22785) (15-14)


அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 11 : 14.09.2012 } காலை
பிரிவு 111 : 15.09.2012 } 10.00 மணி

இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Kingston Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.

மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831
(சி/3194)

PHYSICS -M .ஸ்பெல்மன்

*A/L -2013
*புலங்கள்
ஆரம்பம்
12.09.2012
புதன் 6.00 p.m

*DAY CLASS
*பொறியியல்
ஆரம்பம் 12.09.2012 புதன் 5.00 p.m (முழுப் பாடத்திட்டமும் வினா விடையும் முழுமையாக கற்பிக்கப்படும்.
(22744)(9.14)

18, மத்திரூஸ் வீதி, யாழ்ப்பாணம் பெரிய கோவில் அருகாமை.

**பாமசிஸ்ற் தேவை**

நெல்லியடியில்இயங்கும் பிரபல்யமான மருந்தகத்திற்கு பாமசிஸ்ற் மருந்தாளர் தேவை. முன்னனுபவம் உள்ளவர்களுக்கும், வடமராட்சிப் பகுதியில் வசிப்போருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0774656428, 077 3662910
(c/3193)(8.14)

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான SCCஇன் விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
10வது ஆண்டில்
இன்று இணையும் முதல் 25 மாணவர்களுக்கு 100% கட்டண கழிவு வழங்கப்படும்
இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சிநெறிகள்
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN WEB DESIGNING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN ENGLISH



New Batches Start On Batch II :- 12,15.09.2012, Batch III :-17.09.2012
குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள்
Softview Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P: 021 2225170

**யாழ் நகரில்**
உயர்தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி
**இலவச கருத்தரங்கு**
(யாருக்கு: உயர்தர மாணவர்களுக்கும் பெற்றோருக்கும்)
இடம்: யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12-09-2012
நேரம்: 30நிமிட கற்கைநெறி அறிமுகம்
மு.ப.10.30 முதல் பி.ப 5.00 வரை நடைபெறும்

ACCA
Association of Chartered Certified Accountants-UK
+
UK Degree
BSc(Hons) in Applied Accounting (Oxford Brookes University) UK

@ K-AIMS
We Make You Progress Everyday..
ALP STUDENT TUITION ACCA GOLD 1/4/2012-31/3/2013
(22661)
077 2 555 814
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
No. 35-1/1, Upatissa Road, Colombo-4

பெற்றோர்கள், மாணவர்களுக்கு . . . .

உயர் தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012
ACCA[Association of Chartered Certified Accountants (UK)]
நிறுவனம் தனது அங்கீகரிக்கப்பட்ட வடக்கின் ஒரேயொரு கல்வி வழங்குனரான K-AIMS உடன் இணைந்து நடாத்தும் உயர்தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012

பிரதம விருந்தினர் :T . VELNAMBY அவர்கள்
[பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ் பல்கலைகழகம்]
திகதி : செப்டம்பர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமை
நேரம் : காலை 10 .30 மணிக்கு
இடம் : யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

இலங்கையை பொறுத்தவரையில் பல்கலைக்கழக தெரிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டதுடன் இன்றைய நவீன உலகில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு பட்டப்படிப்பு மாத்திரமல்லாது , தொழில் சார் கல்வியும் [Professional Qualification] இன்றிஅமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இது சம்பந்தமான விடயங்கள் பேராசிரியர் வேல்நம்பி அவர்களாலும் ACCA பிரதிநிதிகளினாலும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தருணம் உயர்தர மாணவர்களின் பங்களிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை திட்டமிட உதவிபுரியும். இந்நிகழ்விற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்களை அழைக்கின்றோம்.

நன்றி

K-AIMS
We Make You Progress Everyday..
NO : 3 , 2/1 , Sirambiyadi Lane
Jaffna
TP : 0772 555 814
E-Mail : kumanan@k-aims.com
(22661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.